# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## Directorate of Distance and Continuing Education

## இலக்கணம் - நன்னூல் - சொல்லதிகாரம்

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
## திருநெல்வேலி

## MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
## TIRUNELVELI

### தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

### Directorate of Distance and Continuing Education

# இலக்கணம் - நன்னூல் - சொல்லதிகாரம்

**முனைவர். ஜோ.பென்னி**

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

தெ. தி. இந்துக்கல்லூரி

நாகர்கோவில்.

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி
## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்


| பாட எண் | பாடங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | சொல்லின் வகைகள், பெயர்ச்சொல்<br>ஆகுபெயர் | 1 - 47 |
| 2 | வேற்றுமை - வகைகள்<br>தெரிநிலை, குறிப்பு வினைகள் | 48 - 89 |
| 3 | எச்சங்கள், தொகைநிலை - தொகாநிலைத் தொடர்கள் | 90 - 118 |
| 4 | வழாநிலை, வழுவமைதி, பொருள்கோள் | 119 - 154 |
| 5 | இடைச்சொல், உரிச்சொல் | 155 - 180 |

# இளங்கலை – தமிழ் - பாடத்திட்டம்

## பருவம் - இரண்டு

## இலக்கணம் - நன்னூல் - சொல்லதிகாரம்

**நோக்கம்**

1. தெளிவாக தமிழில் பேசவும் எழுதவும் பயிற்சி அளித்தல்
2. மொழியின் பொதுத்தன்மைகளையும் சிறப்புத்தன்மைகளையும் அறிந்து கொள்ளல்.
3. மொழிநூல் அறிவோடு தமிழ்ச்சொல் அமைப்புகளைப் பயன்படுத்தும் முறைகளைத் தெரிந்து கொள்ள உதவுதல்.

**இயல் : 1**

**பெயரியல் :** சொல்லின் பொது இலக்கணம் - மூவகை மொழிகள் - இருதிணைகள் - மூவிடங்கள் - வழக்கு - செய்யுள் - சொல்லின் வகைகள் - பெயர்ச்சொல் - உயர்திணைப் பெயர்கள் - அ.ஃறிணைப் பெயர்கள் - இருதிணைப் பொதுப்பெயர்கள் - ஆகுபெயர்.

**இயல் : 2**

வேற்றுமையியல் : வேற்றுமை - பெயர் வேற்றுமை - இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை - வேற்றுமைகளுக்குரிய உறுப்புகள்

**வினையியல் :** வினைச்சொல் - தெரிநிலை, குறிப்புநிலை வினைச்சொற்கள் - வினைமுற்று - தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு - ஐம்பால் வினைமுற்றுகள் - இருதிணைப் பொதுவினை - தன்மை, முன்னிலை வினைமுற்றுகள் - வியங்கோள் வினைமுற்று – குறிப்பு வினைமுற்று.

**இயல் : 3**

பெயரெச்சம் - வினையெச்சம் - வினையெச்ச வகைபாடுகள் - வினைக்குறிப்பு - செய்யும் என்னும் வினைமுற்று.

**பொதுவியல்** - ஒன்றொழி பொதுச்சொல் - இடைப்பிறவரல் - எச்சங்களின் முடிவு - தொடர்மொழிகள் - தொகைநிலைத் தொடர்மொழிகள்- தொகாநிலைத் தொடர்மொழிகள் அவற்றின் விளக்கங்கள்.

இயல் : 4

**பொதுவியல் :** வழு - வழுவமைதி - வகைகள் - காலம் - காலவழுவமைதி - அறுவகை வினா - எண் வகை விடைகள் - மரபு வழாநிலை - மரபு வழுவமைதிகள் - இயற்பெயர்

வருமிடம் - அடுக்குத்தொடர் - வழக்குகள் - மரபு வழுவாமல் காத்தலும் மரபு வழுவமைதியும் - பொருள்கோள் - வகைகள் (ஆற்றுநீர் பொருள்கோள் முதல் அடிமறிமாற்றுப் பொருள்கோள் வரை)

**இயல் : 5**

**இடையியல் :** இடைச்சொல்லின் பொது இலக்கணம் - இடைச்சொல்லின் பொருள்கள் - ஏகார, ஓகார, என, என்று ஆகிய இடைச்சொற்கள் - உம்மை, எண்ணிடை, தில், மன், மற்று மற்றையது போன்றவை - கொல், ஒடு, தெய்ய, அம்ம, வியங்கோள் போன்றவை

**உரியியல் :** உரிச்சொல்லின் பொது இலக்கணம் - உயிர்ப்பொருள் - ஓரறிவு முதல் உயிரில்லாப் பொருள் - உயிர் மற்று உயிரல் பொருள்களின் குணப்பண்புகள் - ஒருகுணம் தழுவிய உரிச்சொற்கள் - பலகுணம் தழுவிய உரிச்சொற்கள்

**பாடநூல்**

நன்னூல் - சொல்லதிகாரம் - கழக வெளியீடு, சென்னை.

**பார்வை நூல்**

1. ச. ஈஸ்வரன், (உ.ஆ) நன்னூல் - சொல்லதிகாரம் (காண்டிகை உரை), பாவை பதிப்பகம், சென்னை.
2. சோம. இளவரசு (உ.ஆ) நன்னூல் - சொல்லதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

**குறிப்பு :**

சரியான விடையைத் தேர்வு செய்யும் வினா பாடநூலிலிருந்து மட்டும் கேட்கப்பட வேண்டும்.

‘‘இலக்கணம் - நன்னூல் - சொல்லதிகாரம்’’ என்னும் பாடத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் பாடநூலை முன்வைத்து மற்றும் பார்வை நூல்களிலிருந்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

# இயல் - 1

# பெயரியல்

எழுத்துக்களால் அமைவது சொல். அச்சொல் பற்றிய இலக்கணங்களை விரிவாகக் கூறும் அதிகாரம் சொல்லதிகாரமாகும். இதில் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து இயல்கள் இடம்பெற்றுள்ளன.

பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை விளக்கும் இயல் பெயரியலாகும். இவ்வியலின் தொடக்கத்தில் சொல்லின் பொது இலக்கணம் விவரிக்கப்படுகிறது. தொடர்ந்து பெயர்ச்சொல்லின் இயல்பும் வகைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

## சொல்லின் பொது இலக்கணம்

**ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே. (நன் - 259)**

- சொல் என்பது ஒரு மொழி, தொடர் மொழி, பொது மொழி என்னும் மூன்று வகைகளை உடையது.
- உயர்திணை, அ∴றிணை என்னும் இருதிணைகளையும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால்,பலவின்பால் என்னும் ஐந்து பால்களையும் விளக்குவது.
- அவற்றை மட்டுமின்றி தன்னையும் விளக்குவது.
- தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடங்களில் வருவது.
- வழக்குச் சொற்களாகவும் செய்யுள் சொற்களாகவும் அமைவது.
- வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருளை விளக்குவது. இவையே சொல்லின் பொது இலக்கணம் ஆகும்.

## மூவகை மொழிகள்

மொழி என்பது சொல் என்னும் பொருள் உணர்த்தும். இம்மொழி ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

**ஒருமொழி ஒருபொரு ளனவாம், தொடர்மொழி**
**பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. (நன் - 260)**

தனியொரு சொல்லாக நின்று ஒரு பொருளைத் தருவது ஒரு மொழியாகும். ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் உணர்த்தினால் அது தொடர் மொழியாகும். ஒரு சொல்லாக நின்று ஒரு பொருளையும், அதுவே தொடர் மொழியாகப் பிரிந்து நின்று பல பொருள்களையும் தருமாயின் பொது மொழி ஆகும்.

**எ.கா.**

1. ஒரு மொழி - பூ, மண், நிலம், நட, நடந்தான்
2. தொடர்மொழி - நிலம் வலிது, நிலத்தைக் கடந்தான், செந்தமிழ்
3. பொதுமொழி - தாமரை

தாமரை, வேங்கை - ஒரு வகை மலர் - ஒரு மொழி

தா + மரை - தாவுகின்ற மான் - தொடர்மொழி

வேங்கை - புலி, ஒரு வகை மரம் - ஒரு மொழி

வேம் + கை - வேகும் கை - தொடர்மொழி

## இருதிணை

திணை என்பது சொல் பகுப்பை உணர்த்தும். இது உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

**மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுஉயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை. (நன் 261)**

மக்கள் தேவர், நரகர் என்னும் மூவகையினரும் உயர்திணையாவர். இவர்கள் அல்லாத விலங்கு, பறவை, மரம் போன்ற உயிருள்ள பொருள்களும், மலை, நிலம் போன்ற உயிரற்ற பொருள்களும் அஃறிணையாகும்.

**எ.கா.**

**உயர்திணை**

அரசன், அமைச்சன் - மக்கள்

மும்மூர்த்திகள் - தேவர்

அரக்கர் - நரகர்

மக்களாகப் பிறந்தோர் புண்ணியத்தை மிகுதியாக செய்தால் தேவராகப் பிறப்பர். பாவம் மிகுதியானால் நரகராய் பிறப்பர். புண்ணிய, பாவ எண்ணத்திற்கு ஏற்பத் தேவராகவும், நரகராகவும் பிறப்பதாகிய காரியம் நடக்கும். இத்தகைய காரண,காரிய முறைப்படி மக்கள், தேவர், நரகர் என முறை வைக்கப்பட்டுள்ளது.

**அஃறிணை**

மீன் - உயிருள்ளது

மலை - உயிரற்றது

உயிரும் உடம்பும் சேர்ந்து நிற்கும் காலத்தில் மட்டுமே மக்கள், தேவர், நரகர் ஆகியோர் உயர்திணையாகக் கருதப்படுவர். உயிரும் உடலும் வேறாக நிற்கும் இடத்தில் உயிர் பொருளாகவும் உடம்பு உயிரற்று அஃறிணையிலும் அடங்கும். ஆனால் விலங்கு,

பறவை முதலியன  உயிரும் உடம்பும் கூடி இருக்கும் காலத்திலும் பிரியும் காலத்திலும் அஃறிணையாகவே கருதப்படும்.

இவ்வாறு உலகத்தில் உள்ள பொருள்களை உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைகளுக்குள் அடக்குவது தமிழ் மரபாக விளங்குகிறது.

**ஐம்பால்**

பால் என்பது இயல்பு அல்லது தன்மையைக் குறிக்கும். இது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

**ஆண்பெண் பலரென முப்பாற்று உயர்திணை.    (நன் - 262)**

ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்கு உரியவை ஆகும்.

ஆண்பால் - ஆண்களைக் குறிப்பது

**எ.கா.** முருகன், அரசன், அவன்

பெண்பால் - பெண்களைக் குறிப்பது

**எ.கா**. வள்ளி, அரசி, அவள்

பலர்பால் - ஆண்கள் பலரையும் பெண்கள் பலரையும் குறிப்பது

**எ.கா.** ஆடவர், பெண்டிர், அவர்

**ஒன்றே பலவென்று இருபாற்று அஃறிணை    (நன் - 263)**

ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரியவையாகும்.

ஒன்றன்பால் - ஒரு பொருளை மட்டும் குறிப்பது

**எ.கா.** மரம், நாய், அது

பலவின்பால் - பலவற்றையும் குறிப்பது

**எ.கா**. மரங்கள் நாய்கள், அவை

**திணை – 2**

**உயர்திணை** **பால் 5** **அஃறிணை**

**ஆண்பால்** **பெண்பால்** **பலர்பால்** **ஒன்றன்பால்** **பலவின்பால்**

## திணை பால்களுக்குப் புறனடை

**பெண்மைவிட்டு ஆண்அவா வுவபேடு ஆண்பால்**
**ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்**
**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும். (நன் - 264)**

ஆண் தன்மையும் பெண் தன்மையும் கலந்துள்ள பேடுகளை இந்த பால் என கூறுவது கடினம். ஆகவே பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுந்திருக்கும் பேடுகளை உயர்திணை ஆண்பால் எனவும், ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்திருக்கும் பேடுகளை உயர்திணைப் பெண்பால் எனவும் கருதவேண்டும். இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணையில் மட்டுமின்றி அஃறிணையிலும் வருவதுண்டு.

**எ.கா.**

அலி வந்தான் - ஆண்பால்
பேடி வந்தாள் - பெண்பால் } - உயர்திணை
அலி வந்தது, பேடி வந்தது - அஃறிணை

## மூவிடத்தும் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்

**படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்**
**பெறப்படும் திணைபால் அனைத்தும் ஏனை**
**இடத்துஅவற்று ஒருமைப் பன்மை பாலே. (நன் - 265)**

படர்க்கை வினைமுற்று, படர்க்கைப் பெயர் ஆகியன இருதிணைகளையும் ஐம்பால்களையும் உணர்த்தும். தன்மை வினைமுற்று, தன்மைப் பெயர், முன்னிலை வினைமுற்று, முன்னிலைப் பெயர் ஆகியன ஒருமைப்பால், பன்மைப் பால் இரண்டையும் உணர்த்தி வரும்.

**எ.கா.**

**படர்க்கை**

| | | |
|---|---|---|
| அவன் வந்தான் | - ஆண்பால் | உயர்திணை |
| அவள் வந்தாள் | - பெண்பால் | |
| அவர் வந்தார் | - பலர்பால் | |
| அது வந்தது | - ஒன்றன்பால் | அஃறிணை |
| அவை வந்தன | - பலவின்பால் | |

இச்சொற்கள் தம்மை உணர்த்தி இருதிணை, ஐம்பால் பொருள்களைத் தந்தன.

**தன்மை**

| | |
|---|---|
| யான் வந்தேன் | - ஒருமை |
| யாம் வந்தோம் | - பன்மை முன்னிலை |
| நீ வந்தாய் | - ஒருமை |
| நீர் வந்தீர் | - பன்மை |

இச்சொற்கள் தம்மை உணர்த்தியதோடு இருதிணை, ஐம்பாலுள் ஒருமை பன்மையை மட்டும் உணர்த்தி நின்றன.

## மூவிடம்

உரையாடும் இடத்துச் சொற்கள் பயின்றுவரும் பொருண்மையை விளக்குவது இடமாகும்.

**தன்மை முன்னிலை படர்க்கை விடனே. (நன் - 266)**

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடங்கள் மூன்றாகும்.

**எ.கா.**

தன்மை - யான் வந்தேன்
முன்னிலை - நீ வந்தாய்
படர்க்கை - அவன் வந்தான்

தன்னை அல்லது தம்மைக் குறிப்பது தன்மையாகும். தன் முன்னின்று கேட்பவரைக் குறிப்பது முன்னிலை. இவ்விரண்டும் ஒழிந்த அனைத்தையும் குறிப்பது படர்க்கையாகும். சொல்வோன் கேட்போனிடம் பிறந்தசொல் அவர்களிடத்தில் நில்லாது அயலானிடத்துப் படர்தலின் படர்க்கை எனப்பட்டதாகக் கூறுவர்.

இம்மூன்று இடங்களும் ஒருமை, பன்மையாகிய எண்ணிக்கையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

**எ.கா.**

தன்மை ஒருமை - நான், யான்
தன்மைப் பன்மை - நாம், எங்கள்
முன்னிலை ஒருமை - நீ
முன்னிலைப் பன்மை - நீவிர், நீங்கள்
படர்க்கை ஒருமை - அவன், அது
படர்க்கைப் பன்மை - ஆடவர், அவை

## வழக்கு

சொற்களை வழங்கும் முறையே வழக்காகும். மக்கள் பேசும் போது ஒரு முறையையும் எழுதும்போது ஒரு முறையையும் பின்பற்றுகின்றனர். தொன்று தொட்டு வரும் இம்முறையை இலக்கண நூல்கள் வழக்கு என்று குறிக்கின்றன. இது செய்யுளுக்குரிய வழக்கு, பேசுவதற்குரிய வழக்கு என இருவகைப்படும். அவ்விருவகை வழக்கும் இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்னும் இரண்டை அடியொற்றியே அமையும்.

**இலக்கண முடையது இலக்கணப் போலி**
**மரூஉ என்றாகும் மூவகை இயல்பும்**
**இடக்க ரடக்கல் மங்கலம் குழுஉக்குறி**
**எனுமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல். (நன் - 267)**

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என இயல்பு வழக்கு மூவகைப்படும். இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என தகுதி வழக்கு மூவகையாக அமைகிறது. இவ்வாறு வழக்கு ஆறு வகையாக பகுக்கப்படுகின்றன.

**இயல்பு வழக்கு**

ஒரு பொருளுக்கு எச்சொல் அமைந்ததோ அச்சொல்லாலேயே அப்பொருளை இயல்பாக வழங்குவது இயல்பு வழக்காகும்.இது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூவகையாக அமைகிறது.

**இலக்கணம் உடையது**

இலக்கண நெறி பிறழாமல் அனைவராலும் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் தொன்று தொட்டு வழங்கி வருவது.

**எ.கா.**

நிலம், நீர், தீ, காற்று, வானம்

**இலக்கணப்போலி**

இலக்கணமுடையது போல தோன்றினாலும் உண்மையில் இலக்கண நெறியிலிருந்து மாறி அமைவது. ஆனால் பொருள் மாறாமல் அமையும்.

**எ.கா.**

இல்முன், நகர்புறம், கோவில் என வருவதே இலக்கண நெறியாகும். ஆனால் இவை முறையே முன்றில், புறநகர், கோயில் என மாற்றி வழங்கப்படுவதைக் காணலாம். இவ்வாறு வருவதை இலக்கணப்போலி என்பர்.

**மரூஉ**

இயல்பாக வரும் சொற்களைத் தழுவி நிற்கும் சொற்கள் மரூஉ ஆகும். சொற்களில் சில எழுத்துக்கள் திரிந்தும் கெட்டும் வழங்குவதும், அவ்வப்போது இலக்கணம் சிதைந்து வருவதும் உண்டு.

**எகா.**

சோழநாடு - சோணாடு எனவும்
தஞ்சாவூர் - தஞ்சை எனவும்
இலக்கண நெறி சிதைந்து மருவி வந்துள்ளது.

**தகுதி வழக்கு**

ஒரு பொருளை அறிவதற்கு இயல்பாக அமைந்த சொல் உண்டு.ஆனால் அப்பொருளை அதற்குரிய சொல்லால் கூறுவது தகுதியன்று என விடுத்து, தகுதியான வேறொரு சொல்லால் குறிப்பிடுவது தகுதி வழக்காகும். இது பொருளின் தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதால் தகுதி வழக்கு என அழைக்கப்படுகிறது. தகுதி வழக்கானது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

**இடக்கர் அடக்கல்**

சபையில் கூறத்தகாத சொல்லை மறைத்து பண்பான வேறு சொல்லால் கூறுவது இடக்கர் அடக்கல் ஆகும். இடக்கான சொற்களை நீக்கி நல்ல சொற்களைப் பயன்படுத்துவதாகும்.

**எ.கா**

மலம் கழுவி வந்தான் என்னும் சொற்றொடரை கால் கழுவி வந்தான் என பண்பான சொற்களால் கூறுவதாகும்.

**மங்கலம்**

அமங்கலமான சொற்களுக்குப் பதிலாக மங்கலமான சொற்களைக் கூறுவது மங்கலம் ஆகும்.

**எ.கா.**

செத்தாரை துஞ்சினார் என்றல்.
விளக்கை அணை என்பதை விளக்கை வளர வை என்றல்.

இவ்வாறு வழங்குவது மங்கலமாகும்.

**குழூஉக்குறி**

எல்லோரும் அறிந்த ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் கூறாமல் ஒரு குழுவினர் அல்லது இனத்தவருக்கு மட்டுமே புரியும்படியான குறியீட்டுச் சொற்களால் வழங்குவது குழூஉக்குறி ஆகும்.

**எ.கா.**

| | |
|---|---|
| பறி | - பொற்கொல்லர் பொன்னை பறி என்றல். |
| சொல்விளம்பி | - வேடர் கள்ளை சொல்விளம்பி என்றல். |

**வழக்கு (6)**

- **இயல்பு வழக்கு**
  - **இலக்கணம் உடையது**
  - **இலக்கணம் போலி**
  - **மரூஉ**
- **தகுதி வழக்கு**
  - **இடக்கர் அடங்கல்**
  - **மங்கலம்**
  - **குழூஉக்குறி**

## செய்யுள் இன்னதென்பது

**பல்வகைத் தாதுவின் உயிர்க்குஉடல் போல்பல**
**சொல்லால் பொருட்குஇடன் ஆக உணர்வினின்**
**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள். (நன் - 268)**

உயிருக்கு இடமாக அமைகின்ற உடல் இரத்தம், தோல், தசை, நரம்பு, எலும்பு, மச்சை, நீர் ஆகிய ஏழு வகை தாதுக்களால் ஆனது. அவ்வாறே அறிவுடைய சான்றோர்களால் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கு வகைச் சொற்களைக் கொண்டு பொருளுக்கு இடமாக அழகுபெற இயற்றப்படுவன செய்யுளாகும்.

உயிருக்கு இடமாக இயற்றப்படுவது உடம்பு
பொருளுக்கு இடமாக இயற்றப்படுவது செய்யுள்

பொருள் - அகப்பொருள், புறப்பொருள்
அணி - சொல்லணி, பொருளணி

எழுத்து, சொல், பொருள், அணி என்னும் இந்நான்கினுள் நடப்பதே யாப்பாகும்.

## வெளிப்படை, குறிப்பு

சொற்கள் அனைத்தும் பொருள் தருவனவாக அமையும். அச்சொற்கள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தத்தமக்குரிய பொருள்களை உணர்த்தும். சொற்கள் இருதிணை, ஐம்பால் பொருள்களையும் மறைவின்றித் தெளிவாகக் காட்டுவது வெளிப்படை. சொல்லுவான் குறிப்பாலும் முன்னும் பின்னும் அமைந்திருக்கும் பிற சொற்களாலும் பொருள் உணர்த்தும் முறையே குறிப்பாகும். சொற்கள் பெரும்பான்மை வெளிப்படையாகவும் சிறுபான்மை குறிப்பாகவும் பொருள் உணர்த்தும்.

**ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி**
**ஆகு பெயர் அன்மொழி வினைக் குறிப்பே**
**முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்**
**குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை. (நன் - 269)**

1. இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றை ஒழிக்கும் பொதுச்சொல்
2. வலித்தல் முதலிய ஒன்பது விகாரச் சொல்
3. மூவகைத் தகுதி வழக்கு
4. ஆகுபெயர்
5. அன்மொழித்தொகை
6. குறிப்பு வினைச்சொல்
7. முதல்குறிப்புச் சொல்
8. தொகைக் குறிப்புச்சொல்
9. அவற்றையன்றிப் பல வழியாலும் வரும் குறிப்புச் சொற்களுடன் பிறவும் குறிப்பினால் பொருள் தருவனவாகும். இவை அல்லாதன எல்லாம் வெளிப்படையாய்ப் பொருளைத் தருவனவாகும்.

**ஒன்றொழி பொதுச்சொல்**

குறிப்பால் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலை உணர்த்தும் சொல் ஒன்றொழி பொதுச்சொல் ஆகும்.

**எ.கா.**

ஆயிரம் மக்கள் பொருதார் - இதில் போரிடுதல் என்பது ஆணுக்குரிய தொழில். எனவே மக்கள் என்னும் பொதுச்சொல் பெண்பாலை நீக்கிவிட்டு ஆண்பாலை குறிப்பால் உணர்த்துகிறது.

மாடுகள் பால் கரந்தன - என்பதில் பால் என்னும் குறிப்புச் சொல் ஆண்பாலை நீக்கி பெண் பாலை உணர்த்துகிறது.

**விகாரம்**

விகாரம் என்பது இயல்பிலிருந்து மாறி அமைந்து பொருள் மாறாமல் நிற்பதாகும்.

**எ.கா.**

மரைமலர் - இதில் தாமரை என்பது மரை என்று விகாரம் ஆகியுள்ளது. ஆனால் மலர் என்னும் பின்னொட்டால் தாமரை மலரை குறிப்பால் உணர்த்துகிறது.

**தகுதி**

நன் மக்களிடத்தில் சொல்லத் தகாத ஒன்றினைத் தகுதியான சொல்லால் குறித்துப் பொருள் உணர்த்துதல் தகுதி ஆகும்.

**எ.கா.**

கால் கழுவி வந்தான் என்பது மலம் கழுவி வந்ததை குறிப்பால் உணர்த்துகிறது.

**ஆகுபெயர்**

ஒன்றன் இயற் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும்.

**எ.கா.**

புளி தின்றான் - இதில் புளி என்பது புளிய மரத்தைக் குறிக்காமல் புளியம்பழத்தைக் குறிப்பால் காட்டியது.

**அன்மொழித்தொகை**

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடர்களுக்கும் புறத்தே நின்று, அவை அல்லாத பிற மொழிகள் மறைந்து வருவது அன்மொழித்தொகை ஆகும்.

**எ.கா.**

பொற்றொடி வந்தாள் - இதில் தொடி என்பது அதனை அணிந்த பெண்ணை குறிப்பால் தெரிவிக்கிறது.

**குறிப்பு வினைச்சொல்**

பெயர்ப் பொருளைக் குறிக்காமல் வினைக்குறிப்புப் பொருளை குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினைச்சொல் ஆகும்.

**எ.கா.**

சொலல்வல்லன் - என்பதில் வல்லன் என்னும் பெயர்ச்சொல் சொல்லுதலில் வல்லவன் என்னும் வினைக்குறிப்புப் பொருளைத் தந்தது.

**முதற்குறிப்பு**

ஆத்திச்சூடி கற்றான் என்பது ஆத்திச்சூடி என தொடங்கும் நூலைக்குறிப்பால் உணர்த்தியது.

**தொகைக் குறிப்பு**

தமிழ் வேந்தர் மூவர் - இதில் மூன்று என்னும் தொகை தமிழ்நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டியரைக் குறிப்பால் உணர்த்தியது.

**பல வகையாய் வரும் குறிப்புச் சொற்கள்**

1. கற்கறித்து நன்கு அட்டாய் - எனும் தொடருக்கு கல் கடித்தேன், நன்கு சமைத்து இருக்கிறாய் என்பது பொருள். இது சொல்லுபவர் குறிப்பினால் நன்கு சமைக்கவில்லை என்னும் பொருளை உணர்த்துகிறது.
2. பறவாக்குளவி - குளவி பறப்பது, இங்கு பறக்காத குளவி என்பதால் குறிப்பால் காட்டு மல்லிகையை உணர்த்துகிறது.

3. பாயா வேங்கை - வேங்கை புலி பாய்வது, பாயாததால் இது வேங்கை மரத்தை குறிப்பால் உணர்த்துகிறது.

**இன்னபிற என்றதால்**

1. தெரிநிலை குறிப்பு வினையாலணையும் பெயர்
2. தெரிநிலை குறிப்பு வினைமுற்று
3. பெயரெச்சம், வினையெச்சம்
4. செய்யும் என்னும் வினைமுற்று
5. அன்று இன்று என்னும் வினையெச்சக் குறிப்பு
6. கேட்கும் போலவும், இயக்குந போலவும், இயற்றுந போலவும், அ∴றிணையிடத்து சொல்லப்படுவன போல வருவன இவையாவும் குறிப்பால் பொருள் தருவனவாகும். இவை அல்லாதன யாவும் வெளிப்படையாய் பொருள் உணர்த்தி நிற்பனவாகும்.

## சொல் பாகுபாடு

எழுத்துக்களால் அமைவது சொல். சொல்லப்படுவதால் சொல் என்பது காரணப் பெயராகும். இது மொழி, வார்த்தை, கிளவி என்னும் வேறு பெயர்களாலும் சுட்டப்பெறும்.

**இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை**
**எனஇரண்டு ஆகும் இடைஉரி அடுத்து**
**நான்கும் ஆம்திசை வடசொல்அணு காவழி. (நன் - 270)**

பொருளுக்கு இடமாக அமையும் செய்யுள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நால்வகை சொற்களால் உருவாகும். அவற்றுள் இயற்சொல் 1. பெயர் இயற்சொல், 2. வினை இயற்சொல், 3. இடை இயற்சொல், 4. உரி இயற்சொல் என நான்காகவும், திரிசொல் 1. பெயர்த் திரிசொல், 2. வினைத் திரிசொல், 3. இடைத் திரிசொல், 4. உரித் திரிசொல் என நான்காகவும் விரியும். இவ்வாறு விரியும் எட்டுடன் திசைச்சொல், வடசொல் இரண்டையும் சேர்க்க சொல் பத்து வகையாகிற்று. ஆயினும் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கையே சொல்லின் வகைகளாகக் கொள்வர்.

நன்னூலார் பெயர் முதலிய நான்கையும் ஒரு சேரக் கூறாமல் பெயர், வினையை ஒரு பகுப்பாகவும் இடை, உரியை ஒரு பகுப்பாகவும் கூறுகிறார். அதற்கான காரணங்கள்,

1. நால்வகைச் சொற்களுள் பெயர், வினை ஆகிய இரண்டும் தலைமையும் சிறப்பும் உடையதாகையால் முன் கூறப்பட்டுள்ளன.
2. ஒருவன், ஒருத்தி என்று கூறியவுடன் அவர்களுடைய கை, கால் போன்ற அக உறுப்புகளும் ஆடை, அணி போன்ற புற உறுப்புகளும் அடங்கும். அவற்றைப் போல பெயர், வினை எனக் கூறியவுடன் விகுதி, இடைநிலை போன்ற அகத்துறுப்பாகிய இடைச்சொற்களும், வேற்றுமை உருபு போன்ற புறத்துறுப்பாகிய இடைச் சொற்களும் அடங்குகின்றன.

3. உரிச்சொல் பலவகைப் பண்புகளையும் உணர்த்தும் பெயராகும். எனவே இடை, உரி ஆகிய இரண்டும் பெயர், வினைகளில் அடங்குகின்றன.
4. பெயர், வினைகளுக்கு உரிய தலைமையும் சிறப்பும் இடை, உரிகளுக்கு இன்மையால் அவை பின் கூறப்பட்டுள்ளன.

## இயற்சொல்

இயல்பாய் எல்லோருக்கும் பொருள் விளங்கும் சொல் இயற்சொல் ஆகும்.

**செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்**
**தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல். (நன் - 271)**

இயற்சொற்கள் செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொற்களாகும். இச்சொற்கள் திரிசொல்லைப் போலில்லாமல் கற்றவர் மட்டுமன்றி கல்லாதவருக்கும் தெளிவாகப் பொருளை உணர்த்தும் இயல்பினை உடையன. இத்தகைய தன்மைகளை உடைய உலக வழக்குச் சொற்களே இயற்சொற்களாகும்.

**எ.கா.**

| | |
|---|---|
| மண், பொன், மரம் | - பெயர் இயற்சொல் |
| நடந்தான், வந்தான் | - வினை இயற்சொல் |
| அவனை, அவனால் | - இடை இயற்சொல் |
| அழகு, அன்பு | - உரி இயற்சொல் |

## திரிசொல்

எளிதில் பொருள் அறிய இயலாதது திரிசொல் ஆகும்.

**ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்**
**பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்**
**அரிதுஉணர் பொருளன திரிசொல் ஆகும். ( நன் - 272)**

கற்றவர்களால் மட்டுமே பொருளை உணரத் தகுந்த சொற்கள் திரிசொல் ஆகும். இயற் சொல்லினின்று திரிந்த சொல்லே திரிசொல். இது ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் வரும்.

**எ.கா**

1. **பெயர்த் திரிசொல்**

கிள்ளை, தத்தை - கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்ச்சொற்கள்

காசு - குற்றம், மணி, பொன் என்னும் பல பொருள் குறித்த ஒரு பெயர்ச்சொல்

**2. வினைத் திரிசொல்**

படர்ந்தான், ஏகினான் - போனான் என்னும் ஒரு பொருளைக் குறித்த பல வினைச்சொற்கள்

துஞ்சினார் - உறங்கினார், செத்தார், மறைந்தார் என்னும் பல பொருள்களை உணர்த்தும் ஒரு வினைச்சொல்

3. **இடைத் திரிசொல்**

சேறும், வருதும் - றும், தும் எதிர்காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைச்சொற்கள்

கொல் - ஐயம், வினா போன்ற பல பொருள் குறித்த ஓர் இடைச்சொல்

4. **உரித் திரிசொல்**

சால, உறு, தவ,நனி - மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பல உரிச்சொற்கள்

கடி - காப்பு கூர்மை போன்ற பல பொருள் குறித்த ஒரு உரிச்சொல்

## திசைச்சொல்

பல திசைகளிலும் வழங்குகின்ற மொழிகளில் இருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்கள் திசைச்சொற்களாகும்.

**செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்**
**தம்குறிப் பினவே திசைச்சொல் என்ப. (நன் - 273)**

செந்தமிழ்நாடு பண்டைய காலத்தில் பன்னிரு நிலங்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது. அப்பன்னிரு நிலங்களிலுள்ள மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு சொற்களைக் கையாண்டனர். அச்சொற்கள் செந்தமிழ் நாட்டு மக்களாலும் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு பல திசைகளிலும் உள்ள பன்னிரு நிலங்களில் பேசப்பட்ட சொற்கள் தமிழ்நாட்டிலும் வழக்கில் இருந்ததால் அவை திசைச் சொற்கள் என்று அழைக்கப்பட்டன.

திசைச்சொற்கள் இரண்டு வகையின, அவை 1. செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலங்களிலிருந்து வழங்குவன 2. பிற மொழி பேசுகின்ற நாடுகளிலிருந்து வந்து தமிழ் நிலத்தில் வழங்குவன என்பனவாம்.

பன்னிரு நிலம் என்பது 1. தென்பாண்டி நாடு, 2. குட்ட நாடு, 3. குடநாடு, 4. கற்கா நாடு, 5. வேணாடு, 6. பூழி நாடு, 7. பன்றி நாடு, 8. அருவாநாடு, 9. அருவா வடதலை நாடு, 10. சீத நாடு, 11. மலையமான் நாடு, 12. சோழ நாடு என்பனவாகும்.

**எ.கா.**

| பன்னிரு நிலம் | செந்தமிழ்ச்சொல் | பன்னிரு நிலம் சொல் |
|---|---|---|
| தென்பாண்டி நாடு | பசு | பெற்றம் |
| குட்டநாடு | தள்ளை | தாய் |
| குடநாடு | அச்சன் | தந்தை |
| கற்கா நாடு. | கையர் | வஞ்சர் |
| வேணாடு | கிழார் | தோட்டம் |
| பூழி நாடு | பாழி | சிறுகுளம் |
| பன்றி நாடு | செய் | வயல் |
| அருவா நாடு | கேணி | சிறுகுளம் |
| அருவா வடதலை நாடு | புளி | எகின் |
| சீத நாடு | எலுவன் | தோழன் |
| மலையமான் நாடு | வெள்ளம் | நீர் |
| புனல் நாடு | ஆய் | தாய் |

தமிழ்நாடு நீங்கிய நிலங்கள் 17 ஆகும். அவை 1. சிங்களம், 2. சோனகம், 3. சாவகம், 4. சீனம், 5. துளுவம், 6. குடம், 7. கொங்கணம், 8. கன்னடம், 9. கொல்லம், 10. தெலுங்கு, 11. கலிங்கம், 12. வங்கம், 13. கங்கம், 14. மரகதம், 15. கடாரம், 16. கௌடம், 17. குசலம் என்பனவாகும்.

**எ.கா.**

அந்தோ (ஐயோ) - சிங்கள மொழிச் சொல்
கொக்கு (மாமரம்) - துளுவ மொழிச் சொல்
சிக்குதல் (அகப்படுதல்) - கன்னட மொழிச் சொல்
செப்புதல் (சொல்லுதல்) - தெலுங்கு மொழிச் சொல்

## வடசொல்

ஆரிய மொழியாகிய சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் வழங்கும் சொற்கள் வடசொல் ஆகும்.

**பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்**
**ஈர்எழுத் தானும் இயைவன வடசொல். (நன் - 274)**

தமிழுக்கும் வடமொழியாகிய ஆரிய மொழிக்கும் பொதுவான எழுத்துக்களாலும், ஆரியத்திற்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்துக்களாலும், பொது எழுத்துக்கள், சிறப்பு எழுத்துக்கள் என்னும் இருவகை எழுத்துக்களாலும் ஆக்கப்பட்டுத் தமிழில் வந்து வழங்குவன வடசொல் எனப்படும்.

வடமொழியிலுள்ள உயிரெழுத்துக்கள் 16 ஆகும். இவற்றுள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய பத்து எழுத்துக்களும் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவானவை ஆகும்.

வடமொழியிலுள்ள மெய்யெழுத்துக்கள் 37 ஆகும். இவற்றுள் க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள ஆகிய பதினைந்து மெய்யெழுத்துக்களும் இரு மொழிக்கும் பொதுவாக அமைபவை. இவை நீங்கலாக உள்ள இருபத்தி எட்டு எழுத்துக்களும் வட மொழிக்குரிய சிறப்பு எழுத்துக்களாகும். இவ்வாறு தமிழில் வழங்கப்படும் வடசொற்களை தற்சமம், தற்பவம் என இரண்டாக வகைப்படுத்துவர்.

**தற்சமம்**

தமிழுக்கும் ஆரியத்துக்கும் உரிய பொது எழுத்துக்களால் ஆகி மாற்றமின்றி தமிழில் வந்து வழங்கும் வடசொற்கள் தற்சமம் எனப்படும்.

**எ.கா.**

அமலம், உருவம், காரணம் - இச்சொற்கள் இரு மொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் அமைந்தவை ஆகும்.

**தற்பவம்**


வட மொழிக்கு உரிய சிறப்பு எழுத்துக்களோ, பொதுவும் சிறப்புமாகிய இரு வகை எழுத்துக்களோ ஆகி தமிழ் எழுத்துக்களின் ஒலிக்கு ஏற்ப திரிந்து வழங்கும் வடசொற்கள் தற்பவம் எனப்படும்.

**எ.கா.**

சுஹி - சுகி
போஹி - போகி
ஷக்தி - சக்தி
இவை ஆரியச் சிறப்பு எழுத்துகள். தமிழ் ஒலிப்பிகேற்பத் திரிந்து வந்துள்ளன.

ஹரி - அரி
ஹரன் - அரன்
ஜயம் - சயம்

ஹ, ஜ என்பன ஆரியத்திற்குரிய சிறப்பு எழுத்துகள். ர, ன என்பன இரு மொழிக்கும் பொதுவானவையாகும்.



## பெயர்ச்சொல்

ஒன்றன் பெயரைக் குறித்து வரும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

**இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்**
**தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா**
**வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்தொன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே. (நன் - 275)**

பெயர்ச் சொல்லானது,

- இடுகுறியாகவும் காரணம் பற்றியும் வரும்.
- மரபைப் பின்பற்றியோ, புதிதாக ஆக்கப்பட்டோ வரும்.
- வினையாலணையும் பெயரைத் தவிர பிற பெயர்கள் காலம் காட்டாது.
- வேற்றுமை உருபுகள் வந்து சேர இடமாகி நிற்கும்.
- இருதிணை, ஐம்பால், மூன்று இடங்களுள் ஒன்றிற்கு உரியதாகவோ பலவற்றுக்கு பொதுவானதாகவோ வரும்.

பெயர்கள் ஆக்கம் பற்றியும் மரபு பற்றியும் வருவதால் அவை,

1. இடுகுறி மரபுப்பெயர்
2. இடுகுறி ஆக்கப்பெயர்
3. காரணக்குறி மரபுப்பெயர்
4. காரணக்குறி ஆக்கப்பெயர்

என நான்கு வகைப்படும்.

**இடுகுறிப்பெயர்** - ஒரு காரணமும் இன்றி ஒரு பொருளுக்கு கடவுளாலும் முன்னோராலும் இடப்பட்ட பெயர் இடுகுறிப்பெயராகும்.

**காரணப்பெயர்** - ஏதேனும் காரணத்தால் அமைவது காரணப் பெயர் ஆகும்.

**மரபுப்பெயர்** - ஒருவரால் ஆக்கப்படாமல் தொன்று தொட்டு வழங்கி வருவது மரபு பெயராகும்.

**ஆக்கப்பெயர்** - புதியதாக ஒருவரால் உண்டாக்கப்படுவது ஆக்கப்பெயர் ஆகும்.

| | |
|---|---|
| இடுகுறி மரபுப்பெயர் | - ஆண் பெண், மரம், பனை |
| இடுகுறி ஆக்கப்பெயர் | - பொய்யாமொழிப் புலவர், தெய்வப்புலவர் |
| காரணக்குறி மரபுப்பெயர் | - அவன், அவள், பறவை |
| காரணக்குறி ஆக்கப்பெயர் | - பொன்னன், பூணன் |

இவற்றுள் இடுகுறி மரபுப் பெயரும் காரணப் பெயரும் தொன்றுதொட்டு வருவன. எஞ்சிய இடுகுறி ஆக்கப் பெயரும் காரணக்குறி ஆக்கப் பெயரும் ஒருவரால் ஆக்கப்பட்டு வருவனவாகும்.

**காலம் காட்டாது**

பெயர்ச் சொற்கள் காலம் காட்டாது. ஆனால் வினையாலணையும் பெயர்கள் காலம் காட்டும். ஒரு வினைச்சொல் பெயரைச் சார்ந்து நின்று காலத்தை உணர்த்துமாயின் அது வினையாலணையும் பெயர் எனப்படும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| நடந்தவன் | - | இறந்தகாலம் |
| நடக்கிறவன் | - | நிகழ்காலம் |
| நடப்பவன் | - | எதிர்காலம் |

இவ்வினைச்சொற்கள் ஒரு பெயரைச் சார்ந்து அமைகின்றன. இவை முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை உணர்த்தி வருகின்றன. ஆகவே வினையாலணையும் பெயர்கள் மட்டும் காலம் காட்டும். ஏனைய பெயர்கள் காலம் காட்டாது.

**வேற்றுமை ஏற்கும்**

பெயர்ச்சொற்கள் ஒன்று முதல் எட்டு வரைக்குமான வேற்றுமைகளை ஏற்று நிற்கும்.

**எ.கா.**

| | |
|---|---|
| நிலத்தைக் கடந்தான் | - ஐ இரண்டாம் வேற்றுமை உருபு |
| வாளால் வெட்டினான் | - ஆல் மூன்றாம் வேற்றுமை உருபு |
| முருகனது கை | - அது ஆறாம் வேற்றுமை உருபு |
| காட்டின்கண் புகுந்தான் | - கண் ஏழாம் வேற்றுமை உருபு |

இவ்வாறு பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்று நிற்கும்.

**இருதிணை உணர்த்தும்**

பெயர்ச்சொற்கள் உயர்திணை, அ∴றிணை ஆகிய இரு திணைகளையும் உணர்த்தி வரும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| முருகன், வள்ளி | - | உயர்திணை |
| பூ , மலை | - | அ∴றிணை |

இவ்வாறு பெயர்ச்சொற்கள் இருதிணைகளையும் ஏற்று வரும்.

**ஐம்பால் உணர்த்தும்**

பெயர்ச்சொற்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களையும் உணர்த்தி வரும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| அவன் | - | ஆண்பால் |
| அவள் | - | பெண்பால் |
| அவர் | - | பலர்பால் |
| அது | - | ஒன்றன்பால் |
| அவை | - | பலவின்பால் |

இவ்வாறு பெயர்ச்சொற்கள் ஐம்பால்களையும் உணர்த்தும் தன்மையுடையன.

**மூவிடம் காட்டும்**

பெயர்ச்சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களில் வரும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| நான் | - | தன்மை |
| நீ | - | முன்னிலை |
| அவன் | - | படர்க்கை |

இவ்வாறு பெயர்ச்சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களைச் சார்ந்து அமையும்.

**பெயரின் வகைகள்**

பெயர் ஆறு வகைப்படும். அவை,

1. பொருள் பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. குணப்பெயர்
6. தொழிற்பெயர்

என்பனவாகும்.

**பொருட்பெயர்**

ஒரு பொருளைக் குறித்து வரும் பெயர் பொருள் பெயராகும்.

**எ.கா.** கல், மண், மரம்

**இடப்பெயர்**

இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் ஆகும்.

**எ.கா.** பூம்புகார், வானம், நெய்தல்

**காலப்பெயர்**

காலத்தைக் குறித்து வரும் பெயர் பெயராகும்.

**எ.கா.** சித்திரை, திங்கள், ஆண்டு

**சினைப்பெயர்**

உறுப்பை குறித்து வரும் பெயர் சினைப்பெயர் ஆகும்.

**எ.கா.** கண், காது, பூ, இலை

**குணப்பெயர்**

பண்பைக் குறித்து வரும் பெயர் குணப்பெயர் ஆகும்.

**எ.கா**. நன்மை, தீமை, உண்மை, பொய்மை

**தொழில் பெயர்**

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் ஆகும்.

**எ.கா.** ஓதல், படித்தல்

## உயர்திணை ஆண்பால் பெயர்கள்

**அவற்றுள்,**
**கிளை எண் குழூஉ முதல் பல்பொருள் திணைதேம்**
**ஊர்வான் அகம்புறம் முதல நிலன் ஆண்டு**
**இருது மதிநாள் ஆதிக் காலம்**
**தோள்குழல் மார்புகண் காது முதல் உறுப்பு**
**அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம்கதி**
**சாதி குடிசிறப்பு ஆதிப் பல்குணம்**
**ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை**
**இவைஅடை சுட்டு வினாப்பிற மற்றோடு**
**உற்ற னவ்ஈறு நம்பி ஆடூஉ**
**விடலை கோவேள் குரிசில் தோன்றல்**
**இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப. (நன் - 276)**

உயர்திணை ஆண்பால் பெயர்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும், சுட்டு, வினா, பிற, மற்று என்னும் நான்கின் அடிப்படையிலும் னகரத்தை ஈராகக் கொண்டு அமையும்.

1. பொருளை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் கிளை (சுற்றம்), எண் (எண்ணிக்கை), குழு (கூட்டம்) ஆகிய மூன்று பகுப்புகளில் ‘ன’கர ஈற்றைப் பெற்று அமையும்.
2. இடத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஐவகைத் திணை, நாடு, ஊர், வானம், அகம், புறம் ஆகிய பிரிவுகளில் ‘ன’கர ஈற்றினைப் பெற்று அமையும்.
3. காலத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஆண்டு, பருவம், மாதம், நாள் முதலியவற்றின் அடிப்படையில் ‘ன’கர ஈற்றைப் பெற்று அமையும்.
4. சினையை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் தோள், குழல், மார்பு, கண், காது ஆகியவற்றின் அடிப்படையில் ‘ன’கர ஈற்றைப் பெற்று அமையும்.
5. குணத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் அளவு, அறிவு, ஒப்பு வடிவு, நிறம், பிறப்பு, சாதி, குலம், சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ‘ன’கர ஈற்றைப் பெற்று அமையும்.
6. தொழிலை அடியாக கொண்டு தோன்றும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் படித்தல், கொடுத்தல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ‘ன’கர ஈறு பெற்று அமையும்.
7. இடைச்சொற்களாகிய சுட்டு, வினா, பிற, மற்று ஆகியவையும் ‘ன’கர ஈற்றைப் பெற்று உயர்திணை ஆண்பால் பெயர்களை உணர்த்தும்.

**எ.கா.**

**1. பொருளால் அமையும் பெயர்கள்**

கிளை - தமன், நமன், நுமன்
எண் - ஒருவன்
குழு - அவையத்தான், அத்திகோசத்தான்

இவைத்தவிர பொருளன், பொன்னன் என்பனவும் ‘ன’கர ஈறு பெற்றுப் பொருளை உணர்த்தி வரும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஆகும்.

**2. இடத்தால் அமையும் பெயர்கள்**

திணையால் வரும் பெயர்கள்

குறிஞ்சி - வெற்பன், சிலம்பன்
முல்லை - இடையன், ஆயன்

மருதம் - ஊரன், நாடன்
நெய்தல் - சேர்ப்பன், துறைவன்
பாலை - மறவன், எயினன்

நாடு - சீனத்தான்

ஊர் - பட்டினத்தான்

வான் - வானவன், விண்ணவன்

புறம் - புறத்தான்

அகம் - அகத்தான்

இவைத் தவிர மண்ணகத்தான், பாதலத்தான் ஆகியனவும் 'ன'கர ஈறு பெற்று இடத்தை உணர்த்தி வரும் உயர்திணை ஆண்பால் பெயர்களாகும்.

**1. காலத்தால் அமையும் பெயர்கள்**

ஆண்டு - மூவாண்டினன், ஐயாண்டினன்

பருவம் - வேனிலான், காரான்

மாதம் - சித்திரையான், ஆனியான்

நாள் - ஆதிரையான், பரணியான்

இவை தவிர நெருநலான், காலையான் என்பனவும் 'ன'கர ஈறு பெற்றுக் காலத்தை உணர்த்தி வரும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஆகும்.

**2. சினையால் வரும் பெயர்கள்**

தோள் - திணிதோளன்

குழல் - கருங்குழலன்

மார்பு - வரை மார்பன்

கண் - தாமரைக்கண்ணன்

காது - குழைக்காதன்

இவை தவிர குறுந்தாளன், நெடுங்கையன் போன்றனவும் 'ன'கர ஈறு பெற்று சினையை உணர்த்தி வரும் உயர்திணை ஆண்பால் பெயர் பெயர்களாகும்.

**3. குணத்தால் அமையும் பெயர்கள்**

அளவு - பெரியன், சிறியன்

அறிவு - அறிஞன், புலவன்

ஒப்பு - பொன்னொப்பன்

வடிவு - குள்ளன், கூனன்

நிறம் - கரியன், சிவப்பன்

பிறப்பு - மனிதன், தேவன்

சாதி - அந்தணன், அரசன்

குடி - சேரன், சோழன்

சிறப்பு - ஆசிரியன், தலைவன்

இவை தவிர நல்லன், தீயன் போன்றனவும் ‘ன’கர ஈறு பெற்று குணத்தை உணர்த்தி வரும் உயர்திணை ஆண்பால் பெயர்களாகும்.

**4. தொழிலால் வரும் பெயர்கள்**

ஓதல் - ஓதுவான்

ஈதல் - ஈவான்

இவைத் தவிர கொல்லன், தட்டான் போன்றனவும் ‘ன’கர ஈறு பெற்று தொழிலை உணர்த்தி வரும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஆகும்.

**5. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்**

சுட்டு - அவன், இவன், உவன்

வினா - எவன், ஏவன், யாவன்

பிற - பிறன்

மற்று - மற்றவன்

நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் ஆகிய ஏழும் ‘ன’கர ஈறு பெறாத உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஆகும்.

இவ்வாறு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் ‘ன’கர ஈறு பெற்றும் சுட்டு, வினா, பிற, மற்று ஆகிய இடைச் சொற்களின் அடிப்படையில் ‘ன’கர ஈறு பெற்றும் நம்பி, ஆடூஉ முதலியவற்றின் அடிப்படையில் ‘ன’கர ஈறு பெறாமலும் பிற நிலைகளிலும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் அமையும்.

## உயர்திணைப் பெண்பால் பெயர்கள்

**கிளை முதலாக கிளந்த பொருள்களுள்**
**ளவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்**
**தோழி செவிலி மகடூஉ நங்கை**
**தையலோடு இன்னன பெண்பால் பெயரே. (நன் - 277)**

உயர்திணைப் பெண்பால் பெயர்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் சுட்டு, வினா, பிற, மற்று என்னும் நான்கின் அடிப்படையிலும் ‘ள’கரத்தையும், இகரத்தையும் ஈராகக் கொண்டு அமையும்.

1. பொருளை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் கிளை, எண், குழு ஆகிய மூன்று பகுப்புகளில் ‘ள’கர, ‘இ’கர ஈற்றைப் பெற்று அமையும்.

2. இடத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஐவகைத் திணை, நாடு, ஊர், வானம், அகம், புறம் ஆகிய பிரிவுகளில் ‘ள’கர, ‘இ’கர ஈற்றினைப் பெற்று அமையும்.
3. காலத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஆண்டு, பருவம், மாதம், நாள் முதலியவற்றின் அடிப்படையில் ‘ள’கர, ‘இ’கர ஈற்றைப் பெற்று அமையும்.
4. சினையை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் தோள், குழல், மார்பு, கண், காது ஆகியவற்றின் அடிப்படையில் ‘ள’கர, ‘இ’கர ஈறு பெற்று அமையும்.
5. குணத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், பிறப்பு, சாதி குலம், சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ‘ள’கர, ‘இ’கர ஈற்றைப் பெற்று அமையும்.
6. தொழிலை அடியாக கொண்டு தோன்றும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் படித்தல், கொடுத்தல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ‘ள’கர, ‘இ’கர ஈறு பெற்று அமையும்.
7. இடைச்சொற்களாகிய சுட்டு, வினா, பிற, மற்று ஆகியவையும் ‘ள’கர, ‘இ’கர ஈற்றைப் பெற்று உயர்திணைப் பெண்பால் பெயர்களை உணர்த்தும்.

**எ.கா.**

**1. பொருளால் அமையும் பெயர்கள்**

கிளை - தமள், நமள், நுமள்
எண் - ஒருத்தி
குழு - அவையத்தாள், அத்திகோசத்தாள்

இவைத்தவிர பொன்னள், பொன்னி என்பனவும் ளகர ஈறு பெற்றுப் பொருளை உணர்த்தி வரும் உயர்திணைப் பெண்பால் பெயர்களாகும்.

**2. இடத்தால் அமையும் பெயர்கள்**

திணையால் வரும் பெயர்கள்

குறிஞ்சி - குறத்தி, கொடிச்சி
முல்லை - இடைச்சி, ஆய்ச்சி
மருதம் - உழத்தி, கடைச்சி
நெய்தல் - பரத்தி, நுளைச்சி
பாலை - மறத்தி, எயிற்றி
நாடு - சீனச்சி
ஊர் - பட்டினத்தாள்
வான் - வானத்தாள், வானத்தி

புறம் - புறத்தாள்
அகம் - அகத்தாள்

இவைத் தவிர மண்ணகத்தாள், மண்ணத்தி ஆகியனவும் ளகர , இகர ஈறு பெற்று இடத்தை உணர்த்தி வரும் உயர்திணைப் பெண்பால் பெயர்களாகும்.

**3. காலத்தால் அமையும் பெயர்கள்**

ஆண்டு - மூவாண்டினள், ஐயாண்டினள்
பருவம் - வேனிலாள், காராள்
மாதம் - சித்திரையாள், ஆனியாள்
நாள் - பரணியாள், அசுவினி

இவை தவிர நெருநலாள், காலையாள் என்பனவும் ளகர , இகர ஈறு பெற்றுக் காலத்தை உணர்த்தி வரும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஆகும்.

**4. சினையால் வரும் பெயர்கள்**

தோள் - திணிதோளள், திணிதோளி
குழல் - கார்குழலாள், குண்டலகேசி
மார்பு - நெடுமார்பள், நெடுமார்பி
கண் - தடங்கண்ணாள், தடங்கண்ணி
காது - நெடுஞ்செவியள், குழைக்காதி

இவை தவிர குறுந்தாளி ,மூக்காயி போன்றனவும் ளகர, இகர ஈறு பெற்று சினையை உணர்த்தி வரும் உயர்திணைப் பெண்பால் பெயர் பெயர்களாகும்.

**5. குணத்தால் அமையும் பெயர்கள்**

அளவு - பெரியவள், சிறியவள்
அறிவு - புலமையாள், கெட்டிக்காரி
ஒப்பு - பொன்னொப்பாள், குயிலி
வடிவு - கூனள், கூனி
நிறம் - கரியள், சிவப்பி
பிறப்பு - மானுடத்தி, தேவி
சாதி - செட்டிச்சி ,பார்ப்பினி
குடி - குறுக்கையாள், மறத்தி
சிறப்பு - படைத்தலைவி , தலைவி

இவை தவிர நல்லள், தீயள் போன்றனவும் ளகர, இகர ஈறு பெற்று குணத்தை உணர்த்தி வரும் உயர்திணைப் பெண்பால் பெயர்களாகும்.

**6. தொழிலால் வரும் பெயர்கள்**

ஓதல் - ஓதுவாள்
ஈதல் - ஈவாள் ,வள்ளி

இவைத் தவிர கொல்லச்சி, தட்டச்சி போன்றனவும் ளகர ,இகர ஈறு பெற்று தொழிலை உணர்த்தி வரும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஆகும்.

**7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்**

சுட்டு - அவள், இவள், உவள்
வினா - எவள், ஏவள், யாவள்
பிற - பிறள்
மற்று - மற்றவள்

தோழி, செவிலி,மகடூஉ நங்கை, தையல் ஆகியனவும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஆகும்.

இவ்வாறு பொருள், இடம் காலம், சினை குணம் தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் 'ள'கர , 'இ'கர ஈறு பெற்றும், சுட்டு ,வினா ,பிற , மற்று ஆகிய இடைச் சொற்களின் அடிப்படையிலும், தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்பனவற்றின் அடிப்படையிலும் பிற நிலைகளிலும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் அமையும்.

## உயர்திணைப் பலர்பால் பெயர்கள்

**கிளந்த கிளைமுதல் உற்றரவ் ஈற்றவும்**
**கள்என் ஈற்றின் ஏற்பவும் பிறவும்**
**பல்லோர் பெயரின் பகுதி ஆகும். (நன் - 278)**

உயர்திணைப் பலர்பால் பெயர்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் சுட்டு, வினா, பிற, மற்று என்னும் நான்கின் அடிப்படையிலும் 'ர்', 'அர்', 'ஆர்', 'மார்' என்னும் ரகர ஈறுகளைப் பெற்று அமையும்.

1. பொருளை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் கிளை எண், குழு ஆகிய மூன்று பகுப்புகளில் 'ர'கர ஈற்றைப் பெற்று அமையும்.
2. இடத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஐவகைத் திணை, நாடு ஊர், வானம், அகம், புறம் ஆகிய பிரிவுகளில் 'ர'கர ஈற்றினைப் பெற்று அமையும்.
3. காலத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆண்டு, பருவம், மாதம், நாள் முதலியவற்றின் அடிப்படையில் ரகர ஈற்றைப் பெற்று அமையும்.

4. சினையை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் தோள், குழல், மார்பு, கண், காது ஆகியவற்றின் அடிப்படையில் ரகர ஈறு பெற்று அமையும்.
5. குணத்தை அடியாகக் கொண்டு தோன்றும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், பிறப்பு, சாதி, குலம், சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ரகர ஈற்றைப் பெற்று அமையும்.
6. தொழிலை அடியாக கொண்டு தோன்றும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் படித்தல், கொடுத்தல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ரகர ஈறு பெற்று அமையும்.
7. இடைச்சொற்களாகிய சுட்டு, வினா, பிற, மற்று ஆகியவையும் ரகர ஈற்றைப் பெற்று உயர்திணைப் பலர்பால் பெயர்களை உணர்த்தும்.

**எ.கா.**

**1. பொருளால் அமையும் பெயர்கள்**

| | |
|---|---|
| கிளை | - தமர், நமர், நுமர் |
| எண் | - இருவர் ,மூவர் |
| குழு | - அவையத்தார், அத்திகோசத்தார் |

இவைத்தவிர முடியார், பொன்னர் என்பனவும் ரகர ஈறு பெற்றுப் பொருளை உணர்த்தி வரும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆகும்.

**2. இடத்தால் அமையும் பெயர்கள்**

திணையால் வரும் பெயர்கள்

| | |
|---|---|
| குறிஞ்சி | - குறவர், குன்றவர் |
| முல்லை | - இடையர், ஆயர் |
| மருதம் | - ஊரர், நாடர் |
| நெய்தல் | - சேர்ப்பர், துறைவர் |
| பாலை | - மறவர், எயினர் |
| நாடு | - சீனர் |
| ஊர் | - பட்டினத்தார் |
| வான் | - வானவர், விண்ணவர் |
| புறம் | - புறத்தார் |
| அகம் | - அகத்தார் |

இவைத் தவிர மண்ணகத்தார், பாதலத்தார் ஆகியனவும் ரகர ஈறு பெற்று இடத்தை உணர்த்தி வரும் உயர்திணைப் பலர்பால் பெயர்களாகும்.

**3. காலத்தால் அமையும் பெயர்கள்**

| | |
|---|---|
| ஆண்டு | - மூவாண்டினர், ஐயாண்டினர் |
| பருவம் | - வேனிலார், காரார் |

மாதம் - சித்திரையார், ஆனியார்

நாள் - ஆதிரையார், பரணியார்

இவை தவிர காலையார், மாலையார் என்பனவும் ரகர ஈறு பெற்றுக் காலத்தை உணர்த்தி வரும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆகும்.

**4. சினையால் வரும் பெயர்கள்**

தோள் - திணிதோளர்

குழல் - கருங்குழலர்

மார்பு - வரைமார்பர்

கண் - தடங்கண்ணார்

காது - குழைக்காதர்

இவை தவிர குறுந்தாளர், நெடுங்கையர் போன்றனவும் ரகர ஈறு பெற்று சினையை உணர்த்தி வரும் உயர்திணைப் பலர்பால் பெயர் பெயர்களாகும்.

**5. குணத்தால் அமையும் பெயர்கள்**

அளவு - பெரியர், சிறியர்

அறிவு - அறிஞர், புலவர்

ஒப்பு - பொன்னொப்பார்

வடிவு - குள்ளர், கூனர்

நிறம் - கரியர், செய்யர்

பிறப்பு - மானுடர் ,தேவர்

சாதி - அந்தணர், அரசர்

குடி - சேரர், சோழர்

சிறப்பு - ஆசிரியர், தலைவர்

இவை தவிர நல்லர் ,தீயர் போன்றனவும் ரகர ஈறு பெற்று குணத்தை உணர்த்தி வரும் உயர்திணைப் பலர்பால் பெயர்களாகும்.

**6. தொழிலால் வரும் பெயர்கள்**

ஓதல் - ஓதுவார்

ஈதல் - ஈவார்

இவைத் தவிர கொல்லர், தச்சர் போன்றனவும் ரகர ஈறு பெற்று தொழிலை உணர்த்தி வரும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ஆகும்.

**7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்**

சுட்டு - அவர், இவர், உவர்

வினா - எவர் ,ஏவர், யாவர்

பிற - பிறர்

மற்று - மற்றவர்

உயர்திணைப் பலர்பால் பெயர்கள் ‘கள்’ விகுதியுடன் சேர்ந்து வருவதுமுண்டு.

தமர்கள், அரசர்கள்

இவ்வாறு பொருள், இடம், காலம் ,சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் ரகர ஈறு பெற்றும், சுட்டு, வினா, பிற, மற்று ஆகிய இடைச் சொற்களின் அடிப்படையில் ரகர ஈறு பெற்றும், விகுதிக்கு மேல் ‘கள்’ விகுதி பெற்றும், பிற நிலைகளிலும் உயர்திணைப் பலர்பால் பெயர்கள் அமையும்.

## அஃறிணை ஒன்றன்பால் பெயர்கள்

**வினாச்சுட் டுடனும் வேறும் ஆம்பொருள்**
**ஆதி யுறுதுச் சுட்டணை ஆயுதம்**
**ஒன்றுஎன்எண் இன்னன ஒன்றன் பெயரே. (நன் - 279)**

1. வினாவோடும் சுட்டோடும் சேர்ந்து வருகின்ற ‘து’ ஈற்றுப்பெயர்கள்
2. வினாவோடும் சுட்டோடும் சேராது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயர்களோடும் பொருந்தி வருகின்ற ‘து’ ஈற்றுப் பெயர்கள்
3. சுட்டு ஆய்தத்துடன் பொருந்தி வருகின்ற ‘து’ ஈற்றுப் பெயர்கள்
4. ஒன்று என்று வருகின்ற எண்ணாகு பெயர்
5. இவை போன்று அமைகின்ற ‘து’ ஈற்றுப் பெயர்கள் அனைத்தும் அஃறிணை ஒன்றன்பால் பெயர்களாகும்.

**எ.கா.**

**1. அஃறிணைக்குரிய ஒன்றன்பால் பெயர்.**

வினா, சுட்டுப்பெயர்கள்

வினா - எது, ஏது, யாது

சுட்டு - அது, இது, உது

**2. அறுவகைப்பெயர்கள்**

பொருட்பெயர் - குழையது

இடப்பெயர் - நிலத்தது

காலப்பெயர் - மூலத்தது

சினைப்பெயர் - கோட்டது

குணப்பெயர் - குறியது

தொழிற்பெயர் - ஆடலது

**3. ஆய்தம் இணைந்த சுட்டுப்பெயர்**

அ∴து, இ∴து, உ∴து

**4. எண்ணாகுபெயர்** - ஒன்று

**5. இன்னன என்பதால் அமையும் பெயர்**

பிறிது, மற்றையது முதலியனவும் அ∴றிணை ஒன்றன்பால் பெயர்களாகும்.

## அ∴றிணைப் பலவின்பால் பெயர்கள்

**முன்னர் அவ்வொடு வருவை அவ்வும்**
**சுட்டுஇறு வவ்வும் கள்இறு மொழியும்**
**ஒன்றுஅல் எண்ணும் உள்ள இல்ல**
**பல்ல சில்ல உளஇல பலசில**
**இன்னவும் பலவின் பெயர்ஆ கும்மே. (நன் - 280)**

1. வினா, சுட்டு, பொருள்முதல் தொழில் ஈறான அறுவகைப் பெயர்களோடும் சேர்ந்து வருகின்ற 'வை' ஈற்றுப் பெயர்கள்
2. அகர ஈற்றுப் பெயர்கள்
3. வகர மெய் ஈற்றுச் சுட்டுப்பெயர்கள்
4. கள் என்னும் விகுதியை உடைய பெயர்கள்
5. இரண்டு முதலிய எண்ணுப் பெயர்கள்
6. உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில ஆகிய பெயர்கள்
7. இவற்றைப் போன்ற பிற பெயர்களும் அ∴றிணைப் பலவின்பால் பெயர்களாகும்.

**எ.கா.**

**1. வை ஈற்றுப்பெயர்கள்**

வினா - எவை, ஏவை, யாவை
சுட்டு - அவை, இவை, உவை
பொருட்பெயர் - குழையவை
இடப்பெயர் - நிலத்தவை
காலப்பெயர் - மூலத்தவை
சினைப்பெயர் - கோட்டவை
குணப்பெயர் - நல்லவை
தொழிற்பெயர் - ஓதுபவை

**2. அகர ஈற்றுப் பெயர்கள்**

பொருள், அகத்த, மூலத்த - சாரியை பெறாமல் வந்தன.
பொருளன, அகத்தன, மூலத்தன - அன் சாரியை பெற்று வந்தன.

**3. வகர மெய் (வ்)சுட்டுப்பெயர்கள்**

அவ் இவ், உவ்

**4. கள் விகுதி பெயர்கள்**

யானைகள், குதிரைகள், மரங்கள்

**5. எண்ணாகுபெயர்**

இரண்டு, பத்து, நூறு

**6. அகர ஈற்றுப் பன்மைப் பெயர்கள்**

உள்ள, இல்ல பல்ல, சில்ல, உள, இல, பல, சில

**7. இன்னவும் என்றதனால் அமையும் பெயர்கள்**

யா, பிற, மற்றைய போன்றனவும் அ∴றிணைப் பலவின்பால் பெயர்களாகும்.

## பால்-பகா அ∴றிணை பெயர்கள்

அ∴றிணைப் பெயர்களுள் ஒன்றன்பால், பலவின்பால் என பிரித்துக் கூறப்படாத பெயர்களும் உள்ளன. அப்பெயர்கள் அனைத்தும் பால்பகா அ∴றிணைப் பெயர்கள் ஆகும்.

**பால்பகா அ∴றிணைப் பெயர்கள்பால் பொதுமைய. (நன் - 281)**

ஒன்றன்பால் பெயர்கள், பலவின்பால் பெயர்கள் என பகுத்து கூறப்பட்டவை ஒழிந்த ஏனைய அ∴றிணைப் பெயர்கள் அனைத்தும் ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் உரிய பொதுவான பெயர்களாகும்.

து - ஒன்றன் பாலைக் காட்டும் ஈறு
வை, அ, கள் - பலவின்பாலைக் காட்டும் ஈறுகள்

இந்த ஈறுகளைப் பெறாத பெயர்களே இருபாலுக்கும் பொதுவாக வருகின்ற பெயர்களாகும். இவற்றை முன்னும் பின்னும் வருகின்ற சொற்களை வைத்தே இன்ன பால் என அறிய வேண்டும்.

**எ.கா.**

| | | | |
|---|---|---|---|
| பூ மலர்ந்தது | - ஒருமை, | பூ மலர்ந்தன | - பன்மை |
| பறவை பறந்தது | - ஒருமை, | பறவை பறந்தன | - பன்மை |
| மரம் வளர்ந்தது | - ஒருமை, | மரம் வளர்ந்தன | - பன்மை |
| யானை வந்தது | - ஒருமை, | யானை வந்தன | - பன்மை |

## இருதிணைப் பொதுப்பெயர்

உயர்திணைக்கும் அ∴றிணைக்கும் பொதுவாக உள்ள பெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்கள் எனப்படும். இவை ஒவ்வொன்றும் தத்தம் பாலை ஏற்கும்போதே திணையை

அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு இரு திணைக்கும் பொதுவாக வருகின்ற பெயர்கள் 26 ஆகும்.

**முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்**
**சினைமுதல் பெயர்ஒரு நான்கும் முறைஇரண்டும்**
**தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்**
**எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர். (நன் - 282)**

இரு திணைக்கும் பொதுவாக அமையும் பெயர்கள்

1. முதற்பெயர்
2. சினைப்பெயர்
3. சினை முதற்பெயர்
4. முறைப்பெயர்
5. தன்மைப் பெயர்
6. முன்னிலைப் பெயர்
7. எல்லாம்
8. தாம்
9. தான்

என்று வகைப்படுத்தப்படுகின்றன.

**முதற்பெயர்**

ஆண்மை முதற்பெயர், பெண்மை முதற்பெயர், ஒருமை முதற்பெயர், பன்மை முதற்பெயர் ஆகிய நான்கும் முதல் பொருளை பற்றி வரும் இருதிணைப் பொதுப்பெயர்களாகும்.

**சினைப்பெயர்**

ஆண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர் ஆகிய நான்கும் சினையைப் பற்றி வரும் இருதிணைப் பொதுப்பெயர்களாகும்.

**சினை முதற்பெயர்**

ஆண்மைச் சினை முதற்பெயர், பெண்மைச் சினை முதற்பெயர், ஒருமைச் சினைமுதற்பெயர், பன்மைச் சினை முதற்பெயர் ஆகிய நான்கும் முதலையும் சினையையும் ஒருங்கே தழுவி நிற்கும் இருதிணைப் பொதுப்பெயர்களாகும்.

**முறைப்பெயர்**

முறையைப் பற்றி வருகின்ற பெயர்களாக ஆண்மை முறைப்பெயர், பெண்மை முறைப்பெயர் ஆகியவை அமைகின்றன.

இவற்றுடன் யான், நான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர் நான்கும், நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர் என்னும் முன்னிலைப் பெயர் ஐந்தும், எல்லாம், தாம், தான் என்னும் பிற பெயர்களுமாக இரு திணைக்கு உரிய பொதுப்பெயர்கள் இருபத்தி ஆறு ஆகும்.

**எ.கா.**

| | |
|---|---|
| கதிரவன் உதித்தான் | - உயர்திணை |
| கதிரவன் உதித்தது | - அ.்.றிணை |
| கதிரவன் | - இருதிணைப் பொதுப்பெயர் |
| ஊமை வந்தான் | - ஆண்பால் |
| ஊமை வந்தாள் | - பெண்பால் |
| ஊமை | - இருபாற் பொதுப்பெயர் |

## முதற்பெயர் முதலிய நான்கையும் வகுத்தல்

**ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்**
**ஆம்அந் நான்மைகள் ஆண்பெண் முறைப்பெயர்.** **(நன் - 283)**

முதற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் ஆகிய மூன்று பொதுப் பெயர்களும் ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என்னும் நான்கு பால்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொன்றும் நான்கு வகையாக அமைகின்றன. முறைப்பெயர் ஆண், பெண் என்னும் இருபாலாக அமைகிறது.

**எ.கா.**

**முதற்பெயர்** - காரணம் கருதாது ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் முதற்பெயராகும். இது நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| ஆண்மை முதற்பெயர் | - சாத்தன் |
| பெண்ணை முதற்பெயர் | - சாத்தி |
| ஒருமை முதற்பெயர் | - கோதை |
| பன்மை முதற்பெயர் | - கோதைகள் |

**சினைப்பெயர் -** உறுப்பின் காரணமாக அமையும் பெயர் சினைப்பெயராகும். இது நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| ஆண்மைச் சினைப்பெயர் | - முடவன் |
| பெண்மைச் சினைப்பெயர் | - முடத்தி |
| ஒருமைச் சினைப்பெயர் | - செவியிலி |
| பன்மைச் சினைப்பெயர் | - செவியிலிகள் |

**சினை முதற்பெயர் -** உறுப்பையும், உறுப்பை உடைய முதற்பொருளையும் காரணமாகக் கொண்டு அமையும் பெயர் சினை முதற்பெயராகும். இது நான்கு வகைப்படும்.

ஆண்மைச் சினை முதற்பெயர் - முடக்கொற்றன்
பெண்மைச் சினை முதற்பெயர் - முடக்கொற்றி
ஒருமைச் சினை முதற்பெயர் - கொடும்புற மருதி
பன்மைச் சினை முதற்பெயர் - கொடும்புற மருதிகள்

**முறைப்பெயர்** - உறவினை அடிப்படையாகக் கொண்டு அமையும் பெயர் முறை பெயராகும். இது இரண்டு வகைப்படும்.

ஆண்மை முறைப்பெயர் - தந்தை
பெண்மை முறைப்பெயர் - தாய்

## திணைப் பொதுப்பெயர் பால் பொதுவாதல்

**அவற்றுள்,**
**ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும். (நன் - 284)**

முதற்பெயர் முதலாக சொல்லப்பட்ட இருபத்தாறு பொதுப்பெயர்கள் ஒவ்வொன்றும் இரண்டு திணைகளிலும் தத்தமக்குரிய பால்களை ஏற்று வரும்.

**எ.கா.**
**முதற்பெயர் நான்கு**

**1. ஆண்மை முதற்பெயர்**

சாத்தன் இவன் - உயர்திணை
சாத்தன் இவ்எருது - அஃறிணை

சாத்தன் என்னும் ஆண்மை முதற்பெயர் இருதிணை ஆண்பாலுக்கும் பொதுவாயிற்று.

**2. பெண்மை முதற்பெயர்**

சாத்தி இவள் - உயர்திணை
சாத்தி இப்பசு - அஃறிணை

சாத்தி என்னும் பெண்மை முதற்பெயர் இரு திணைப் பெண்பாலுக்கும் பொதுவாயிற்று

**3. ஒருமை முதற்பெயர்**

கோதை இவன்,
கோதை இவள் } - உயர்திணை
கோதை இது - அஃறிணை

கோதை என்னும் ஒருமை முதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றினுக்கும் பொதுவாயிற்று.

**4. பன்மை முதற்பெயர்**

கோதைகள் இவர் - உயர்திணை
கோதைகள் இவை - அஃறிணை

கோதைகள் என்னும் பன்மை முதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

**சினைப்பெயர்**

**1. ஆண்மைச் சினைப்பெயர்**

முடவன் இவன் - உயர்திணை
முடவன் இவ்எருது - அஃறிணை

முடவன் என்னும் ஆண்மைச் சினைப்பெயர் இருதிணைப் ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

**2. பெண்மைச் சினைப்பெயர்**

முடத்தி இவள் - உயர்திணை
முடத்தி இப்பசு - அஃறிணை

முடத்தி என்னும் பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

**3. ஒருமைச் சினைப்பெயர்**

செவியிலி இவன்
செவியிலி இவள் } - உயர்திணை
செவியிலி இது - அஃறிணை

செவியிலி என்னும் ஒருமைச் சினைப்பெயர் இருதிணை யொரு மூன்றற்கும் பொதுவாயிற்று.

**4. பன்மைச் சினைப்பெயர்**

செவியிலிகள் இவர் - உயர்திணை
செவியில் இவை - அஃறிணை

செவியிலிகள் என்னும் பன்மைச் சினைப்பெயர் இருதிணை பன்மைக்கும் பொதுவாயிற்று.

**சினை முதற்பெயர்**

**1. ஆண்மைச் சினை முதற்பெயர்**

முடக்கொற்றன் இவன் - உயர்திணை
முடக்கொற்றன் இவ்எருது - அஃறிணை

முடக்கொற்றன் என்னும் ஆண்மைச் சினைமுதற்பெயர் இருதிணை ஆண்பாலுக்கும் பொதுவாயிற்று.

**2. பெண்மைச் சினை முதற்பெயர்**

முடக்கொற்றி இவள் - உயர்திணை
முடக்கொற்றி இவ்எருது - அஃறிணை

முடக்கொற்றி என்னும் பெண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பெண்பாலுக்கும் பொதுவாயிற்று

**3. ஒருமைச் சினை முதற்பெயர்**

கொடும்புறமருதி இவன்
கொடும்புறமருதி இவள் - உயர்திணை
கொடும்புறமருதி இது - அஃறிணை

கொடும்புற மருதி என்னு ஒருமைச் சினைமுதற்பெயர் இருதிணை, ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

**4. பன்மைச் சினை முதற்பெயர்**

கொடும்புறமருதிகள் இவர் - உயர்திணை
கொடும்புறமருதிகள் இவை - அஃறிணை

கொடும்புறமருதிகள் என்னும் பன்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

**முறைப்பெயர்**

**1. ஆண்மை முறைப்பெயர்**

தந்தை இவன் - உயர்திணை
தந்தை இவ்எருது - அஃறிணை

தந்தை என்னும் ஆண்மை முறைப் பெயர் இருதிணை ஆண்பாலுக்கும் பொதுவாயிற்று.

**2. பெண்மை முறைப்பெயர்**

தாய் இவள் - உயர்திணை
தாய் இப்பசு - அஃறிணை

தாய் என்னும் பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாலுக்கும் பொதுவாயிற்று.

**தன்மைப் பெயர் நான்கு**

தன்மை ஒருமைப் பெயர் - யான், நான்
யான் நம்பி, யான் நங்கை - உயர்திணை
யான் பேய் - அஃறிணை

யான் என்னும் தன்மைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

நான் நம்பி, நான் நங்கை - உயர்திணை
நான் பேய் - அ.்.றிணை

நான் என்னும் தன்மைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

தன்மைப் பன்மைப் பெயர் - யாம்,நாம்
யாம் மக்கள் - உயர்திணை
யாம் பேய்கள் - அ.்.றிணை

யாம் என்னும் தன்மைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

நாம் மக்கள் - உயர்திணை
நாம் பேய்கள் - அ.்.றிணை

நாம் என்னும் தன்மைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

**முன்னிலைப் பெயர்**

முன்னிலை ஒருமைப் பெயர் - நீ
நீ நம்பி, நீ நங்கை - உயர்திணை
நீ பூதம் - அ.்.றிணை

நீ யென்னும் முன்னிலைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றனுக்கும் பொதுவாயிற்று.

**முன்னிலைப் பன்மைப் பெயர் -நீர், நீவிர், நீயிர், எல்லீர்**

நீர் மக்கள் - உயர்திணை
நீர் பேய்கள் - அ.்.றிணை
நீவிர் மக்கள் - உயர்திணை
நீவிர் பேய்கள் - அ.்.றிணை
நீயிர் மக்கள் - உயர்திணை
நீயிர் பேய்கள் - அ.்.றிணை
எல்லீர் மக்கள் - உயர்திணை
எல்லீர் பேய்கள் - அ.்.றிணை

நீர்,நீவிர்,நீயிர்,எல்லீர் ஆகிய நான்கு முன்னிலைப் பெயர்களும் இருதிணைப் பன்மைக்கு பொதுவாயிற்று.

**பிறபெயர்கள் - எல்லாம், தாம், தான்**

அவர் எல்லாம் - உயர்திணை
அவை எல்லாம் - அ.்.றிணை

எல்லாம் என்பது இரு திணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவர் தாம் - உயர்திணை
அவை தாம் - அ∴றிணை

தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவன் தான், அவள்தான் - உயர்திணை
அதுதான் - அ∴றிணை

தான் என்பது இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

இவ்வாறு பொதுப்பெயர்கள் அனைத்தும் உயர்திணை, அ∴றிணை என்னும் இரண்டனுள்ளும் தத்தமக்குரிய பாலை ஏற்று வரும்.

| **பெயர்வகை** | **பிரிவு** | **உயர்திணை** | **அ∴றிணை** |
|---|---|---|---|
| **1. முதற் பெயர் (4)** | 1. ஆண்மை<br>2. பெண்மை<br>3. ஒருமை<br><br>4. பன்மை | சாத்தன் இவன்<br>சாந்தி இவள்<br>கோதை இவன்<br>கோதை இவள்<br>கோதைகள் இவர் | சாத்தன் இவ்எருது<br>சாந்தி இப்பசு<br>கோதை இது<br><br>கோதைகள் இவை |
| **2. சினைப்பெயர் (4)** | 1. ஆண்மை<br>2. பெண்மை<br>3. ஒருமை<br><br>4. பன்மை | முடவன் இவன்<br>முடத்தி இவள்<br>செவியிலி இவன்<br>செவியிலி இவள்<br>செவியிலிகள் இவர் | முடவன்இவ்எருது<br>முடத்தி இப்பசு<br>செவியிலிஇது<br><br>சேவியிலிகள் இவை |
| **3. சினை முதற்பெயர் (4)** | 1. ஆண்மை<br>2. பெண்மை<br>3. ஒருமை<br><br>4. பன்மை | முடக்கொற்றன் இவன்<br>முடக்கொற்றி இவள்<br>கொடும்புறமருதி இவன்<br>கொடும்புறமருதி இவள்<br>கொடும்புற மருதிகள்இவர் | முடக்கொற்றன்இவ்எருது<br>முடக்கொற்றி இவ்ஏரத<br>கொடும்புறமருதி இது<br><br>கொடும்புற மருதிகள் இவை |
| **4. முறைப்பெயர் (2)** | 1. ஆண்<br>2. பெண் | தந்தை இவன்<br>தாய் இவள் | தந்தைஇவ்எருது<br>தாய்இப்பசு |
| **5. தன்மைப்பெயர் (4)** | 1. யான்<br>2. நான் } - ஒருமை<br>3. யாம்<br>4, நாம் } - பன்மை | யான் (நான்) நம்பி<br>யான் (நான்) தங்கை<br><br>யாம் (நாம்) மக்கள் | யான் (நான்) பேய்<br><br><br>யாம் (நாம்) பேய்கள் |
| **6. முன்னிலைப்பெயர்(5)** | 1. நீ (ஒருமை -1)<br>2. நீர், நீவிர், நீயிர்,<br>எல்லீர் (பன்மை – 4) | நீ தம்பி, நீ தங்கை<br>நீர் மக்கள் | நீ பூதம்<br>நீர் பேய்கள் |

| | | | |
|---|---|---|---|
| **பிறபெயர்கள் (3)** | 1. எல்லாம்<br>2. தாம்<br>3. தான் | அவர் எல்லாம்<br>அவர் தாம்<br>அவன் தான்<br>அவள் தான் | அவை எல்லாம்<br>அவை தாம்<br>அது தான் |

## தன்மை முன்னிலைப் படர்க்கைப் பெயர்கள்

பெயர்ச்சொற்கள் தன்னையோ, முன்னிலை இடத்தில் நிற்பவரையோ, அயல் இடத்தில் உள்ளவரையோ சுட்டி நிற்கும் தன்மை உடையன. இதனடிப்படையில் பெயர்களை தன்மைப் பெயர் முன்னிலைப் பெயர் படர்க்கைப் பெயர் என மூன்றாகப் பிரிக்கலாம். எனவே இவை மூவிடங்கள் எனப்படுகின்றன.

**தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை**
**எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ**
**அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது. (நன் - 285)**

1. தன்மைப் பெயர்கள் யான், நான், யாம், நாம் என்னும் நான்குமாகும்.
2. முன்னிலைப் பெயர்கள் எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்னும் ஐந்துமாகும்.
3. இவ்வொன்பதும் அல்லாத பெயர்கள் அனைத்தும் படர்க்கைக்கு உரியனவாகும்.

இவற்றுள் எல்லாம் என்னும் பெயர் மூவிடத்திற்கும் உரிய பொதுப்பெயராகும்.

**எ.கா.**

| | |
|---|---|
| தன்மை ஒருமை | - யான், நான் |
| தன்மைப் பன்மை | - யாம், நாம் |
| முன்னிலை ஒருமை | - நீ |
| முன்னிலைப் பன்மை | - எல்லீர், நீயிர், நீவிர், நீர் |
| மூவிடப் பொதுப்பெயர் | - யாம் எல்லாம் (தன்மை) |
| (எல்லாம்) | - நீர் எல்லாம் |
| (முன்னிலை) | - அவரெல்லாம் (படர்க்கை) |

## தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் இடம் வகுத்தல்

தொழிலுக்குப் பெயராகி வருவது தொழிற்பெயர். இதனை வினைப்பெயர் என்றும் கூறுவர்.

**வினையின் பெயரே படர்க்கை வினையால்**
**அணையும் பெயரே யாண்டும் ஆகும். (நன் - 286)**

தொழிற்பெயர் படர்க்கையில் மட்டுமே வரும். வினையாலணையும் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும் வரும்.

**எ.கா.**

**தொழிற்பெயர்** - உணல், வருகை, முயற்சி

**வினையாலணையும் பெயர்**

| | |
|---|---|
| கண்டேனை | - தன்மை |
| கண்டாய்க்கு | - முன்னிலை |
| கண்டானோடு | - படர்க்கை |

**தொழிற்பெயர்**

தொழிற்பெயர் முதனிலைத் தொழிற் பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர், விகுதி பெற்ற தொழிற் பெயர் என மூன்று வகைப்படும்.

**எ.கா**

1. முதனிலைத் தொழிற்பெயர் - வினைப் பகுதி மட்டுமே பெயராக வருவது.
   சொல், உரை, அலை, வளை
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் - வினைப்பகுதி திரிந்து வருவது
   கேடு, கோள், பாட்டு, கூற்று
3. விகுதி பெற்ற தொழிற்பெயர் - வருதல், பொங்கல்,

**தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும்**

1. இருவகைப் பெயர்களும் பகுதியிலிருந்து தோன்றும்.
2. தொழிற்பெயர் செயலை (தொழிலை) மட்டுமே காட்டும். செய்பவனையும் காலத்தையும் காட்டாது.
3. வினையாலணையும் பெயர் செயல், செய்பவன், காலம் ஆகியவற்றைக் காட்டும்.
4. தொழிற்பெயர் படர்க்கையில் மட்டுமே வரும். வினையாலணையும் பெயர் மூவிடங்களிலும் வரும்.

## பன்னிரண்டு பொதுப்பெயர்கள்

**தான்யான் நான்நீ ஒருமை பன்மைதாம்**
**யாம்நாம் எலாம்எலீர் நீயிர்நீர் நீவிர். (நன் - 287)**

1. தான், யான், நான், நீ என்னும் நான்கும் ஆண், பெண், ஒன்று என்னும் ஒருமைப் பாலுக்கு உரியன.
2. தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் என்னும் எட்டுப் பெயர்களும் பலர்பால், பலவின்பால் ஆகிய பன்மைப் பாலுக்கு உரியனவாகும்.

**தன்மைப்பெயர் இரு வகைப்படும்.**

1. தன்மை ஒருமைப் பெயர் - யான், நான்
2. தன்மைப் பன்மைப் பெயர் - யாம், நாம்.

**முன்னிலைப் பெயர் இரு வகைப்படும்.**

1. முன்னிலை ஒருமைப் பெயர் - நீ.
2. முன்னிலைப் பன்மைப் பெயர் - நீர், நீயிர், நீவிர், எல்லீர்.

**படர்க்கைப் பெயர் இரு வகைப்படும்.**

1. படர்க்கை ஒருமைப் பெயர் - தான்
2. படர்க்கைப் பன்மைப் பெயர் - தாம்

## எண்அடியாகப் பிறந்த உயர்திணைப் பெயர்களுக்குப் புறனடை

**ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில. (நன் - 288)**

ஒன்று என்னும் எண்ணுப்பெயரிலிருந்து உருவான ஒருவன், ஒருத்தி என்னும் இரு எண்ணுப்பெயர்களைப் போன்று இருவன், மூவன், நால்வன், இருத்தி, முத்தி, நாலுத்தி என ஒன்றுக்கு மேலான எண்ணுப்பெயர்கள் வருவது இல்லை.

**எ.கா.**

ஒருவன் - ஆண்பால்
ஒருத்தி - பெண்பால்
} ஒருமைப்பால்

இருவன், இருத்தி, மூவன், முத்தி என அமையாமல் பலர்பாலைக் கொண்டே வரும்.

இருவர், மூவர் - பன்மைப் பெயர்

## ஒருவர் என்பதற்குச் சிறப்புவிதி

**ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்**
**பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப. (நன் - 289)**

ஒருவர் என்று வழங்கும் சொல் உயர்திணை ஆண், பெண் ஆகிய இருபாலுக்கும் பொதுவாய் வரும். இச்சொல் தொடரில் அத்திணைக்கு உரிய பலர்பால் வினைமுற்றை ஏற்கும் என்று கூறுவர் புலவர்.

ஒருவர் என்பது பலர்பால் விகுதி வினையைக் கொண்டு முடியினும் ஒருமைப்பால் என்பதைப் பகுதி காட்டியது.

**எ.கா.**

ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்.
பெண்டிருள் ஒருவர் தந்தை வழி நிற்பார்.
அரசர் ஒருவர் வந்தார்.
அரசியார் ஒருவர் வந்தார்.

இவ்வெடுத்துக்காட்டுகள் ஒருவர் நிற்பான், ஒருவர் நிற்பாள்,ஒருவர் வந்தான் என ஒருமைச் சொல் கொள்ளாமல் விகுதிக்கேற்ப நிற்பார் என்னும் பன்மைச் சொல்லைக் கொண்டு வந்துள்ளன.

## ஆகுபெயர்

ஒன்றன் இயற்பெயர் அதனொடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஒன்று மற்றொன்றுக்கு ஆகி வருதலால் ஆகுபெயர் என்பது காரணக்குறி ஆகும். இப்பெயர் காலந்தோறும் பலவகையாக வளர்ந்து வந்துள்ளதைத் தமிழ் இலக்கணங்கள் எடுத்துரைக்கின்றன. ஆகுபெயர் 7 என்கிறது தொல்காப்பியம். நன்னூலார் 12 ஆகக் காட்டுகிறார். உரையாசிரியர்கள் மேலும் பலவாக்கிக் காட்டுகின்றனர்.

**எ.கா.**

**உலகம் சிரித்தது**

இத்தொடரில் உள்ள ‘உலகம்’ என்னும் சொல் நிலத்தைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய மக்களுக்கு ஆகி வந்துள்ளது. இவ்வாறு ஒன்றன் பெயர் அதனை குறிக்காமல் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும்.

**பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. (நன் - 290)**

ஆகுபெயர் பொருள், இடம் ,காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களின் அடிப்படையிலும் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவு பெயர்களின் அடிப்படையிலும் சொல், தானி, கருவி, காரியம், கருத்தா ஆகியவற்றின் அடிப்படையிலும் பலவாறாக பகுத்துக் கூறப்படும்.

**1. பொருளாகு பெயர்**

முதற் பொருளின் பெயர் சினை பெயருக்கு ஆகிவருவது பொருளாகு பெயராகும்.

**எ.கா.** தாமரை முகம்

இத்தொடரில் உள்ள ‘தாமரை’ என்னும் முதற் பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய ‘மலர்’ என்னும் உறுப்பிற்கு பெயராகி வந்துள்ளது.

**2. இடவாகு பெயர்**

இடப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் ஆகும்.

**எ.கா.** ஊர் சிரித்தது

இத்தொடரிலுள்ள 'ஊர்' என்னும் இடப்பெயர் அதன் பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய மக்களுக்குப் பெயராகி வந்துள்ளது.

**3. காலவாகு பெயர்**

காலப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் ஆகும்

**எ.கா.** கார் அறுத்தான் - கார் (மழை)

இத்தொடரிலுள்ள 'கார்' என்னும் காலப்பெயர் அதன் பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய விளையும் பயிருக்கு ஆகி வந்துள்ளது.

**4. சினையாகு பெயர்**

சினைப்பெயர் அதனோடு தொடர்புடைய முதற் பொருளுக்கு ஆகி வருவது சினையாகுபெயர் ஆகும்.

**எ.கா.** வெற்றிலை நட்டான்

இத்தொடரிலுள்ள 'வெற்றிலை' என்னும் சினைப்பெயர் அதன் பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய கொடிக்கு ஆகி வந்துள்ளது.

**5. பண்பாகு பெயர்**

பண்புப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகுபெயர் ஆகும்.

**எ.கா.** கார் நிகர் கை

இத்தொடரிலுள்ள 'கார்' என்னும் நிறப்பண்புப் பெயர் அதனை குறிக்காமல் அப்பண்பை உடைய மேகத்திற்கு ஆகியது.

**6. தொழிலாகு பெயர்**

தொழிற் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் ஆகும்.

**எ.கா.** வறுவல் உண்டான்

இத்தொடரிலுள்ள 'வறுத்தல்' என்னும் தொழிற்பெயர் அதனொடு தொடர்புடைய வறுவல் என்னும் உணவுப்பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**எண்ணல் அளவையாகுபெயர்**

எண்ணல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவையாகு பெயர் ஆகும்.

**எ.கா**. பழங்களில் இரண்டு கொடு

இத்தொடரிலுள்ள 'இரண்டு' என்னும் எண்ணல் அளவைப்பெயர் அதனொடு தொடர்புடைய பழத்திற்கு ஆகி வந்துள்ளது.

**எடுத்தல்அளவையாகுபெயர்**

எடுத்தல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவையாகு பெயர் ஆகும்.

**எ.கா.** ஒரு பலம் கொடு

இத்தொடரிலுள்ள 'பலம்' என்னும் எடுத்தல் அளவைப்பெயர் அதனொடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**முகத்தல் அளவையாகுபெயர்**

முகத்தல் அளவைப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் ஆகும்.

**எ.கா.** நாழி கொடு

இதில் 'நாழி' என்னும் முகத்தல் அளவைப்பெயர் அதனொடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**நீட்டல் அளவையாகுபெயர்**

நீட்டல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவையாகு பெயர் ஆகும்.

**எ.கா.** ஒரு முழம் கொடு

இத்தொடரிலுள்ள 'முழம்' என்னும் நீட்டல் அளவைப்பெயர் அதனொடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**சொல்லாகு பெயர்**

சொல்லின் பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகுபெயர் ஆகும்.

**எ.கா.** திருக்குறளுக்கு உரை செய்தார்

இத்தொடரில் 'உரை' என்னும் சொல் அதனோடு தொடர்புடைய குறளின் விளக்கத்திற்கு ஆகியது.

**தானியாகு பெயர்**

தானியின் பெயர் அதனுடன் தொடர்புடைய தானத்திற்கு ஆகி வருவது தானியாகு பெயர் ஆகும்.

**எ.கா.** கழல் தொட்டான்

இதில் 'கழல்' என்பது அது பொருந்துவதற்குரிய இடமாகிய (தானமாகிய) காலுக்கு ஆகியது.

**கருவியாகு பெயர்**

கருவியின் பெயர் அதனுடன் தொடர்புடைய காரியத்திற்கு ஆகி வருவது கருவியாகு பெயர் ஆகும்.

**எ.கா.** திருவாசகம் படி

இத்தொடரில் 'வாசகம்' என்னும் கருவியின் பெயர் அதனோடு தொடர்புடைய நூலுக்கு ஆகி வந்துள்ளது.

**காரியவாகு பெயர்**

காரியத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய கருவிக்கு ஆகி வருவது காரியவாகு பெயர் ஆகும்.

**எ.கா.** இது அலங்காரம்

இத்தொடரில் 'அலங்காரம்' என்னும் காரியப்பெயர் அதற்குக் காரணமாகிய நூலுக்கு ஆகியது.

**கருத்தாவாகு பெயர்**

கருத்தாவின் பெயர் அதனுடன் தொடர்புடைய நூலுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் ஆகும்.

**எ.கா.** கம்பரைப் படி

இத்தொடரில் 'கம்பர்' என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆகி வந்துள்ளது.

**உவமையாகு பெயர்**

உவமை பெயர் அதனுடன் தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும்.

**எ.கா.** பாவை வந்தாள்

இத்தொடரில் ‘பாவை’ என்னும் பொருளின் பெயர் அது போன்ற தன்மை பெற்ற பெண்ணுக்கு ஆகி வந்துள்ளது.

**இருமடியாகு பெயர்**

இரு மடிப்பினை உடைய ஆகுபெயர்.

**எ.கா.** புளி முளைத்தது

இதில் ‘புளி’ என்னும் பெயர் பழத்திற்கு ஆகி பின் அதன் மரத்திற்கு ஆகி இருமுறை மடிந்து வந்துள்ளது.

**மும்மடியாகு பெயர்**

மூன்று மடிப்பு உடைய ஆகுபெயர்.

**எ.கா.** கார் அறுத்தான்

இத்தொடரில் ‘கார்’ (கருமை) என்னும் நிறப்பெயர் அதனை உடைய மேகத்திற்கு ஆகி, பின் கார் காலம் என்னும் பருவத்திற்கு ஆகி, அதன் பின் அப்பருவத்தில் விளையும் பயிருக்கு ஆகி மூன்று முறை மடிந்து வந்துள்ளது.

**பின்மொழியாகு பெயர்**

பின்மொழி ஆகுபெயராய் வருவது.

**எ.கா.** வகரக்கிளவி

இத்தொடரில் வகரம், கிளவி என்னும் இரண்டனுள் பின்னது ஆகுபெயராய் எழுத்தைக் குறித்தது.

**முன்மொழியாகு பெயர்**

முன்சொல் ஆகுபெயராய் வருவது.


**எ.கா.** துலாக்கோல்


இத்தொடரில் துலா,கோல் இரண்டனுள் துலா என்னும் முதன் மொழி நிறைகோலைக் குறித்தது.

| வகை | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| **பொருளாகு பெயர்** | முதற்பெருளின் பெயர் சினைப் பொருளுக்கு ஆவது | தாமரை முகம் (பூ - முதல், முகம் - சினை) |
| **இடவாகு பெயர்** | இடத்தின் பெயர் இடத்திலுள்ள பொருளுக்கு ஆவது. | உலகே போற்றியது - மக்கள் |

| | | |
|---|---|---|
| **காலவாகு பெயர்** | காலத்தின் பெயர், அக்காலத்திலுள்ள பொருளுக்கு ஆவது | கார் அறுத்தான் (நெல்) |
| **சினையாகு பெயர்** | உறுப்பின் பெயர் (பகுதி) முதற் பொருளுக்கு ஆவது | தலைக்கு ஒரு பழம் கொடு |
| **குணவாகு பெயர்** | குணத்தின் பெயர் அக்குணத்தை உடைய பொருளுக்கு ஆவது | வெள்ளையைப் பிடித்துக் கட்டு (மாடு) |
| **தொழிலாகு பெயர்** | தொழிலின் பெயர், அத்தொழிலை உடைய பொருளுக்கு ஆவது | வற்றல் உண்டான் |
| **எண்ணல் அளவையாகுபெயர்** | எண்ணின் பெயர். அவ் அளவுடைய பொருளுக்கு ஆவது | இரண்டே பெறுக ( இரண்டு மழலைகள்) |
| **எடுத்தல் அளவையாகுபெயர்** | ஏடை பெயர் அவ் அளவுடைய பொருளுக்கு ஆவது | ஒரு கிலோ கொடு (பொருள் - சர்க்கரை) |
| **முகத்தல் அளவையாகுபெயர்** | முகக்கும் அளவுக் கருவியின் பெயர் அளக்கும் பொருளுக்கு ஆவது | அரை லிட்டர் கொடு (பால்) |
| **நீட்டல் அளவையாகுபெயர்** | நீளத்தை அளக்கும் - அளவுப்பெயர், அளக்கும் பொருளுக்கு ஆவது | இரண்டு முழம் கொடு (பூ) |
| **சொல்லாகுபெயர்** | சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆவது | என் சொல்லைக் கேள் (சொல் - அறிவுரை) |
| **தானியாகுபெயர்** | இடத்திலுள்ள பொருளின் பெயர், இடத்துக்கும் ஆவது | பாலை வண்டியில் ஏற்று (குடம்) |
| **கருவியாகுபெயர்** | கருவியின் பெயர், கருவியால் ஆன காரியத்துக்கு ஆவது | குழல் கேட்டு மகிழ்ந்தேன் (இசை) |
| **காரியயாகுபெயர்** | காரியத்தின் பெயர், அதனைச் செய்த கருவிக்கு ஆவது | அலங்காரம் கற்றேன் (நூல்) |
| **கருத்தாயாகுபெயர்** | செயல் செய்தவன் பெயர் செய்யப்பட்ட பொருளுக்கு ஆவது | கம்பனைக் கற்றேன் (கம்பராமாயாணம்) |
| **உவமையாகுபெயர்** | உவமையாகிய பெயர் உவமித்த பொருளுக்கு ஆவது | மயில் ஆடினாள் (பெண்) |

| | | |
|---|---|---|
| **இருமடியாகு பெயர்** | இரண்டுமுறை<br>ஆகி வருவது | புளி முளைத்தது<br>(சுவை, மரம்) |
| **மும்மடியாகு பெயர்** | மூன்று முறை<br>ஆகி வருவது | கார் அறுத்தான்<br>(கருமை, காலம், பயிர்) |
| **பின்மொழியாகு பெயர்** | பின்சொல் ஆகுபெயரால்<br>வருவது | வகரக்கிளவி |
| **முன்மொழியாகு பெயர்** | முன்சொல் ஆகுபெயரால்<br>வருவது | துலாக்கோல் |




## வினாக்கள்

1. பெயர்ச்சொல் என்றால் என்ன? வகைகள் யாவை?
2. உயர்திணை ஆண்பாற் பெயர்களைச் சான்றுடன் விளக்குக.
3. வழக்கு என்றால் என்ன? வகைகளை எடுத்துரைக்க.
4. இருதிணைப் பொதுப்பெயர்கள் யாவை?
5. ஆகுபெயரின் வகைகளை விவரிக்க.

# இயல் - 2

## வேற்றுமை

வேற்றுமை என்பதற்கு வேறுபடுத்தல் அல்லது வேறு பொருள் தரச் செய்தல் என்பது பொருளாகும். பெயரைச் செயப்படுபொருள் முதலாக வேறுபடுத்துவதால் வேற்றுமை என்பது காரணப் பெயராகும். இவ்வேற்றுமை உயர்திணை, அஃறிணைப் பெயர்களின் பின்னர் தோன்றும் தன்மை கொண்டது. இது எட்டு வகையாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது.

### வேற்றுமையின் வகையும் இலக்கணமும்

**ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய் பொருள்**
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை. (நன் - 291)**

தம்மை ஏற்றுக் கொள்வதற்குரிய எல்லா வகைப் பெயர்களுக்கும் இறுதியில் வந்து பெயர்களின் தொடர்பொருளை வேறுபடுத்துவன வேற்றுமை ஆகும். அவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

**எ.கா.** கண்ணன் - உயர்திணைப் பெயர்

கண்ணனை, கண்ணனால் - பெயருக்குப் பின் ஐ, ஆல் என்னும் வேற்றுமை உருபுகள் வந்துள்ளன.

நிலம் - அஃறிணைப் பெயர் - நிலத்தை, நிலத்தால் - பெயருக்குப் பின் உருபுகள் நின்றன.

| | | |
|---|---|---|
| கண்ணன் | - பெயர் வேற்றுமை | |
| கண்ணனை | - கண்ணன் | - செயப்படு பொருள் (ஐ) |
| கண்ணனால் | - கண்ணன் | - கருவிப் பொருள் (ஆல்) |
| கண்ணா | - விளி | |

இங்கு வேற்றுமை உருபுகள் பெயரின் பொருளை வேறுபடுத்தி வந்துள்ளன.

பெயரினது விகாரமே விளி வேற்றுமை ஆகும். எனவே விளி வேற்றுமையைப் பெயர் வேற்றுமையுள் அடக்கி வேற்றுமையின் வகைகளை ஏழென சொல்வதும் உண்டு. அதனை மறுத்து வேற்றுமை எட்டே என உறுதிபடக் கூறுகிறார் நன்னூலார்.

### வேற்றுமையின் பெயரும் முறையும்

**பெயரே ஐஆல் குஇன் அதுகண்**
**விளிஎன்று ஆகும் அவற்றின் பெயர்முறை. (நன் - 292)**

வேற்றுமையானது, 1. பெயர் வேற்றுமை, 2. ஐ, 3. ஆல், 4. கு, 5. இன், 6. அது 7. கண், 8. விளி வேற்றுமை என்னும் எட்டு வகை ஆகும். இவையே, இவற்றைச் சொல்லும் வரிசை முறையாக,

| | | |
|---|---|---|
| 1. முதல் வேற்றுமை | - முருகன் | |
| 2. இரண்டாம் வேற்றுமை | - ஐ | - முருகனை |
| 3. மூன்றாம் வேற்றுமை | - ஆல் | - முருகனால் |
| 4. நான்காம் வேற்றுமை | - கு | - முருகனுக்கு |
| 5. ஐந்தாம் வேற்றுமை | - இன் | - முருகனின் |
| 6. ஆறாம் வேற்றுமை | - அது | - முருகனது |
| 7. ஏழாம் வேற்றுமை | - கண் | - முருகன்கண் |
| 8. எட்டாம் வேற்றுமை | - முருகா | |

என்றும் அழைக்கப்படுகிறது.

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமையான எழுவாய் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமையான விளி வேற்றுமைக்கும் உருபுகள் கிடையாது. ஏனைய இரண்டு முதல் ஏழு வரைக்குமான வேற்றுமைகள் முறையே ஐ முதல் கண் வரைக்குமான உருபுகளை உடையதாய் அமைகின்றன.

திரிபடையாத பெயரே முதல் வேற்றுமை ஆகும். எனவே பெயர் வேற்றுமை முதலில் கூறப்பட்டுள்ளது. பெயரே சிறிது திரிந்து விளிக்கும் தன்மை கொண்டாகும். அக்காரணத்தால் விளி வேற்றுமை ஈற்றில் வைக்கப் பட்டுள்ளது. படர்க்கையில் இருப்பவரை முன்னிலைக்கு அழைப்பதே விளி ஆகும். படர்க்கைப் பெயர்கள் மட்டுமே விளி உருபினை ஏற்று வரும். தன்மை, முன்னிலைப் பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப்பெயர்களும் விளி உருபினை ஏற்காது.

## முதல் வேற்றுமை ஏற்கும் உருபுகள்

**ஆறன் உருபும் ஏற்கும்அவ் உருபே. (நன் - 293)**

பெயராக நிற்கும் எழுவாய் வேற்றுமை ஐ, ஆல், கு, இன் அது, கண் என்னும் ஆறு உருபுகளையும் ஏற்று அமையும்.

**எ.கா.**

கண்ணன் - கண்ணனை, கண்ணனால், கண்ணனுக்கு,
கண்ணனின், கண்ணனது, கண்ணன்கண்

இவ்வாறாக இரண்டு முதல் ஏழ் ஈறாகிய ஆறு உருபுகளையும் பெயர் ஏற்று வரும்.

## வேற்றுமை உருபுகளை ஏற்காத பெயர்கள்

**நீயிர் நீவிர் நான் எழுவாய் அலபெறா. (நன் - 294)**

நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்கள் 'நும்' எனத் திரிந்தே நும்மை, நும்மால், நுமக்கு, நுமது என வேற்றுமை உருபுகளை ஏற்று வரும். ஆனால் இவை நேரடியாக வேற்றுமை உருபுகளை ஏற்பதில்லை.

**எ.கா.**

நீயிர்,நீவிர் - நும்,உம் - நும்மை,உம்மை

நான் என்னும் தன்மைப் பெயர் 'என்' என திரிந்தே என்னை, என்னால், எனக்கு, எனது என வேற்றுமை உருபுகளை ஏற்கும். இதுவும் நேரடியாக வேற்றுமை உருபுகளை ஏற்பதில்லை

நான் - என் - எனக்கு,எனது

நான் என்னும் தன்மை பெயர் 'நன்' என திரிதலும் வேற்றுமை உருபுகளை ஏற்பதும் இல்லை.

எழுவாய் அலபெறா என்று கூறப்பட்டதால் மேற்கூறிய பெயர்கள் அழைப்பதற்கும் பொருந்தாது.

## பெயர் வேற்றுமை

பெயர் வேற்றுமையை முதல் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை எனவும் கூறுவர். இதன் உருபு திரிபில்லாத பெயர்ச்சொல்லாகும். பெயர்ப் பொருளைச் செய்பவனாக, கருத்தாவாகத் தன்னைத் தானே வேற்றுமை செய்து கொள்ளும். எனவே இது எழுவாய் வேற்றுமை ஆயிற்று.

இவ்வுலகம் பல பொருள்களின் தொகுதியாகும். இவற்றுள் ஒன்றைப் பெயராகச் சுட்டி முதலில் வேற்றுமை செய்த பின்னரே அப்பெயரோடு வேற்றுமைக்கு ஏற்ற உருபு இணைக்கப்படும். மலை, கடல், யானை, பெண் போன்றவற்றுள் ஒன்று முதலில் பெயராகவே வேற்றுமை செய்யப்படும். பின்னர் மலையை, மலையால் என்பன போலப் பொருளுக்கு ஏற்ற வேற்றுமை உருபைப் பெறும்.

**எழுவாய் உருபு திரிபில் பெயரே**
**வினைபெயர் வினாக்கொளல் அதன்பயன் நிலையே. (நன் - 295)**

பெயர் வேற்றுமை முதல் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை, கருத்தா வேற்றுமை எனவும் பெயர் பெறும். இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை. இது கருத்தா பொருளை ஏற்று வரும் திரிபில்லாத பெயராகும். மேலும் வினை, பெயர், வினா என்பவற்றை பயனிலையாக ஏற்று வரும்.

**எ.கா**

1. கண்ணன் வந்தான் - வந்தான் - தெரிநிலை வினை
   கண்ணன் நல்லன் - நல்லன் - குறிப்பு வினை
2. கண்ணன் அவன் - அவன் - பெயர்
3. கண்ணன் யார்? - யார் - வினா

எழுவாய் வேற்றுமை வினை முதலாகிய மூன்றையும் பயனிலையாகக் கொள்ளும். பால்களுக்கு ஏற்ப ஆனவன், ஆவான், என்பவன் போன்றவை சொல்லலுருபுகளாய் வரும்.

கண்ணன் என்பவன் - இத்தொடரில் என்பவன் என்பது உயர்திணை ஆண்பால் சொல்லுருபாகும்.

## இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்று கூறுவர். உருபின் காரணமாக ஐ வேற்றுமை என்றும் குறிப்பிடப்பெறும். இது ஒரு பொருளின் இயல்பான பெயரைச் செயப்படுபொருளாக (தொழிற்படு பொருளாக) வேற்றுமைப் படுத்துவது. ஒருவன் ஒரு வினையைச் செய்ய அதனால் தோன்றிய பொருள் செயப்படுபொருள் என்பர். கொண்டு, உடன் என்பன இரண்டாம் வேற்றுமைக்கான சொல்லுருபுகள் ஆகும்.

**எ.கா**. குடத்தை வனைந்தான்

இத்தொடரில் வனைதல் என்பது கருத்தாவின் தொழிலை உணர்த்துகிறது. கருத்தாவால் செய்யப்பட்ட பொருள் குடமாகும்.

**இரண்டா வதன் உருபு ஐயே அதன்பொருள்**
**ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஒத்தல் உடைமை ஆதி ஆகும். (நன் - 296)**

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாகும். இவ்வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல் , நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் ஆறு பொருள்களில் அமைகிறது.

**எ.கா**

1. ஆக்கல் - வீட்டைக் கட்டினான், குடத்தை வனைந்தான்.
2. அழித்தல் - கோட்டையை இடித்தான், குடத்தை உடைத்தான்.
3. அடைதல் - கோயிலை அடைந்தான், ஊரை அடைந்தான்.
4. நீத்தல் - அரசைத் துறந்தான், மனைவியைத் துறந்தான்.
5. ஒத்தல் - கண்ணை ஒத்தான், புலியைப் போன்றவன்.
6. உடைமை - கல்வியை உடையான், பொருளை உடையான்.

ஆதி என்றதால் வீட்டை விரும்பினான், நூற்பொருளை அறிந்தான் எனவும் வரும்.

செயப்படுபொருள் 1. கருத்தில் செயப்படுவது, 2. கருத்தின்றிச் செயப்படுவது, 3. இருமையில் செயப்படுவது என மூவகைப்படும்.

1. சோற்றை உண்டான் - கருத்தில் செய்தல்
2. சோற்றைக் குழைத்தான் - கருத்தின்றிச் செய்தல்
3. பதரையும் நெல்லையும் கொண்டான்

   பதர் - கருத்தின்றிச் செய்தது.

   நெல் - கருத்தில் செய்தது.

## மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமையைக் கருவிப் பொருள் வேற்றுமை என்றும் கூறுவர். உருபின் காரணமாக ஆல் வேற்றுமை எனவும் கூறப்படும். இதன் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாகும்.

**மூன்றா வதன்உருபு ஆல்ஆன் ஒடுஓடு**
**கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன்பொருள். ( நன் - 297)**

மூன்றாம் வேற்றுமையின் உருபு ஆல் என்னும் உருபொடு ஆன், ஒடு, ஓடு என்பனவும் ஆகும். அவ்வுருபுகள் தம்மை ஏற்ற பெயர்ப் பொருளைக் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என மூவகையாய் வேறுபடுத்தும்.

**எ.கா.**

**கருவி**

வாளால் வெட்டினான்
வாளான் வெட்டினான்

இத்தொடர்களில் வெட்டுதல் கருத்தாவின் தொழிலையும் ‘வாள்’ அதற்குக் காரணமான கருவியாகவும் அமைவதைக் காணலாம். இவ்வாறு அமைவதை கருவிப் பொருள் என்பர். இக்கருவி பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

**முதற்கருவி**

மரத்தால் நாற்காலி செய்தான் - மரமே நாற்காலி ஆனதால் இங்கு மரம் என்பது முதற்கருவி ஆகும்.

**துணைக்கருவி**

உளி கொண்டு நாற்காலி செய்தான் - நாற்காலி செய்வதற்கு உளி துணையாய் நிற்பதால் இங்கு உளி துணைக்கருவி ஆயிற்று.

கருத்தா

அரசரால் கோயில் கட்டப்பட்டது.
அரசரான் கோயில் கட்டப்பட்டது.

இத்தொடரில் அரசர் என்னும் கருத்தாப்பொருள் செயப்படுபொருளோடு செயப்பாட்டுவினைப் பயனிலையைக் கொண்டு முடிகிறது. இவ்வாறு அமைவதை கருத்தா பொருள் என்பர்.

**கருத்தா**

இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இருவகைப்படும்.

**இயற்றுதல் கருத்தா**

ஒருவர் ஒரு தொழிலை தானே செய்வது இயற்றுதல் கருத்தாகும்.

**எ.கா.**

வள்ளுவரால் திருக்குறள் எழுதப்பட்டது

**ஏவுதல் கருத்தா**

ஒருவர் ஒரு தொழிலை பிறரைக் கொண்டு செய்விப்பது ஏவுதல் கருத்தாவாகும்.

**எ.கா.**

கரிகாலன் கல்லணை கட்டப்பட்டது

**உடனிகழ்ச்சி**

ஆசிரியரொடு வந்தான்
ஆசிரியரோடு வந்தான்

இத்தொடர்களில் ஆசிரியர் என்பது வருதல் என்னும் வினையைக் கொண்டு முடிகிறது. அவ்வினை தன்னுடன் வினை நிகழ்த்தும் மற்றொன்றினையும் சுட்டுகிறது. இவ்வாறு அமைவதனை உடனிகழ்ச்சிப் பொருள் என்பர்.

உடனிகழ்ச்சி பொருள் தலைமைப் பொருள், தலைமை இல்லாத பொருள் என இருவகைப்படும். தலைமை பொருள் என்பது உயர்ந்ததை குறிக்கும்.

**எ.கா.**

இது ஆசிரியரோடு மாணவர் வந்தார் - ஆசிரியர் தலைமைப் பொருள்
அமைச்சரோடு அரசர் வந்தார் - அமைச்சர் தலைமை இல்லாப் பொருள்

மூன்றாம் வேற்றுமையில் கொண்டு, உடன் என்பனவும் சொல்லுருபுகளாக வரும்.

கோல் கொண்டு எழுதினான் - கருவிச் சொல்லுருபு
மனைவியுடன் கணவன் வந்தான் - உடனிகழ்ச்சிச் சொல்லுருபு.

## நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமையைக் கோடற் பொருள் வேற்றுமை என்றும் கூறுவர். இது உருபால் ‘கு’ வேற்றுமை என்றும் குறிக்கப்பெறும். பொருட்டு, நிமித்தம், ஆக போன்றன இதன் சொல்லுருபுகளாக அமையும்.

**நான்கா வதற்குஉருபு ஆகும் குவ்வே**
**கொடைபகை நேர்ச்சி தகவுஅது ஆதல்**
**பொருட்டுமுறை ஆதியின் இதற்குஇது எனல்பொருளே. (நன் - 298)**

நான்காம் வேற்றுமைக்கு உருபு ‘கு’ என்னும் ஒன்றே ஆகும்.இவ்வேற்றுமை கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பொருள்களில் இதற்கு இது என்னும் வாய்பாட்டில் வரும்.

**எ.கா.**

1. கொடை - ஆசிரியர் மாணவிக்கு இலக்கணம் கற்பித்தார்
2. பகை - எலிக்கு பூனை பகை
3. நேர்ச்சி (நட்பு) - குசேலருக்குக் கண்ணன் நண்பன்
4. தகுதி - இராமனுக்கு தகுந்தவர் சீதை
5. அதுவாதல் - ஆடைக்கு நூல்
6. பொருட்டு - கூலிக்கு வேலை
7. முறை - மாதவிக்கு மகள் மணிமேகலை

ஆதி என்றதனால்,

மழைக்கு மின்னல் - அறிகுறியால் குறிக்கப்படுவது

அவனுக்கு இது போதும் - குறைவின்மையைக் குறித்தது

குமரிக்கு வடக்கு மதுரை - எல்லைப் பொருளில் நின்றது.

என்ற பொருளிலும் நான்காம் வேற்றுமை உருபுகள் வருவதுண்டு.

**சொல்லுருபுகள்**

நான்காம் வேற்றுமையில் பொருட்டு, நிமித்தம், ஆக என்பவை சொல்லுருபுகளாக வருகின்றன.

1. பொருட்டு - கூலியின் பொருட்டு வேலை
2. நிமித்தம் - மக்கள் நிமித்தம் பாடுபட்டான்
3. ஆக - கூலிக்காக வேலை செய்தான்

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமையை இதனின் இத்தன்மைத்து வேற்றுமை என்றும் கூறுவர். உருபின் காரணமாக இன் வேற்றுமை எனவும் அழைக்கப்படுகிறது. இல் என்பதும் ஐந்தாம் வேற்றுமை உருபாகும். இவை தம்மை எற்ற பெயர்ப் பொருளை நீக்கல் முதலிய பொருள்களாக வேற்றுமை செய்யும். நின்று, இருந்து என்பன இதன் சொல்லுருபுகளாகும்.

**ஐந்தா வதன்உருபு இல்லும் இன்னும்**
**நீங்கல்ஒப்பு எல்லை ஏதுப் பொருளே. (நன் - 299)**

ஐந்தாம் வேற்றுமைக்கு இல், இன் ஆகிய இரண்டும் உருபுகளாகும். இவ்உருபுகள் தம்மை ஏற்ற பெயர்ப் பொருளை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது ஆகிய நான்கு பொருள்களாக வேற்றுமை செய்யும்.

**எ.கா.**

1. நீங்கல் - மலையின் வீழ் அருவி,
   - மலையில் வீழ் அருவி
2. ஒப்பு - இராமனின் நல்லவன் பரதன்,
   - இராமனில் நல்லவன் பரதன்
3. எல்லை - குமரியின் கிழக்குக் கடல்
   - குமரியில் கிழக்கு கடல்
4. ஏது - கல்வியின் பெரியவர் கம்பர்,
   - கல்வியில் பெரியவர் கம்பர்

**சொல்லுருபுகள்**

1. நின்று - மலையினின்று அருவி விழுகிறது
2. இருந்து - மரத்திலிருந்து பழம் விழுந்தது

## ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமையை உடைமை வேற்றுமை என்றும், கிழமை வேற்றுமை என்றும் கூறுவர். உருபின் அடிப்படையில் அது வேற்றுமை என்று அழைக்கப்பெறும். இது தம்மை ஏற்ற பெயர்ப்பொருளை உறவுப் பொருளாக வேற்றுமை செய்யும். அது தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகைப்படும்.

**தற்கிழமை**

தற்கிழமையாவது பொருளை விட்டு நீங்காத தன்மை உடையது. அதாவது பிரியாத உறவு.

**எ.கா.** மலரது மணம், கற்கண்டினது சுவை

**பிறிதின் கிழமை**

பிறிதின் கிழமையாவது பொருளினின்றும் வேறாகும் தன்மை உடையது. அதாவது பிரியும் உறவு.

**எ.கா.** அரசரது வாள், எனது சட்டை

**ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்**
**பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புஉறுப்பு**
**ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்**
**திரிபின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்**
**பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. (நன் - 300)**

ஆறாம் வேற்றுமைக்கு ஒருமையில் அது, ஆது என்னும் இரண்டும் உருபுகளாகும். பன்மைக்கு 'அ' என்பது உருபாகும். இவை பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருள்களையும் அவையல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையும் உடையனவாக வரும்.

1. பண்பு - குணம்
2. உறுப்பு - சினை
3. ஒன்றன் கூட்டம் - ஒரு பொருளின் கூட்டம்
4. பலவின் ஈட்டம் - பல பொருள்களின் கூட்டம்
5. திரிபின் ஆக்கம் - ஒன்று திரிந்து வேறொன்றாதல்.

**எ.கா.**

**தற்கிழமை**

1. பண்பு - காக்கையது நிறம் கருமை
2. உறுப்பு - கிளியது சிறகு
3. ஒன்றன் கூட்டம் - மக்களது கூட்டம்
4. பலவின் ஈட்டம் - பறவையது கூட்டம்
5. திரிபின் ஆக்கம் - நெல்லினது பொறி

**பிறிதின் கிழமை**

பொருளினின்று வேறாகும் தன்மையுடைய பிறிதின்கிழமை பொருள், இடம், காலம் என மூன்று வகைப்படும்.

1. பொருள் பிறிதின்கிழமை - சாத்தனது பசு
2. இடப் பிறிதின் கிழமை - உனது கல்லூரி
3. காலப் பிறிதின் கிழமை - முருகனது திருநாள்

**சொல்லுருபு**

ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபு உடைய என்பதாகும்.

**எ.கா.**

என்னுடைய புத்தகம் - ஒருமை

அண்ணனுடைய புத்தகங்கள் - பன்மை

## ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமையை இட வேற்றுமை என்றும் கூறுவர். இதற்குப் பல உருபுகள் இருந்தாலும் கண் என்னும் உருபே சிறப்பானதாக கருதப்படுகிறது. இதனால் இவ்வேற்றுமை கண் வேற்றுமை எனவும் அழைக்கப்படுகிறது.

தம்மை ஏற்ற பெயர்ப்பொருளைப் பொருள் முதலாக வேற்றுமை செய்யும். அப்போது 1. தற்கிழமை 2. பிறிதின் கிழமை என இரண்டாகி நிற்கும்.

**ஏழன் உருபுகண் ஆதி ஆகும்**
**பொருள்முதல் ஆறும் ஓர்இரு கிழமையின்**
**இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப. (நன் - 301)**

ஏழாம் வேற்றுமைக்கு கண் முதலிய பல உருபுகள் உள்ளன. இவ்உருபுகள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறொடும் வரும். தற்கிழமை, பிறிதின் கிழமை ஆகிய இரண்டு கிழமைப் பொருள்களுக்கு இடமாகவும் நிற்கும்.

**எ.கா.**

**1. பொருள்**

விளக்கின் கண் உள்ளது ஒளி - தற்கிழமை
மரத்தின் கண் இருப்பது கிளி - பிறிதின் கிழமை

**2. இடம்**

இல்லத்தின் கண் உள்ளது கூரை - தற்கிழமை
மலையின்கண் நிற்பது மரம் - பிறிதின் கிழமை

**3. காலம்**

மாதத்தின் கண் உள்ளது நாள் - தற்கிழமை
மாலையின்கண் மலர்வது முல்லை - பிறிதின் கிழமை

**4. சினை**

கையின்கண் உள்ளது விரல் - தற்கிழமை
கையின்கண் இருப்பது கடிகாரம் - பிறிதின் கிழமை

**5. பண்பு**

நிலத்தின் கண் தெரிவது அழகு - தற்கிழமை
இளமைக்கண் தேடுவது செல்வம் - பிறிதின் கிழமை

**6. தொழில்**

பாடல் கண் வருவது இசை - தற்கிழமை
ஆடற்கண் இசைப்பது பாட்டு - பிறிதின் கிழமை

## ஏழாம் வேற்றுமையின் உருபுகள்

**கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்**
**முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்**
**பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி**
**உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே. (நன் -302)**

கால் முதலாகக் கூறப்பட்ட இருபத்தேழு உருபுகளுடன் கண் என்னும் உருபையும் சேரத்து ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இருபத்தெட்டு ஆகும். இவை இடப்பொருளை உணர்த்தும் தன்மையை உடையன.

**எ.கா**

1. கண் - மரத்தின் கண் குயில்
2. கால் - ஊர்க் கால் நிவந்த பொதும்பர்
3. கடை - ஈதல் இயையாக் கடை
4. இடை - வீட்டினிடைப் புகுந்தான்
5. தலை - நனந்தலை வந்த நல்லோர்
6. வாய் - திரைவாய்க் கப்பல் தள்ளாடியது
7. திசை - ஊர்த்திசை ஓசை
8. வயின் - அவர்வயின் செல்
9. முன் - கல்லூரி முன் நில்
10. சார் - காட்டுச்சார் ஓடும் முயல்
11. வலம் - கைவலம் கொடு
12. இடம் - இல்லிடம் இருந்தாள்
13. மேல் - மரத்தின்மேல் பறவை
14. கீழ் - மரத்தின் கீழ் நிழல்
15. புடை - ஊர்ப்புடை வந்தான்
16. முதல் - ஊர்முதல் சென்றான்
17. பின் - அண்ணன்பின் தம்பி சென்றான்
18. பாடு - நம்பாடு அணையாத நாள்
19. அளை - கல்லளைச் சுனைநீர்
20. தேம் - இந்தியத் தேத்து வாழ்கிறோம்
21. உழை - அமைச்சன் அரசனுழைச் சென்றான்
22. வழி - வேங்கை நிழல்வழிச் சென்றான்
23. உழி - உறையுழிக் கத்தி உள்ளது
24. ஒளி - சோலையுளிக் கிளிகள் இருந்தன
25. உள் - இல்லத்தினுள் வா
26. அகம் - நாட்டகம் வாழ்
27. புறம் - நகர்ப்புறம் போ
28. இல் - கல்லூரியில் படி

## எட்டாம் வேற்றுமை

எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என்றும் கூறுவர். விளித்தல் என்பது அழைத்தல் எனப் பொருள்படும். படர்க்கை இடப்பொருளைத் தனக்கு எதிர்முகமாக அழைப்பதால் விளிக்கப்படும் பொருள் எட்டாம் வேற்றுமைப் பொருளாயிற்று. இது அண்மை

விளி (அருகில் இருப்பவரை அழைப்பது), சேய்மை விளி (தொலைவில் இருப்பவரை அழைப்பது) என இருவகைப்படும். சேய்மை விளியின் ஈறே பல மாறுதல்களை அடைந்து அழைக்கப் பயன்படும்.

**எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்**
**திரிபு குன்றல் மிகுதல் இயல்புஅயல்**
**திரிபும் ஆம்பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முகம் ஆகத் தான்அழைப் பதுவே. (நன் - 303)**

படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக வேற்றுமைப்படுத்துவது எட்டாம் வேற்றுமையின் பொருளாகும்.

1. விளி ஏற்கும் பெயர்களின் இறுதி திரிதல்
2. பெயர்களின் இறுதி கெடுதல்
3. பெயர்களின் இறுதியில் மிகுதல்
4. பெயர்களின் இறுதி இயல்பாதல்
5. பெயர்களின் இறுதிக்கு அயல் நின்ற எழுத்து திரிதல்

ஆகியன எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் ஆகும்.

**எ.கா.**

1. தம்பீ , தோழீ - ஈறு திரிதல்
2. பாண்டிய, அரச - ஈறு கெடுதல்
3. மன்னவனே, மகனே - ஈறு கெடுதல்
4. தம்பி , தோழி - இயல்பாதல்
5. மக்காள், அரசீ - ஈற்றயல் திரிதல்

## பெயர்கள் விளி பெறுதல்

பெயர்கள் உயர்திணைப் பெயர்கள், அ.்.றிணைப் பெயர்கள், இருதிணைப் பொதுப்பெயர்கள் என மூன்று வகைப்படும். அவை அனைத்தும் விளியை ஏற்பதில்லை. உயிரீறுகளையும் மெய்யீறுகளையும் உடைய பெயர்களுள் சில வரன்முறைக்குட்பட்டு விளியை ஏற்பனவும் உள்ளன. அவ்வாறு ஏற்காதனவும் உள்ளன. விளிப்பதற்கு (அழைப்பதற்கு) ஏற்றாற் போல அமைந்த பெயர்கள் விளி ஏற்கும் பெயர்கள் ஆகும்.

**இஉ ஊவோடு ஐஓ னளரல**
**யவ்வீற்று உயர்திணை ஓரஅல் இவற்றொடு**
**ண.்.கான் ஆஈறு ஆகும் பொதுப்பெயர்**
**ஞநஒழி அனைத்துஈற்று அ.்.றிணை விளிப்பன. (நன் - 304)**

உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் ஈறாக உடைய 1. உயர்திணைப் பெயர்கள் 2. பொதுப் பெயர்கள் 3. அ.்.றிணைப் பெயர்கள் ஆகியவை விளி ஏற்பன.

இவற்றில் இ, உ, ஊ, ஐ, ஓ என்னும் ஐந்து உயிர் எழுத்துக்களையும் ன, ள, ர, ல,ய என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களையும் இறுதியாகக் கொண்ட உயர்திணை பெயர்கள் பத்தும் விளி ஏற்று வரும்.

**எ.கா.**

| | |
|---|---|
| நம்பி | - இ |
| வேந்து | - உ |
| ஆடு | - ஊ |
| விடலை | - ஐ |
| கோ | - ஓ |
| ஐயன் | - ன் |
| வேள் | - ள் |
| வணிகர் | - ர் |
| தோன்றல் | - ல் |
| சேய் | - ய் |

உயர்திணைக்கு ஈராக அமைந்த பத்து எழுத்துக்களுள் ஓகார உயிரும் ரகர மெய்யும் தவிர்த்த ஏனைய இ, உ, ஊ, ஐ, ன, ள, ல, ய எனும் எட்டு எழுத்துக்களுடன் ஆ என்னும் உயிரையும் ண் என்னும் மெய்யையும் ஈறாகக் கொண்ட பத்து இருதிணைப் பொதுப்பெயர்களும் விளி ஏற்பன.

**எ.கா.**

| | |
|---|---|
| சாத்தி | - இ |
| கூற்று | - உ |
| பேடு | - ஊ |
| தந்தை | - ஐ |
| சாத்தன் | - ன் |
| கடவுள் | - ள் |
| தூங்கல் | - ல் |
| தாய் | - ய் |
| ஆண் | - ண் |
| பிதா | - ஆ |

12 உயிர்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் 11 மெய்களும் குற்றியலுகரமும் ஆகிய 24 எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வருவனவாகும். இவற்றுள் ஞகர, நகரங்களும், அளபெடையில் மட்டுமே ஈராகும் எகர, ஒகர, ஔகாரம் நீங்கலாக உள்ள 19 எழுத்துக்களையும் ஈற்றில் கொண்டுள்ள அ∴றிணைப் பெயர்கள் விளி ஏற்கும் தன்மை உடையன .

எ.கா.

| | | |
|---|---|---|
| மக | - | அ |
| புறா | - | ஆ |
| கிளி | - | இ |
| தீ | - | ஈ |
| முசு | - | உ |
| பூ | - | ஊ |
| சே | - | ஏ |
| நாரை | - | ஐ |
| கோ | - | ஓ |
| மண் | - | ண் |
| கராம் | - | ம் |
| அலவன் | - | ன் |
| நாய் | - | ய் |
| தகர் | - | ர் |
| குயில் | - | ல் |
| தெவ் | - | வ் |
| பூழ் | - | ழ் |
| வண்டு | - | குற்றியலுகரம் |

## பொது விளி உருபுகள்

**இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்**
**இகர நீட்சியும் உருபாம் மன்னே. (நன் - 305)**

உயர்திணைப் பெயர்கள், பொதுப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் என்னும் மூவகைப் பெயர்களில் இயல்பாதலும், ஏகாரம் மிகுதலும், இறுதி இகரம் ஈகாரமாகத் திரிதலும் என்னும் மூன்றும் விளி வேற்றுமைக்குரிய உருபுகளாம்.

**எ.கா.**

**உயர்திணைப் பெயர்கள்**

1. நம்பி வா, தோழி வா - இயல்பு
2. வேந்தே வா, இராமனே வா - ஏகாரம் மிகுதல்
3. நம்பீ வா, தம்பி வா - இகரம் ஈகாரமாதல்

**பொதுப்பெயர்கள்**

1. சாத்தி பேசு, அன்னை பார் - இயல்பு
2. பெண்ணே நில், தாயே கொடு - ஏகாரம் மிகுதல்
3. சாத்தீ போ, கொற்றீ வா - இகரம் ஈகாரமாதல்

**அஃறிணைப் பெயர்கள்**

1. கிளி பேசு, குயில் பாடு - இயல்பு
2. தமிழே வாழ்க, பூவே பூச்சூடவா - ஏகாரம் மிகுதல்
3. தும்பீ வா, கிளி கேள் - இகரம் ஈகாரமாதல்.

## ஐகார ஈற்றுப்பெயர்களின் விளி உருபுகள்

**ஐ இறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்**
**உருபாம் அல்லவற்று ஆயும் ஆகும். (நன் - 306)**

ஐகாரத்தை இறுதியாக உடைய பொதுப்பெயர்களில் ஐகார இறுதி ‘ஆய்’ என்றும் ‘ஆ’ என்றும் திரியும். உயர்திணை, அஃறிணை என்னும் இருவகை பெயர்களின் ஐகார இறுதி ஆய் என்று திரியும்.

**எ.கா.**

**1. பொதுப்பெயர்கள்**

அன்னை - அன்னாய் - ‘ஐ’ - ஆய் ஆதல்

அம்மை - அம்மா - ‘ஐ’ - ஆ ஆதல்

**2. உயர்திணைப் பெயர்கள்**

விடலை - விடலாய் - ‘ஐ’ - ஆய் ஆதல்

நங்கை - நங்காய் - ‘ஐ’ - ஆய் ஆதல்

**3. அஃறிணைப் பெயர்கள்**

நாரை - நாராய் - ‘ஐ’ - ஆய் ஆதல்

முல்லை - முல்லாய் - ‘ஐ’ - ஆய் ஆதல்

## னகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளி உருபுகள்

**ஒருசார் னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண்**
**அளபுஈறு அழிவுஅயல் நீட்சி அதனோடு**
**ஈறு போதல் அவற்றொடு ஓஉறல்**
**ஈறுஅழிந்து ஓஉறல் இறுதிஅவ் ஆதல்**
**அதனோடு அயல்திரிந்து ஏஉறல் ஈறு அழிந்து**
**அயல்ஏ ஆதலும் விளிஉருபு ஆகும். (நன் - 307)**

னகர ஈற்று உயர்திணைப் பெயர்களுள் 1. சில அளபெடை ஆகும். 2. சில பெயர்களின் இறுதி எழுத்துக் கெடும். 3. சில பெயர்களின் ஈற்றயல் எழுத்து நெடிலாகி, இறுதி எழுத்துக் கெட்டு, ஓகாரம் மிகும். 4. சில பெயர்களின் இறுதி எழுத்துக் கெட்டு ஓகாரம் மிகும். 5. சில பெயர்களின் இறுதி யகர மெய் ஆகும். 6. சில பெயர்கள் இறுதி

யகர மெய் ஆகி, ஈற்றயலில் உள்ள ஆகாரம் ஓகாரம் ஆகி, ஏகாரம் மிகும். 7. சில பெயர்கள் இறுதி கெட்டு, ஈற்றயல் எழுத்து அகரம் ஏகாரமாகத் திரியும். இவ்வாறு னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் ஏழு விளியுருபுகளை உடையன.

**எ.கா.**

**1. அளபெடை ஆதல்**

அதியமான் - அதியமாஅன்.

**2. இறுதி கெடல்**

பாண்டியன் - பாண்டிய.

**3. ஈற்றயல் நீண்டு, இறுதி கெட்டு, ஓகாரம் மிகுதல்**

அண்ணன் - அண்ணாவோ

**4. இறுதி கெட்டு ஓகாரம் மிகுதல்**

ஐயன் - ஐயவோ

**5. இறுதி யகர மெய் ஆதல்**

வாயிலான் - வாயிலாய்

**6. இறுதி யகர மெய் ஆகி, ஈற்றயல் திரிந்து, ஏகாரம் மிகுதல்**

வாயிலான் - வாயிலோயே

**7. இறுதி கெட்டு, ஈற்றயல் ஏகாரமாகத் திரிதல்**

முருகன் - முருகே

## ளகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளி உருபுகள்

**ள.்.கான் உயர்பெயர்க்கு அளபுஈறு அழிவுஅயல்**
**நீட்சி இறுதி யவ்வொற்று ஆதல்**
**அயலில் அகரம்ஏ ஆதலும் விளித்தனு. (நன் - 308)**

பொது விதி அன்றி ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும் போது சிறப்பு விதியால் பல மாறுதல்களை அடையும். அவை,

1. அளபெடுத்தல்
2. சிலவற்றின் ஈறு கெடுதல்
3. சிலவற்றின் அயல் நீளுதல்
4. சில இறுதி ளகர ஒற்று யகர ஒற்றாதல்
5. சிலவற்றின் ஈற்றயல் அகரம்

ஏகாரமாதல்.

இவை ளகர ஈற்றுப் பெயர்களின் விளி உருபுகளாகும்.

**எ.கா.**

1. வேள் - வேஎள் - அளபெடுத்தது
2. எல்லாள் நீ - எல்லா நீ - ஈறு கெட்டது
3. நமர்கள் - நமர்காள் - ஈற்றயல் நீண்டது
4. கரியாள் - கரியாய் - ளகரம் யகரமாயிற்று
5. அடிகள் - அடிகேள் - ஈற்றயல் அகரம் ஏகாரம் ஆயிற்று.

## ரகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளி உருபுகள்

**ரவ்ஈற்று உயர்பெயர்க்கு அளபுஎழல் ஈற்றுஅயல்**
**அகரம் இஈ ஆதல் ஆண்டைஆ**
**ஈஆதல் அதனோடு ஏஉறல் ஈற்றுஏ**
**மிக்குஅயல் யாக்கெட்டு அதன்அயல் நீடல்**
**ஈற்றின் ஈர்உறல் இவையும்ஈண்டு உருபே. (நன் - 309)**

ரகர ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்கும்போது சில சிறப்பு விதிகளை அடையும். அவை,

1. அளபெடுத்தல்
2. சிலவற்றின் ஈற்றயலில் உள்ள அகரம் இகரமாகவும் ஈகாரமாகவும் மாறுதல்
3. சிலவற்றின் ஈற்றயல் ஆகாரம் ஈகாரம் ஆதல்
4. சிலவற்றின் ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகி ஏகாரத்தைப் பெறுதல்
5. சிலவற்றின் ஈற்றில் ஏ மிகுந்து ஈற்றயல் நின்ற 'யா' கெடுதல். அதன் அயல் எழுத்தாகிய இகரம் ஈகாரம் ஆதல்
6. சிலவற்றின் ஈற்றில் ஈர் என வருதல்.

இவை அனைத்தும் ரகர ஈற்று விளி உருபுகளாகும்.

**எ.கா.**

1. சிறார் - சிறாஅர் - அளபெடுத்தது
2. வேந்தர் - வேந்தீர் - ஈற்றயல் அகரம் இகரமாயிற்று
   வணிகர் - வணிகீர் - ஈற்றயல் அகரம் ஈகாரம் ஆயிற்று
3. சான்றார் - சான்றீர் - ஈற்றயல் ஆகாரம் ஈகாரம் ஆயிற்று
4. முனிவர் - முனியீரே - ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகி ஈறு ஏகாரம் பெற்றது.
5. தோழியர் - தொழியரே - தோழிரே - தோழீரே - ஈற்றில் ஏகாரம் மிகுந்து ஈற்றியல் யா கெட்டது. அயல் இகரம் ஈகாரம் ஆயிற்று
6. எமர் - எமரீர் - இறுதியில் ஈர் ஏற்றது

## லகர, யகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளி உ உருபுகள்

**லகாரஈற்று உயர்பெயர்க்கு அளபுஅயல் நீட்சியும்**
**யகார ஈற்றிற்கு அளபுமாம் உருபே. (நன் - 310)**

லகர, யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் பொது விதியன்றிச் சிறப்பு விதியால் சில விளி உருபுகளைப் பெறும். அவை,

1. சில லகர ஈற்றுப் பெயர்கள் அளபெடுக்கும்
2. சிலவற்றின் ஈற்றயல் எழுத்து நெடிலாகும்.
3. யகர ஈற்று உயர்திணைப் பெயர் அளபெடுக்கும்.

**எ.கா.**

1. மால் - மாஅல் - லகர ஈறு அளபெடுத்தது
2. தோன்றல் - தோன்றால் - லகர ஈறு ஈற்றயல் நீண்டது
3. சேய் - சேஎய் - யகர ஈறு அளபெடுத்தது

## னகர ஈற்று அ.்.றிணை, பொதுப்பெயர்களின் விளி உருபுகள்

**னவ்ஈற்று உயர்திணை அல்இரு பெயர்க்கண்**
**இறுதி அழிவுஅத னோடுஅயல் நீட்சி. (நன் - 311)**

னகர ஈற்று அ.்.றிணைப் பெயரும் பொதுப்பெயரும் சிறப்பு விதியால் சில விளி உருபுகளைப் பெறும். அவை, சில ஈறு கெடும், சிலவற்றின் ஈறு கெடுவதுடன் அதன் அயலெழுத்தாகிய குறில் நெடிலாகும்.

**எ.கா.**

**அ.்.றிணைப் பெயர்**

1. அலவன் - அலவ - ஈறு கெட்டது
2. கருடன் - கருடா - ஈறு கெட்டதுடன் குறில் நெடிலாயிற்று.

**பொதுப்பெயர்**

1. சாத்தன் - சாத்த - ஈறு கெட்டது
2. சாத்தன் - சாத்தா - ஈறு கெட்டதுடன் குறில் நெடிலாயிற்று.

## லகர, ளகர ஈற்று அ.்.றிணை, பொதுப்பெயர்களின் விளி உருபுகள்

**லளஈற்று அ.்.றிணைப் பெயர்ப்பொதுப் பெயர்க்கண்**
**ஈற்றுஅயல் நீட்சியும் உருபுஆ கும்மே. (நன் - 312)**

லகரத்தையும் ளகரத்தையும் இறுதியாகக் கொண்ட அ.ஃறிணைப் பெயர்களிலும், பொதுப்பெயர்களிலும் ஈற்றயலில் உள்ள எழுத்து நெடிலாதல் விளி உருபாகும்.

**எ.கா.**

**அ.ஃறிணைப் பெயர்**

முயல் - முயால் - ஈற்றயல் அகரம் ஆகாரமாயிற்று.

**பொதுப்பெயர்**

மக்கள் - மக்காள் - ஈற்றயல் அகரம் ஆகாரமாயிற்று.

## விளி உருபுகளுக்குப் புறனடை

**அண்மையின் இயல்பும்ஈறு அழிவும் சேய்மையின்**
**அளபும் புலம்பின் ஓவும் ஆகும். (நன் - 313)**

அண்மையிலுள்ளோரை விளிக்கும் இடத்தில் பெயர்கள், இயல்பாதலும், பெயர்களின் இறுதி கெடுதலும் உருபுகளாகும். சேய்மையிலுள்ளோரை விளிக்கும் இடத்தில் அளபெடையாகும். புலம்பும் இடத்தில் பெயர்களின் இறுதியில் ஓகாரம் மிகும்.

**எ.கா.**

**அண்மைவிளி இயல்பு**

தம்பி - தம்பி
முருகன் - முருகன்

**இறுதி கெடுதல்**

பாண்டியன் - பாண்டிய
சாத்தன் - சாத்த

**சேய்மைவிளி**

தம்பி - தம்பீஇ
கிளி - கிளீஇ
அலவன் - அலவாஅ
சாத்தி - சாத்தீஇ
சாத்தன் - சாத்தாஅ

**புலம்பல் விளி**

தம்பி - தம்பியோ
அண்ணன் - அண்ணாவோ

## விளி உருபு ஏலாப் பெயர்கள்

**நுவ்வொடு வினாச்சுட்டு உற்ற னளர**
**வைதுத் தாம்தான் இன்னன விளியா. (நன் - 314)**

நுகரத்தையும் வினாஎழுத்துக்களையும் சுட்டெழுத்துக்களையும் பொருந்தி வரும் ன்,ள், ர், வை, து என்னும் ஐந்து விகுதிகளையும் கொண்ட உறவுப் பெயர்கள், சுட்டுப்பெயர்கள், வினாப்பெயர்கள் ஆகிய பெயர்களும், தாம், தான் என்னும் படர்க்கைப் பெயர்களும் விளிவேற்றுமை உருபை ஏற்றல் இல்லை.

**எ.கா.**

**1. உயர்திணை முறைப்பெயர்**

நுமன், நுமள், நுமர்

**2. உயர்திணை வினாப் பெயர்கள்**

எவன், எவள், எவர்,
ஏவன், ஏவள், ஏவர்,
யாவன், யாவள், யாவர்

**3. உயர்திணைச் சுட்டுப் பெயர்கள்**

அவன், அவள், அவர்
இவன், இவள், இவர்
உவன், உவள், உவர்

**4. வை, து ஈறாகிய அ.்.றிணை வினாப்பெயர்கள்**

எவை,எது
ஏவை, ஏது
யாவை, யாது

**5. வை, து ஈறாகிய அ.்.றிணை சுட்டுப்பெயர்கள்**

அவை, அது
இவை, இது
உவை, உது

**பொதுப்பெயர்கள்**

தான், தாம்

இவற்றுடன் யான், யாம், நாம், நீர், பிறன், மற்றையான் ஆகியவையும் விளி உருபை ஏற்பதில்லை.

## முதல், சினைகளில் வேற்றுமைகள் நிற்கும் தன்மை

**முதலை ஐஉறின் சினையைக் கண்உறும்**
**அதுமுதற்கு ஆயின் சினைக்குஐ ஆகும். (நன் - 315)**

ஒரு தொடரில் முதலும் சினையும் சேர்ந்து வரும்போது முதற்பெயருக்கு இரண்டாம் வேற்றுமை உருபு வந்தால் சினைக்கு ஏழாம் வேற்றுமை உருபு வரும் . முதற்பெயருக்கு ஆறாம் வேற்றுமை உருபு வந்தால் சினைக்கு இரண்டாம் வேற்றுமை உருபு வரும்.

**எ.கா.**

1. யானையைக் காலின்கண் வெட்டினான்.

யானை - முதற்பெயர்
கால் - சினைப்பெயர்

இதில் யானை என்னும் முதலுக்கு 'ஐ' வந்ததால் காலாகிய சினைக்குக் கண் வந்ததுள்ளது.

2. யானையது காலை வெட்டினான்.

முதலாகிய யானைக்கு அது உருபு வந்ததால் சினையாகிய காலுக்கு 'ஐ' உருபு வந்ததுள்ளது.

## முதல், சினை, பிண்டப் பெயர்கள்

**முதல்இவை சினைஇவை எனவேறு உளஇல**
**உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும். (நன் - 316)**

இது முதற்பொருள், இது சினைப் பொருள் என்று வெவ்வேறாக இனம் காட்டி அறுதியிட்டு கூறப்படும் பொருள்கள் உலகில் இல்லை. முதற்பொருள், சினைப்பொருள் என்ற வரையறைகள் அவற்றை கூறுவோரின் உள்ளக் குறிப்பைப பொறுத்தே அமையும்.இத்தன்மை பிண்டப்பொருளுக்கும் பொருந்தும்.

### முதல், சினைப்பெயர்

மனிதனை நோக்கக் கை சினையாகும். கையை நோக்க விரல் சினையாகும். விரலை நோக்க நகம் சினையாகும். இதிலிருந்து ஒரு பொருளில் முதல், சினை என்பவை வெவ்வேறாக இல்லை என்பது புலனாகிறது.முதலே சினையாகவும், சினையே முதலாகவும் அமையும்.

**எ.கா.**

மரத்தை கிளைகண் வெட்டினான்.
கிளையை நுனிக்கண் வெட்டினான்.
கையை விரலின்கண் வெட்டினான்.
விரலை நுனிக்கண் வெட்டினான்.

**பிண்டப் பெயர்**

பிண்டம் என்பது தொகுதிப் பொருளைக் குறிக்கும். அதில் முதல், சினை என்பன சொல்வோனின் குறிப்பினால் மட்டுமே உணரப்படும்.

**எ.கா.**

நெல்லது குப்பை - நெல் - முதல்
குப்பையது நெல் - குப்பை - முதல்

நெல்லே குவியலாகவும் குவியலே நெல்லாகவும் அமைந்ததால் முதலும் சினையும் ஒன்றாயிற்று.

**உருபு மயக்கம்**

ஒரு வேற்றுமைப் பொருளை அதற்குரிய வேற்றுமை உருபால் கூறாது மற்றொரு வேற்றுமை உருபால் கூறுவதே வேற்றுமை மயக்கம் அல்லது உருபு மயக்கம் ஆகும். இவ்வாறு உருபு மாறினும் பொருள் மாறாது நிற்கும் தன்மையுடையது.

## வேற்றுமை உருபுகள் மயங்குதல்

**யாதன் உருபின் கூறிற்று ஆயினும்**
**பொருள்செய் மருங்கின் வேற்றுமை சாரும். (நன் - 317)**

ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமைக்குரிய உருபினால் கூறப்பட்டாலும் பொருளுக்குரிய வேற்றுமையினையே சாரும். உருபிற்குரிய வேற்றுமையைச் சாராது.

**எ.கா.**

நாணற்கிழங்கு மணற்கு ஈன்ற முளை.

‘நாணற் கிழங்கு மணற்கண் ஈன்ற முளை’ என்பது ‘நாணற்கிழங்கு மணற்கு ஈன்ற முளை’ என்று வந்துள்ளது. இங்கு ‘கு’ உருபு கொடைப்பொருளை உணர்த்தாமல் இடப்பொருளை உணர்த்துகிறது. இடப்பொருள் ஏழாம் வேற்றுமைக்கு உரியது.எனவே இங்கு, ‘கு’ உருபு ஏழாம் வேற்றுமைப்பொருளில் வந்துள்ளதை அறியலாம்.

பேருந்தில் நசுக்கப்பட்டுச் செத்தான்.

இதற்கு ’பேருந்தால் நசுக்கப்பட்டுச் செத்தான்’ என்பது பொருள். எனவே இத்தொடர் மூன்றாம் வேற்றுமைக்கு உரியதாகும். இங்கு ‘இல்’ உருபு மூன்றாம் வேற்றுமைக் கருவிப்பொருளில் வந்துள்ளது.

## வேற்றுமை உருபுகள் செய்யுளில் திரிதல்

**ஐஆன்குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்**
**ஆகா அ.்.றிணைக்கு ஆன்அல் லாதன. (நன் - 318)**

செய்யுளில் உயர்திணையில் ஐ, ஆன், கு என்னும் மூன்று வேற்றுமை உருபுகளும் ‘அ’ எனத் திரிந்து வரும். அ.்.றிணையில் ஐ, கு என்னும் உருபுகள் அகரமாகத் திரியாது.ஆன் மட்டுமே அகரமாகத் திரியும்.

**எ.கா.**

**உயர்திணை**

1. காவலோனை - காவலோன - ஐகாரம் அகரம் ஆயிற்று
2. புலவரான் - புலவரான - ஆன் ஈறு அகரம் ஆயிற்று
3. ஆசிரியற்கு - ஆசிரியற்க - கு அகரம் ஆயிற்று

**அ.்.றிணை**

புள்ளினான் - புள்ளினான - ஆன் ஈறு அகரம் ஆயிற்று

## எட்டு வேற்றுமைக்கும் முடிக்கும் சொற்கள்

**எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்**
**அல்ல வினைகொளும் நான்குஏழ் இருமையும்**
**புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர். (நன் - 319)**

எல்லைப் பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும்.நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் பெயர்ச் சொல்லையும் வினைமுற்றுச் சொல்லையும் கொண்டு முடியும். ஏனைய வேற்றுமைகள் வினைமுற்றுச் சொல்லைக் கொண்டு முடியும் என்று புலவர்கள் கூறுவர்.

**எ.கா.**

**1. ஐந்தாம் வேற்றுமை**

திருச்செந்தூரின் கிழக்குக் கடல்

**2. ஆறாம் வேற்றுமை**

எனது நாடு

**3. நான்காம் வேற்றுமை**

கரும்புக்கு வேலி

தம்பிக்குக் கொடுத்தான்

4. **ஏழாம் வேற்றுமை**

மரத்தின்கண் மயில்

கல்லூரியில் படிக்கின்றனர்.

**இரண்டாம் வேற்றுமை**

மரத்தை வெட்டினான்.

**மூன்றாம் வேற்றுமை**

கண்ணால் பார்த்தான்
அண்ணனொடு வந்தான்.

**நீங்கல் பொருளில் ஐந்தாம் வேற்றுமை**

ஊரிலிருந்து சென்றான்.

ஒப்புப் பொருளில் ஐந்தாம் வேற்றுமை

முருகனின் இராமன் வேகமாக ஓடுவான்.

ஏதுப் பொருளில் ஐந்தாம் வேற்றுமை

கம்பர் புலமையில் சிறந்தவர்.

எட்டாம் வேற்றுமை

இறைவா அருள்வாய்

வேற்றுமை

| முதல் வேற்றுமை | இரண்டாம் வேற்றுமை | மூன்றாம் வேற்றுமை | நான்காம் வேற்றுமை | ஐந்தாம் வேற்றுமை |
|---|---|---|---|---|
| எழுவாய் | செயப்படு | கருவி | கொடை, பகை | திங்கல் |
| பயணிலை | பொருள் | கருத்தா | நட்பு, தகுதி | ஒப்பு |
| உருபு | ஐ | உடனிகழ்வு | அதுவாதல் | எல்லை |
| | | ஆல், ஆன் | பொருட்டு | எது |
| | | ஒடு, ஒடு | முறை | இல், இன் |
| | | கு | | |

| ஆறாம் வேற்றுமை | ஏழாம் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|---|
| தற்கிழமை | இடம் | வினி |
| பிறிதின் கிழமை | கண் | படர்க்கையை |
| அது, அது, அ | | முன்னிலை ஆக்கல் |
| | | பெயர் திரிதல் |
| | | கெடுதல், மிருதல் |
| | | இயல்பு. |

# வினையியல்

வினைச்சொல்லின் இலக்கணத்தைச் சொல்லும் இயல் வினையியல் ஆகும்.ஒரு மொழிக்கு இன்றியமையாத உறுப்பாக விளங்குவது வினைச்சொல் ஆகும். இது ஒரு செயலின் காலத்தைக் காட்டுவதாக அமையும். இதன் காரணமாக காலக்கிளவி எனவும் சிறப்பிக்கப் பெறுகிறது. வினைச்சொல் தெளிவாகவும் குறிப்பாகவும் காலம் காட்டுவதாய் அமைகிறது.

## தெரிநிலை வினை

ஒரு வினைச்சொல் வெளிப்படையாகக் காலம் காட்டினால் அதனைத் தெரிநிலை வினை என்று குறிப்பர்.

**செய்பவன் கருவி நிலம் செயல் காலம்**
**செய்பொருள் ஆறும் தருவது வினையே. (நன் - 320)**

1. செய்பவன் 2. கருவி 3. இடம் 4. செயல் 5. காலம் 6. செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பொருள்களையும் வெளிப்படையாக உணர்த்துவது தெரிநிலை வினைச்சொல் ஆகும்.

செய்பவன் என்பது ஒரு தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். கருத்தா 1. ஏவுதற் கருத்தா 2. இயற்றுதல் கருத்தா என இருவகைப்படுவர்.

கருவி என்பது 1. முதற்கருவி 2. துணைக்கருவி என இருவகைப்படும்.

**எ.கா.**

வனைந்தான் (பானை செய்தான் ) - தெரிநிலை வினைச்சொல்.இச்சொல்லில்,

1. செய்பவன் - குயவன் (இயற்றுதற் கருத்தா)
2. கருவி - மண் (முதற்கருவி)
   - தண்ட சக்கரம் (துணைக்கருவி)
3. நிலம் (இடம்) - தரை (பூமி)
4. செயல் - வனைதல்
5. காலம் - இறந்த காலம்
6. செயப்படு பொருள் - குடம்

செயலை உணர்த்தும் சொல் வினைச்சொல். செயலை வெளிப்படையாக உணர்த்துவது தெரிநிலை வினைச்சொல் ஆகும்.

## குறிப்பு வினை

ஒரு வினைச்சொல் குறிப்பாகக் காலத்தை உணர்த்துமானால் அது குறிப்பு வினை எனப்படும். இது செய்பவன் முதலான ஆறனுள் கருத்தாவை மட்டும் வெளிப்படையாகக் காட்டும். காலத்தையும் தொழிலையும் குறிப்பாகக் காட்டும்.

**பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்**
**வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே. (நன் - 321)**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றி செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய ஆறனுள் செய்பவனை மட்டும் உணர்த்துவதே குறிப்பு வினைச்சொல் ஆகும்.

**எ.கா.**

1. பொருள் - பொன்னன், குழையன்
2. இடம் - நாடன், ஊரன்
3. காலம் - பகலன், ஆதிரையான்
4. சினை - காலன், செவியன்
5. குணம் - கரியன், நல்லன்
6. தொழில் - சொல்லன், நடையன்

**தெரிநிலை வினை, குறிப்பு வினைகளை அறியும் முறை**

ஒரு வினைச்சொல்லைப் பிரித்துப் பார்க்கின்ற போது பகுதி ஏவலாக இருந்தால் அது தெரிநிலை வினையாகும்.

**எ.கா**

நடந்தான் - நட + த்(ந்) + த் + ஆன்

ஓடினான் - ஒடு (ஓடி) + இன் + ஆன்

பார்த்தான் - பார் + த்த் + ஆன்

இவற்றின் பகுதிகள் நட, ஓடு, பார் என ஏவலாக அமைந்ததால் இவை தெரிநிலை வினை ஆகும்.

பகுதி, பொருட்பெயராகவோ பண்புப் பெயராகவோ அமைந்தால் அது குறிப்புவினை ஆகும்.

குழையன் - குழை +அன்

கரியன் - கருமை + அன்

இவற்றின் பகுதிகள் குழை, கருமை எனப் பெயர்களாக நின்றதால் இவை குறிப்புவினை ஆகும்.. மேலும் குழையன், கரியன் என்பவை காலத்தைத் தெளிவாகக் காட்டாததால் இவை குறிப்புவினை என்பதை அறியலாம்.

## வினைச் சொற்களின் வகைகள்

**அவைதாம்,**
**முற்றும் பெயர்வினை எச்சமும் ஆகி**
**ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும். (நன் - 322)**

தெரிநிலையாகவும் குறிப்பாகவும் வரும் வினைச்சொற்கள் 1.வினைமுற்று 2. பெயரெச்சம் 3. வினையெச்சம் என மூன்று வகைப்படும். அவை இருதிணை, ஐம்பால், மூவிடங்களுள் ஒன்றற்கு உரியனவாகவும் பலவற்றிற்குப் பொதுவாகவும் வரும்.

**எ.கா.**

**1. தெரிநிலை வினைச்சொற்கள்**

அ) தெரிநிலை வினைமுற்று - படித்தான்
ஆ) தெரிநிலைப் பெயரெச்சம் - படித்த
இ) தெரிநிலை வினையெச்சம் - படித்து

**2. குறிப்பு வினைச்சொற்கள்**

அ) குறிப்பு வினைமுற்று - கரியன், சிறிது
ஆ) குறிப்புப் பெயரெச்சம் - கரிய, சிறிய
இ) குறிப்பு வினையெச்சம் - இன்றி, அன்றி

**ஒன்றற்கு மட்டும் உரிய வினைச்சொற்கள்**

அ) ஆண்பால் வினைச்சொற்கள் - வந்தான், சென்றான், குள்ளன்
ஆ) பெண்பால் வினைச்சொற்கள் - வந்தாள், சென்றாள், நடையள்
இ) பலர்பால் வினைச்சொற்கள் - வந்தனர், சென்றனர், கரியர்
ஈ) ஒன்றன்பால் வினைச்சொற்கள் - வந்தது, தின்றது, உளது
உ) பலவின்பால் வினைச் சொற்கள் - வந்தன, தின்றன, உள்ளன.

**பலவற்றிற்குப் பொதுவான வினைச்சொற்கள்**

**(பொதுவினைகள்)**

வந்த முருகன், வந்த வள்ளி, வந்த மாடு
அவன் இல்லை, அவள் இல்லை, அவை இல்லை
வந்த, இல்லை - வினைச்சொற்கள்.

இவ்வாறு சிறப்பாகவும் பொதுவாகவும் வினைச்சொற்களை 1. தன்வினை, பிறவினை 2. உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை 3. முதல் வினை, சினை வினை 4. பெயரெச்சம், வினையெச்சம் 5. செய்வினை' செயப்பாட்டு வினை என பகுக்கலாம்.

**1. தன்வினை, பிறவினை**

பிரிவர் - தன்வினை
பிரிப்பர் - பிறவினை
வெளுத்தல் - தன்வினை, பிறவினைக்குப் பொது

**2. உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை**

உண்பான் - உடன்பாட்டு வினை
உண்ணான் - எதிர்மறை
செய்யாய் - உடன்பாடு, எதிர்மறை என்னும் இரண்டுக்கும் பொது

**3. முதல் வினை, சினை வினை**

அவன் நடந்தான் - முதல் வினை
கால் நடந்தது - சினைவினை
வனம் பொலிந்தது - முதல், சினை என்னும் இரண்டுக்கும் பொது

**4. பெயரெச்சம், வினையெச்சம்**

தேடிய பொருள் - பெயரெச்சம்
தேடிய வந்தான் - வினையெச்சம்
தேடிய - பெயரெச்சம்,வினையெச்சம் இரண்டுக்கும் பொது

**5. செய்வினை, செயப்பாட்டு வினை**

உண்டசாத்தன் - செய்வினை
உண்ட சோறு - செயப்பாட்டு வினை
மீன் விழுங்கினான் - மீனை விழுங்கினான்
- மீனால் விழுங்கப்பட்டான்

இது செய்வினை, செயப்பாட்டு வினை என்னும் இரண்டுக்கும் பொதுவானது ஆகும்.

## வினைமுற்று

ஒரு வினைச்சொல்லில் பொருள் முற்றுப் பெற்றிருப்பின் அதனை வினைமுற்று எனக் கூறுவர். இதனை முற்றுவினை என்றும் அழைப்பர். இது 1. தெரிநிலை வினைமுற்று 2. குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

**பொது இயல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்**
**முதல்அறு பெயரலது ஏற்பில முற்றே. (நன் - 323)**

வினைமுற்றுச் சொற்கள் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் ஆறு வினைச்சொற்களின் பொது இயல்புகள் ஆறையும் காட்டும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களையும் இயைபு சொல்லாக ஏற்று வரும்.

**எ.கா.**

**அறுவகைப்பெயர்**

**1. பொருள்**

| | |
|---|---|
| செய்தான் அவன் | - தெரிநிலை வினைமுற்று |
| நல்லன் அவன் | - குறிப்பு வினைமுற்று |

**2. இடம்**

| | |
|---|---|
| குளிர்ந்தது நிலம் | - தெரிநிலை வினைமுற்று |
| வலியது நிலம் | - குறிப்பு வினைமுற்று |

**3. காலம்**

| | |
|---|---|
| சென்றது கார் | - தெரிநிலை வினைமுற்று |
| நல்லது கார் | - குறிப்பு வினைமுற்று |

**4. சினை**

| | |
|---|---|
| நீண்டது கை | - தெரிநிலை வினைமுற்று |
| சிறியது கை | - குறிப்பு வினைமுற்று |

**5. குணம்**

| | |
|---|---|
| நிறைந்தது நன்மை | - தெரிநிலை வினைமுற்று |
| நல்லது பசப்பு | - குறிப்பு வினைமுற்று |

**6. தொழில்**

| | |
|---|---|
| ஒழிந்தது பிறப்பு | - தெரிநிலை வினைமுற்று |
| கொடியது இறப்பு | - குறிப்பு வினைமுற்று |

## தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு

**ஒருவன்முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்**
**ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினும்**
**முக்கா லத்தினும் முரண முறையே**
**மூஐந்து இருமூன்று ஆறாய் முற்று**
**வினைப்பதம் ஒன்றே மூஒன் பானாம். (நன் - 324)**

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐம்பால்களையும் படர்க்கை இடத்திலும், அ∴றிணைக்குரிய ஒருமை, பன்மை இரண்டையும் தன்மை, முன்னிலை ஆகிய இரண்டு இடங்களிலும் வைத்து, அவற்றை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களால் பெருக்கிக் கணக்கிட வேண்டும். அவ்வாறு பெருக்கிட தோன்றும்

படர்க்கை வினைமுற்றுகள் பதினைந்தும், தன்மை வினைமுற்றுக்கள் ஆறும், முன்னிலை வினைமுற்றுக்கள் ஆறுமாக தெரிநிலை வினைமுற்றுச் சொல் இருபத்தேழு ஆகும்.

**எ.கா.**

**1. படர்க்கை வினை முற்று – 15 (காலம் 3 x பால் 5)**

1. இறந்தகால ஆண்பால் வினைமுற்று - சென்றான்
2. இறந்தகாலப் பெண்பால் வினைமுற்று - சென்றாள்
3. இறந்தகாலப் பலர்பால் வினைமுற்று - சென்றனர்
4. இறந்தகால ஒன்றன்பால் வினைமுற்று - சென்றது
5. இறந்தகாலப் பலவின்பால் வினைமுற்று - சென்றன
6. நிகழ்கால ஆண்பால் வினைமுற்று - செல்கின்றான்
7. நிகழ்காலப் பெண்பால் வினைமுற்று - செல்கின்றாள்
8. நிகழ்காலப் பலர்பால் வினைமுற்று - செல்கின்றனர்
9. நிகழ்கால ஒன்றன்பால் வினைமுற்று - செல்கின்றது
10. நிகழ்காலப் பலவின்பால் வினைமுற்று - செல்கின்றன
11. எதிர்கால ஆண்பால் வினைமுற்று - செல்வான்
12. எதிர்காலப் பெண்பால் வினைமுற்று - செல்வாள்
13. எதிர்காலப் பலர்பால் வினைமுற்று - செல்வர்
14. எதிர்கால ஒன்றன்பால் வினைமுற்று - செல்லும்
15. எதிர்காலப் பலவின்பால் வினைமுற்று - செல்லும்

| ஐம்பால் | படர்க்கை | இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|---|---|
| **ஆண்பால்** | அவன் | நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் |
| **பெண்பால்** | அவள் | நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் |
| **பலர்பால்** | அவர் | நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் |
| **ஒன்றன்பால்** | அது | நடந்து | நடக்கின்றது | நடப்பது |
| **பலவின்பால்** | அவை | நடந்தன | நடக்கின்றன | நடப்பன |

**ஆ. தன்மை வினைமுற்று – 6 (காலம் 3 x எண் 2)**

16. இறந்தகாலத் தன்மை ஒருமை வினைமுற்று - சென்றேன்
17. இறந்தகாலத் தன்மைப் பன்மை வினைமுற்று - சென்றோம்
18. நிகழ்காலத் தன்மை ஒருமை வினைமுற்று - செல்கின்றேன்
19. நிகழ்காலத் தன்மைப் பன்மை வினைமுற்று - செல்கின்றோம்
20. எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று - செல்வேன்
21. எதிர்காலத் தன்மைப் பன்மை வினைமுற்று - செல்வோம்

| பால் | தன்மை | இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|---|---|
| **ஒருமை** | நான் | வந்தேன் | வருகின்றேன் | வருவேன் |
| **பன்மை** | நாம் | வந்தோம் | வருகின்றோம் | வருவோம் |

**இ. முன்னிலை வினைமுற்று - 6 (காலம் 3 x எண் 2)**

22. இறந்தகால முன்னிலை ஒருமை வினைமுற்று - சென்றாய்
23. இறந்தகால முன்னிலைப் பன்மை வினைமுற்று - சென்றீர்
24. நிகழ்கால முன்னிலை ஒருமை வினைமுற்று - செல்கின்றாய்
25. நிகழ்கால முன்னிலைப் பன்மை வினைமுற்று - செல்கின்றீர்
26. எதிர்கால முன்னிலை ஒருமை வினைமுற்று - செல்வாய்
27. எதிர்கால முன்னிலைப் பன்மை வினைமுற்று - செல்வீர்

| பால் | முன்னிலை | இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|---|---|
| **ஒருமை** | நீ | வந்தாய் | வருகின்றாய் | வருவாய் |
| **பன்மை** | நீர் | வந்தீர் | வருகின்றீர் | வருவீர் |

**படர்க்கை வினைமுற்று**

படர்க்கை வினைமுற்று என்பது ஆண்பால் படர்க்கை, பெண்பால் படர்க்கை, பலர்பால் படர்க்கை, ஒன்றன்பால் படர்க்கை, பலவின்பால் படர்க்கை என பல வகைப்படும்.

படர்க்கை வினைமுற்று →
- ஆண்பால் படர்க்கை வினைமுற்று
- பெண்பால் படர்க்கை வினைமுற்று
- பலர்பால் படர்க்கை வினைமுற்று
- ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று
- பலவின்பால் படர்க்கை வினைமுற்று

## ஆண்பால் படர்க்கை வினைமுற்று

**அன்ஆன் இறுதிமொழி ஆண்பால் படர்க்கை. (நன் - 325)**

அன், ஆன் என்னும் இரண்டு விகுதியையும் இறுதியில் உடைய சொற்கள் உயர்திணை ஆண்பாலுக்குரிய படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும்.

**எ.கா.**

நடந்தனன், நடந்தான் - இறந்தகாலம்
நடக்கின்றனன், நடக்கின்றான் - நிகழ்காலம்
நடப்பனன், நடப்பான் - எதிர்காலம்
} தெரிநிலை

குழையினன்,குழையான் - குறிப்பு வினைமுற்று

இத்தெரிநிலை வினைமுற்றுகள் அன், ஆன் என்னும் இரண்டு விகுதிகளைப் பெற்று, படர்க்கை இடத்தையும் உயர்திணை ஆண்பாலையும் மூன்று காலங்களையும் உணர்த்துகின்றன.

## பெண்பால் படர்க்கை வினைமுற்று

**அள்ஆள் இறுமொழி பெண்பால் படர்க்கை. (நன் - 326)**

அள், ஆள் என்னும் இரண்டு விகுதிகளையையும் இறுதியில் உடைய சொற்கள் உயர்திணைப் பெண்பாலுக்குரிய படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும்.

**எ.கா.**

நடந்தனள், நடந்தாள் - இறந்தகாலம்
நடக்கின்றனள், நடக்கின்றாள் - நிகழ்காலம் } தெரிநிலை
நடப்பனள், நடப்பாள் - எதிர்காலம்
குழையினள், குழையாள் - குறிப்பு வினைமுற்று

இத்தெரிநிலை வினைமுற்றுகள் அள்,ஆள் என்னும் இரண்டு விகுதிகளைப் பெற்று, படர்க்கை இடத்தையும் உயர்திணை பெண்பாலையும் மூன்று காலங்களையும் உணர்த்துகின்றன.

## பலர்பால் படர்க்கை வினைமுற்று

**அர்ஆர் பவ்வூர் அகரம்மார் ஈற்ற**
**பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே. (நன் - 327)**

அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளையும், இறுதியில் உடைய சொற்கள் உயர்திணைப் பலர்பால் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆகும். இவற்றுள் 'மார்' எனும் ஈற்று வினைமுற்று பெயரைக் கொண்டு முடிவது மட்டுமல்லாமல் வினையையும் கொண்டு முடியும்.

**எ.கா.**

நடந்தனர், நடந்தார் - இறந்தகாலம்
நடக்கின்றனர், நடக்கின்றார்- நிகழ்காலம் } - தெரிநிலை
நடப்பர், நடப்பார், நடப்ப - எதிர்காலம்

குழையர், குழையார் - குறிப்பு வினைமுற்று

கொண்மார் - வினை கொண்டு முடிந்தது

இத்தெரிநிலை வினைமுற்றுகள் அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளைப் பெற்று படர்க்கை இடத்தையும் உயர்திணை பலர்பாலையும் மூன்று காலங்களையும் உணர்த்துகின்றன.

## ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று

**துறுடுக் குற்றிய லுகர ஈற்ற**
**ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பின் ஆகும். (நன் - 328)**

து, று, டு என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியில் உடைய குற்றியலுகர ஈற்றுச்சொற்கள் அஃறிணை ஒன்றன்பால் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். இவற்றுள் ‘டு’ என்னும் குற்றியலுகர ஈற்றுச் சொல் தெரிநிலை வினைமுற்றில் வராது. குறிப்பு வினைமுற்றில் மட்டுமே வரும்.

**எ.கா.**

நடந்தது,ஓடிற்று - இறந்தகாலம்
நடக்கின்றது,ஆகின்றது - நிகழ்காலம் } - தெரிநிலை வினைமுற்று
நடப்பது - எதிர்காலம்

குழையது,பொன்னது,பொருட்டு,ஆயிற்று - குறிப்பு வினைமுற்று

இத்தெரிநிலை குறிப்பு வினைமுற்றுகள் து, று, டு என்னும் மூன்று விகுதிகளையும் பெற்று அஃறிணையையும் ஒன்றன் பாலையும் படர்க்கை இடத்தையும் உணர்த்துகின்றன. இது ஒன்றன்பால் வினைமுற்று ஆகும்

இவற்றுள் ‘று’ விகுதி இறந்த காலத்திற்கு மட்டுமே வரும்.ஏனைய இரு காலத்திற்கும் வருவதில்லை.

## பலவின்பால் படர்க்கை வினைமுற்று

**அஆ ஈற்ற பலவின் படர்க்கை**
**ஆவே எதிர்மறைக் கண்ணது ஆகும். (நன் - 329)**

அ, ஆ என்னும் இரண்டு விகுதிகளைக் கொண்ட சொற்கள் அஃறிணைப் பலவின்பால் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். அவற்றுள் ‘ஆ’ என்ற விகுதி எதிர்மறையில் மட்டும் வரும். ‘அ’ என்னும் விகுதி கொண்ட சொற்கள் பலவின்பால் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று ஆகும்.

**எ.கா.**

நடந்தன
நடக்கின்றன } - அ தெரிநிலை வினைமுற்று
நடப்பன

குழையின - அ குறிப்பு வினைமுற்று

நடவா - ஆ எதிர்மறை வினைமுற்று

## இருதிணைப் பொதுவினை

இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாகப் பொருந்தி வரும் வினைகள் பல உள்ளன. அவை இருதிணைப் பொதுவினை என அழைக்கப்பெறும்.

**தன்மை முன்னிலை வியங்கோள் வேறுஇலை**
**உண்டுஈர் எச்சம் இருதிணைப் பொதுவினை. (நன் - 330)**

உயர்திணைக்கு அஃறணைக்கும் பொதுவாக உரியவை பொது வினைகள் எனப்படும் இவை 1. தன்மை வினைமுற்றுக்கள் 2. முன்னிலை வினைமுற்றுக்கள் 3. வியங்கோள் வினைமுற்றுக்கள் 4. வேறு 5. இல்லை 6. உண்டு 7. பெயரெச்சம் 8. வினையெச்சம் என எட்டு வகைப்படும்.

**எ.கா.**

1. தன்மை வினை - வந்தேன், வந்தோம்
2. முன்னிலை வினை - வந்தாய், வந்தீர்
3. வியங்கோள் வினை - இராமன் வாழ்க, தமிழ் வாழ்க
4. வேறு - அவன் வேறு, நீ வேறு, அது வேறு
5. இல்லை - அவன் இல்லை, அது இல்லை
6. உண்டு - நான் உண்டு, நீ உண்டு, அவள் உண்டு, அது உண்டு
7. பெயரெச்சம் - வந்த மனிதன், வந்த மாடு
8. வினையெச்சம் - வந்து போனான், வந்து போயிற்று.

இவற்றுள் தன்மை முதலாக உண்டு ஈறாகிய ஆறும் வினைமுற்றுக்கள் ஆகும். எஞ்சிய இரண்டும் எச்ச வினை ஆகும்.

**பிற பொதுவினைகள்**

1. செய்யும் என்னும் முற்று படர்க்கைப் பலர்பாலைத் தவிர்த்த ஏனைய நான்கு பால்களுக்கும் பொதுவாக வரும்.

**எ.கா.**

அவன், அவள், அது, அவை - உண்ணும்

2. யார் என்னும் வினாப்பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று உயர்திணைக்குரிய பால்களான ஆண்பால்,பெண்பால் ,பலர்பால் ஆகிய மூன்றிற்கும் பொதுவாய் வரும்.

**எ.கா.**

அவன், அவள், அவர் - யார்

3. எவன் என்னும் வினாப் பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று ஒன்றன்பால், பலவின்பால் என்னும் அ.்.றிணைக்குரிய இருபாலுக்கும் பொதுவாய் வரும்.

**எ.கா.**

அ.்.து, அவை – எவன்

## தன்மை ஒருமை வினைமுற்று

**குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு**
**அல் அன் என்ஏன் ஆகும் ஈற்ற**
**இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை. (நன் 331)**

கு, டு, து, று என்னும் குற்றியலுகர விகுதிகளையும் அல், அன், என், ஏன் என்னும் மெய்யீற்று விகுதிகளையும் கொண்ட சொற்கள் தன்மை ஒருமை வினைமுற்று ஆகும். வினைமுற்று உயர்திணை, அ.்.றிணை என்னும் இரு திணைகளுக்கும் ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் என்னும் மூவகை ஒருமைக்கும் பொதுவாக உரியது.

குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் நான்கும் தாமே தெளிவாகக் காலம் காட்டுதலால் குறிப்பு வினைக்கு வராது. அல் விகுதி இடைநிலையோடு சேர்ந்து எதிர்காலத்தில் மட்டும் வரும்.

**எ.கா.**

கு - நான் உண்கு (உண்பேன்) - எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று
டு - நான் உண்டு - இறந்த காலத் தன்மை ஒருமை வினைமுற்று
து - நான் வருது - இறந்த கால எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று
று - நான் சேறு - இறந்த கால எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று
அல் - நான் செய்வல் - எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

'அல்' விகுதி இடைநிலையோடு இணைந்து தெரிநிலையில் எதிர்காலத்தில் மட்டுமே வரும். இது குறிப்பு வினையில் வராது.

யான் செய்வல் - எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்று

அன், என், ஏன் என்பன தெரிநிலையிலும் குறிப்பு வினையிலும் இடம்பெறும்.

| **தெரிநிலை வினை** | **குறிப்பு வினை** | **விகுதி** |
|---|---|---|
| உண்டனன்,உண்கின்றனன், உண்பன் | குழையன் | அன் |
| உண்டனென், உண்கின்றெனன், உண்பென் | குழையென் | என் |
| உண்டேன், உண்கின்றேன், உண்பேன் | குழையேன் | ஏன் |

கு, டு, து, று, அல், அன், என், ஏன் ஆகிய எட்டையும் விகுதியாகக் கொண்ட தன்மை வினைமுற்றுக்கள் இருதிணையிலும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பாலிலும் இடம்பெற்று ஒருமை எண்ணை மட்டுமே உணர்த்தும்.

## உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்று

**அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்**
**எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்**
**உம்மூர் கடதற இருபா லாரையும்**
**தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை. (நன் - 332)**

தன்மை பன்மை வினைமுற்று மூவகைப்படும். 1.அம், ஆம் என்னும் இரண்டு விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் முன்னிலை இடத்திற்குரிய வினைமுற்றுக்கள் ஆகும். 2. எம், ஏம், ஓம் என்னும் விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் படர்க்கை இடத்திற்குரிய வினைமுற்றாகும். 3. கும், டும், தும், றும் விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் முன்னிலை,படர்க்கை என்னும் இரு இடத்தாரையும் ஒருங்கே உளப்படுத்தும் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் ஆகும்.

தன்மைப் பன்மையாவது தன்னோடு சார்ந்தாரையும் கூட்டி உரைப்பதாகும். அது தனித்து இயலாதது. இதனை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்றும் கூறுவர்.

**எ.கா.**

உண்பம் யாம் (யானும் நீயும்) - அம், ஆம்
உண்பெம் யாம் (யானும் அவனும்) - எம், ஏம், ஓம்
உண்கும் யாம் (யானும் நீயும் அவனும்) - கும், டும், தும், றும்

### தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்

அம், ஆம் என்பன தன்னோடு முன்னிலையாரையும் உளப்படுத்தும். எம், ஏம், ஓம் என்பன தன்னோடு படர்க்கையாரையும் உளப்படுத்தும். கும், டும், தும், றும் என்பன தன்னோடு முன்னிலையாரையும் படர்க்கையாரையும் உளப்படுத்தும்.

**எ.கா.**

1. உண்டனம், உண்டாம் - அம், ஆம் (தன்மை + முன்னிலை) தெ.வி.மு.
   தாரினம், தாரினாம் - அம், ஆம் (தன்மை + முன்னிலை) கு.வி.மு.
2. உண்டனெம், உண்டேம், உண்டோம் } - எம், ஏம், ஓம்
   தாரினெம், தாரினேம், தாரினோம் } (தன்மை + படர்க்கை)
3. உண்கும், உண்டும் } கும், டும், தும்,
   வந்தும், சென்றும் } (தன்மை + முன்னிலை + படர்க்கை)

## வினை கொண்டு முடியும் தன்மை வினைமுற்றுக்கள்

தெரிநிலை, குறிப்பு ஆகிய இருவகை வினைமுற்றுக்களும் பெயரைக் கொண்டு முடிவதே பொதுவிதி ஆகும். இருப்பினும் சிலமுற்றுக்கள் வினையைக் கொண்டும் முடிவதுண்டு. இவ்வாறு அமையும் முற்றுக்கள் வினை கொண்டு முடியும் முற்றுக்கள் ஆகும்.

**செய்குஎன் ஒருமையும் செய்கும்என் பன்மையும்**
**வினையொடு முடியினும விளம்பிய முற்றே. (நன் - 333)**

செய்கு என்பது தன்மை ஒருமை வினைமுற்றாகும். செய்கும் என்பது தன்மை பன்மை வினைமுற்றாகும். இவ்விரண்டும் பெயரைக் கொண்டு முடிவது மட்டுமின்றி வினையைக் கொண்டும் முடியும். அவ்வாறு முடிந்தாலும் அது வினைமுற்றாகவே அமையும். முற்று என்னும் தன்மையிலிருந்து மாறுபடாது.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| உண்கு யான் | - | தன்மை ஒருமை வினைமுற்று |
| உண்கும் யாம் | - | தன்மை பன்மை வினைமுற்று |

இத்தொடர்களில் உண்கு, உண்கும் என்றும் வினைமுற்றுக்கள் பெயரைக் கொண்டு முடிந்துள்ளன.

| | | |
|---|---|---|
| உண்கு வந்தேன் | - | தன்மை ஒருமை வினைமுற்று |
| உண்கும் வந்தோம் | - | தன்மை பன்மை வினைமுற்று |

இத்தொடர்களில் உண்கு, உண்கும் என்னும் வினைமுற்றுக்கள் வினையைக் கொண்டு முடிந்துள்ளன.

எனவே உண்கு, உண்கும் என்பன பெயரையும் வினையையும் கொண்டு முடியும் என்பதை அறியலாம். உண்கு, உண்கும் என்பன எச்சப் பொருளில் வந்துள்ளன போலத் தோன்றினாலும் இவை எச்சங்கள் அல்ல, இவை வினைமுற்றுக்களே உண்கு என்பது செய்கு என்னும் வாய்ப்பாட்டுத் தன்மை ஒருமை வினைமுற்று என்றும் உண்கும் என்பது செய்யும் என்னும் வாய்ப்பாட்டுத் தன்மை பன்மை வினைமுற்று என்றும் பெயர் பெறும்.

## உளப்பாட்டு முன்னிலைப்பன்மை வினைமுற்று

**முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை. (நன் - 334)**

தன்மையோடு கூடிய முன்னிலையும் படர்க்கையும் தன்மை ஆகும். அது போல முன்னிலையோடு சேர்ந்த படர்க்கைப் பெயர்கள் முன்னிலை வினைமுற்றைக் கொண்டு முடியும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| உண்டனிர் | - | இர் |
| உண்மின் | - | மின் |

குழையீர் - ஈர்

நீயும் அவனும் போமின்

நீயும் அவனும் பாடுங்கள்

என்பனவற்றுள் அவன் என்னும் படர்க்கை முன்னிலை ஆயிற்று.

## முன்னிலை ஒருமை வினைமுற்று

**ஐஆய் இகர ஈற்ற மூன்றும்**
**ஏவலின் வருஉம் எல்லா சுற்றவும்**
**முப்பால் ஒருமை முன்னிலை மொழியே . (நன் - 335)**

ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்களும், ஏவல் வினைமுற்றாக வரும் நட,வா,மடி முதலிய இருபத்து மூன்று ஈற்றுச் சொற்களும் ஆண், பெண், ஒன்று என்னும் மூவகை ஒருமைப் பால்களுக்குப் பொதுவாக வருகின்ற முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள் ஆகும்.

**எ.கா.**

முன்னிலை ஒருமை தெரிநிலை வினைமுற்றுகள்

உண்டனை, உண்கின்றனை, உண்குவை - ஐ

உண்டாய், உண்கின்றாய், உண்பாய் - ஆய்

உண்டி, உண்கின்றி - இ

நட, வா, மடி, சீ, விடு, கு, வை, போ, உண், தின், தேய், பார், செல், வாழ், கேள், ஓடு

முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுக்கள்

குழையை - ஐ

குழையாய் - ஆய்

இத்தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுக்கள் ஐ. ஆய், இ என்னும் விகுதிகளைப் பெற்று முன்னிலை இடத்தையும் ஒருமை எண்ணையும் குறிக்கின்றன.விகுதி குன்றியும் குன்றாமலும் நிற்பனவாகிய ஏவல் பொருளில் வரும் இருபத்து மூன்று ஈற்று வினைச் சொற்களும் ஏவல் முன்னிலை ஒருமை வினை முற்றுக்களாகும்.இவை தெரிநிலையில் மட்டுமே இடம்பெறும்.

ஐ, இ, அள், ஏல், ஆல் என்னும் விகுதிகளை உடைய வினைச் சொற்களும், ‘ஆய்’ விகுதி இல்லாமல் பகுதி மட்டுமே நிற்கும் வினைச் சொற்களும் ஏவல் ஒருமை வினைச முற்றுகளாகும். இவற்றுள் அல், ஏல், ஆல் என்பன எதிர்மறையில் மட்டுமே வரும்.

**எ.கா.**

உண்ணல் - அல்
மறால் - ஆல
உண்ணேல் - ஏல்
} - எதிர்மறை வினைமுற்று

## சில ஏவல் வினைகளுக்குச் சிறப்பு விதி

**முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய்ஊர்ந்து வருமே. (நன் - 336)**

முன்னிலை, ஏவல் ஒருமை வினைமுற்றிற்கு முன் ஈகாரமும் ஏகாரமும் அவ்விடத்தில் நிற்பதற்குரிய தன்மையினை உடைய ஏதேனும் ஒரு மெய்யின்மேல் ஏறிவரும்.

**எ.கா.**

செல் - சென்றீ பெருமநின் தகைக்குநர் யாரே
நில் - அட்டில் ஓலை தொட்டனை நின்மே

இத்தொடர்களில் இடம் பெறும் 'சென்றீ', 'நின்மே' என்பனவற்றிற்கு ஈறாக அமையும் ஈகாரமும் ஏகாரமும் விகுதிகள் அல்ல. அவை 'ஆய்' விகுதி குறைந்த ஏவலில் வரும் முன்னிலை அசைகளாகும். அவை முறையே 'ற'கர ஒற்றையும் 'ம'கர ஒற்றையும் எழுத்துப்பேறாகக் கொண்டுள்ளன.

## முன்னிலைப் பன்மை வினைமுற்று

**இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்**
**பன்மை முன்னிலை மின்அவற்று ஏவல். (நன் - 337)**

இர், ஈர் என்னும் இரு விதிகளையும் கொண்ட சொற்கள் உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைகளிலும் முன்னிலைப் பன்மை வினைமுற்றாக வரும். மின் விகுதி பெற்ற சொற்கள் இரு திணைகளிலும் ஏவல் பன்மை வினைமுற்றாக வரும்.

**எ.கா.**

**முன்னிலைப் பன்மை தெரிநிலை வினைமுற்று**

உண்டனிர், கண்டனிர் - இர்
உண்டீர், கண்டீர் - ஈர்

**முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று**

குழையிர் - இர்
குழையீர் - ஈர்

**ஏவல் பன்மை வினைமுற்று**

உண்மின் - மின்

## வியங்கோள் வினைமுற்றுக்கள்

வியங்கோள் என்பது ஏவல் கொள்ள வருவதாகும். இது காரணத்தால் அமைந்த பெயர். க, இய, இயர் என்னும் விகுதிகளைப் பெற்று வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் முதலிய பொருள்களில் வருவதே வியங்கோளின் இயல்பாகும்.

**கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கும் என்ப. (நன் - 338)**

க, இய, இயர் என்பவற்றை இறுதியில் உடைய சொற்கள் வியங்கோள் வினைமுற்றுக்களாகும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடங்களிலும் இருதிணை, ஐம்பால்களுக்கும் வருவனவாம்.

**எ.கா.**

**தன்மை**

நான் வாழ்க, நாம் வாழ்க - க
நான் வாழிய, நாம் வாழிய - இய
நான் வாழியர், நாம் வாழியர் - இயர்

**முன்னிலை**

நீ வாழ்க - க
நீ வாழிய - இய
நீர் வாழியர் - இயர்

**படர்க்கை**

அவன் வாழ்க, அவள் வாழ்க - க
அவன் வாழிய, அவள் வாழிய - இய
அவன் வாழியர், அவள் வாழியர் - இயர்

இவ்வியங்கோள்வினை வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல், போன்ற பொருள்களில் வரும்.

**எ.கா.**

வாழிய செந்தமிழ் - வாழ்த்தல்
வீழ்க தீவினை - வைதல்
தேவா அருள்க - வேண்டல்
வருக, செல்க - விதித்தல்

ஏவல், வியங்கோள் என்பன ஒருபொருட்சொற்கள். ஆயினும் இருதிணை, ஐம்பால், மூவிடங்களிலும் வரும் ஏவலை வியங்கோள் எனக் கூறுதல் தொன்னெறி மரபாகும்.

**வியங்கோள், ஏவல் வேறுபாடு**

1. வியங்கோள் வினை என்பது நயந்து கட்டளை இடுதலாகும். ஏவல் என்பது அதிகாரத்துடன் கட்டளை இடுதலாகும்.
2. வியங்கோள் வாழ்த்தல், வைதல், விதித்தல்,வேண்டுதல் பொருள்களில் வரும். ஏவல் கட்டளைப் பொருளில் மட்டுமே வரும்.
3. வியங்கோள் வினை மூவிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும். ஏவல் வினை முன்னிலையில் மட்டுமே வரும்.
4. ஏவலில் ஒருமை, பன்மை எனும் பகுப்பு உண்டு. வியங்கோளில் ஒருமை, பன்மை பகுப்பு இல்லை.
5. வியங்கோளும் ஏவலும் தெரிநிலை வினையில் மட்டுமே அமையும். குறிப்பு வினையில் அமையாது.

## பொதுக் குறிப்பு வினைமுற்றுக்கள்

**வேறுஇல்லை உண்டுஐம் பால்மூ விடத்தன. (நன் - 339)**

வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும்.

**எ.கா.**

**வேறு**

நான் வேறு, நாம் வேறு, நீ வேறு, நீர் வேறு
அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு,
அது வேறு, அவை வேறு.


**இல்லை**

நான் இல்லை, நாம் இல்லை' நீ இல்லை,நீர் இல்லை
அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை,
அது இல்லை, அவை இல்லை.

**உண்டு**

நான் உண்டு, நாம் உண்டு, நீ உண்டு, நீர் உண்டு
அவன் உண்டு, அவள் உண்டு, அவர் உண்டு,
அது உண்டு, அவை உண்டு.

**வினைச்சொல்**




## வினாக்கள்:

1. வேற்றுமை குறித்து கட்டுரை வரைக.
2. இருவகைக் கிழமைகளைச் சான்றுடன் விளக்குக.
3. விளி உருபிற்குரிய சிறப்பு விதிகளை எடுத்துரைக்க.
4. வினைச்சொல் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
5. வினைமுற்றின் வகைகளை விவரி.

# இயல் - 3

## பெயரெச்சம்

பெயரைக் கொண்டு முடிவதாகிய (குறைந்து நிற்கும்) வினைச்சொல் பெயரெச்சம் எனப்படும். பெயர் எஞ்சி நிற்பதால் பெயரெச்சம் என்பது காரணப் பெயராகும். இது 1. தெரிநிலைப் பெயரெச்சம் 2. குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

**செய்த செய்கின்ற செய்யும்என் பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வது ஆதி அறுபொருள் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயர்எச் சம்மே. (நன் 340)**

செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூவகை வாய்பாட்டுச் சொற்களில் வருவதும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களும் தோன்ற வருவதும், பால் பகுப்பைக் காட்டாமல், செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருட் பெயர்களும் எஞ்ச (ஒழிய) நிற்பது பெயரெச்சம் ஆகும்.

**எ.கா.**

**பெயரெச்சம் கால வகையால் மூவகைப்படும்**

1. வந்த பையன் - செய்த - இறந்தகாலப் பெயரெச்சம்
2. வருகின்ற பையன் - செய்கின்ற - நிகழ்காலப் பெயரெச்சம்
3. வரும் பையன் - செய்யும் - எதிர்காலப் பெயரெச்சம்

ஓடிய குதிரை, ஓடுகின்ற குதிரை, ஓடும் குதிரை - தெரிநிலைப் பெயரெச்சம்

நல்ல குதிரை - குறிப்புப் பெயரெச்சம்
ஓடாத குதிரை - எதிர்மறைப் பெயரெச்சம்
இல்லாத குதிரை - எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சம்

**செய்பவன் முதலியன எஞ்சி நிற்றல்**

1. உண்ட சாத்தன் - செய்பவன்
2. உண்ட கலம் - கருவி
3. உண்ட வீடு - நிலம்
4. உண்ட காண் - செயல்
5. உண்ட நாள் - காலம்
6. உண்டசோறு - செயப்படு பொருள்.

## செய்யும் என்னும் வாய்பாட்டுச் சிறப்பு விதி

**செய்யும் என் எச்சஈற்று உயிர்மெய் சேறலும்**
**செய்யுளுள் உம்உந்து ஆகலும் முற்றேல்**
**உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே. (நன் 341)**

செய்யும் என்னும் எதிர்காலப் பெயரெச்சத்தின் இறுதியில் நிற்கும் உயிர்மெய் கெட்டும், செய்யுளில் உம் விகுதி உந்து எனத் திரிந்தும், அது முற்றாக இருப்பின் அதன் இறுதியில் உள்ள உயிர் ஆயினும் உயிர்மெய் ஆயினும் கெட்டும் வரும்.

**எ.கா.**

ஆகும் பொருள் - ஆம் பொருள்
போகும் பொருள் - போம் பொருள்
} - உலக வழக்கு

“ஆம்பொருள் களாகுமவை யார்க்கும்” - செய்யுள் வழக்கு

இத்தொடர்களில் அமைந்துள்ள ஆகும், போகும் என்னும் செய்யுமெனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்களின் ஈற்று உயிர்மெய் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கெட்டு வந்துள்ளன.

தென்கடல் திரைமிசைப் பாயும் (பாய்ந்து)
நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து

இச்செய்யுளடிகளில் அமைந்துள்ள பாயும், கூப்பெயர்க்கும் ஆகிய செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்களின் ஈற்று ‘உம்’ என்பது ‘உந்து’ எனத் திரிந்து வந்துள்ளது. உலக வழக்கில் இத்தகைய திரிபு ஏற்படாது.

சாரல் நாட என் தோழியும் கலுழுமே
அம்பலூரும் அவனொடு மொழிமே

இச்செய்யுளடிகளில் அமைந்துள்ள கழலும், மொழியும் என்னும் செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்கள் முற்றாகிய இடத்தில் கலுழ்மே, மொழிமே என உயிரும் உயிர்மெய்யும் கெட்டு அமைந்துள்ளன. உலக வழக்கில் இவ்வாறு அமைவதில்லை.

## வினை எச்சம்

வினையைக் கொண்டு முடிவதாகிய (குறைந்து நிற்கும்) வினைச்சொல் வினை எச்சம் எனப்படும். வினை எஞ்சி நிற்பதால் வினையெச்சம் என்பது காரணப் பெயராகும். இது தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும்.

**தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
**ஒழிய நிற்பது வினைஎச் சம்மே. (நன் 342)**

தொழிலையும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களையும் காட்டுவதாய் இருதிணை ஐம்பாலும் வினையும் குறைந்து நின்று, செய்து முதலாகச் சிறப்பித்துக் கூறப்படும் வாய்பாடுகளில் வருவது, வினைச் சொல்லின் பொது இலக்கணமாகும்.

**எ.கா.**

இராமன் உண்டு வந்தான்

இத்தொடரில் உண்டு என்பது பால் விகுதியின்றி வந்தான் என வினையைக் கொண்டு முடியுமாறு எஞ்சி நிற்கிறது. மேலும் இது உண்ணுதல் என்னும் தொழிலையும் இறந்த காலத்தையும் காட்டுகிறது. இவ்வாறு தொழிலையும் காலத்தையும் காட்டி வினை முடிதற்கு வேண்டிய பாலும் வினையும் எஞ்சுமாறு நிற்பது வினையெச்சம் ஆகும்.

வினை எனப் பொதுப்படக் கூறியமையால் உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வரும் தெரிநிலையும் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையாலணையும் பெயரும், தொழிற் பெயருமாகிய ஐவகை வினைச் சொற்களும் அடங்கும்.

| | |
|---|---|
| கற்று வந்தான் | - தெரிநிலை வினைமுற்று |
| கற்று வல்லன் | - குறிப்பு வினைமுற்று |
| கற்று வா | - ஏவல் வினைமுற்று |
| கற்று வாழ்க | - வியங்கோள் வினைமுற்று |
| கற்று வந்த | - தெரிநிலைப் பெயரெச்சம் |
| கற்று வல்ல | - குறிப்புப் பெயரெச்சம் |
| கற்று வந்து | - தெரிநிலை வினையெச்சம் |
| கற்று அன்றி | - குறிப்பு வினையெச்சம் |
| கற்று வந்தவன் | - தெரிநிலை வினையாலணையும் பெயர் |
| கற்று வல்லவன் | - குறிப்பு வினையாலணையும் பெயர் |
| கற்று வரல் | - தொழிற்பெயர் |

இவை உடன்பாட்டுப் பொருளில் ஐவகை வினை விகற்பங்களைக் கொண்டு தெரிநிலையிலும் குறிப்பிலும் அமைந்துள்ளன. இவ்வாறே எதிர்மறைப் பொருளிலும் ஐவகை வினை, விகற்பங்களைக் கொண்டு தெரிநிலையிலும் குறிப்பிலும் அமையும்.

தெரிநிலை - ஓடிவராமல், ஓடிவரான், ஓடிவரேல், வாடிவதங்கற்க, ஓடிவராத,
- ஓடிவராதவள், ஓடிவராமை

குறிப்பு - அறிவின்றி இவன், அறிவின்றி இல்லாத, அறிவின்றி இல்லாது,
- அறிவின்றி இல்லாதவன், அறிவின்றி இன்மை

எனவே தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றி வினை முற்றுதற்கு வேண்டி, பாலும் வினையும் எஞ்சி நிற்பன தெரிநிலை வினை எச்சமும் குறிப்புவினை எச்சமும் ஆகும்.

## வினையெச்ச வாய்பாடுகள்

**செய்து செய்யும் செய்யாச் செய்யூச்**
**செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்**
**வான் பான் பாக்கு இன வினைஎச் சம்பிற**
**ஐந்துஒன்று ஆறும்முக் காலமும் முறைதரும். (நன் 343)**

1. வினையெச்சம் பன்னிரண்டு வாய்பாடுகளில் வரும். செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் ஐந்தும் இறந்த கால வினையெச்சங்களாகும்.
2. செய என்பது நிகழ்கால வினையெச்சமாகும்.
3. செயின், செய்யிய, செய்யியர், செய்வான், செய்பான், செய்பாக்கு என்னும் ஆறும் எதிர்கால வினையெச்சங்களாகும்.

**எ.கா.**

| | | | |
|---|---|---|---|
| 1. | செய்து | - பார்த்து, வந்து, கேட்டு | இறந்தகால வினையெச்சங்கள் |
| 2. | செய்பு | - இடுபு, உண்குபு, சொல்லுபு | |
| 3. | செய்யா | - உண்ணா, வணங்கா, கேளா | |
| 4. | செய்யூ | - உண்ணூஉ, வரூஉ, காணூஉ | |
| 5. | செய்தென | - பார்த்தென, வந்தென, கேட்டென | |
| 6. | செய | - பார்க்க, படிக்க | - நிகழ்கால வினையெச்சங்கள் |
| 7. | செயின் | - காணின், ஓடின், உண்ணின் | எதிர்கால வினையெச்சங்கள் |
| 8. | செய்யிய | - ஆடிய, காணிய, உண்ணிய | |
| 9. | செய்யியர் | - காணியர், ஓடியர், உண்ணியர் | |
| 10. | செய்வான் | - காணுவான், ஓடுவான், உண்ணுவான் | |
| 11. | செய்பான் | - காண்பான், கேட்பான், பார்ப்பான் | |
| 12. | செய்பாக்கு | - காண்பாக்கு, வருபாக்கு, நிற்பாக்கு | |

**வினையெச்ச விகுதிகள்**

உ, பு, ஆ, ஊ, என, அ, இன், இய. இயர் ஆகியவை வினையெச்ச விகுதிகள். வான், பான், பாக்கு செய்பு வாய்பாட்டுச் சொற்களுள் சில குகரம் பெற்றுச் செய்குபு என்று வரும். செய்யூ என்பது செய்யூஉ என்று அளபெடுத்தே வரும். செய்யா என்பது எதிர்மறையாக இன்றி, செய்து என்ற பொருளில் வரும்.

செய்து வாய்பாடு ஓடி, வணங்கி, ஆடி, எண்ணி, சினைஇ என்று இகரமாகத் திரிந்தும், ஆய், போய் என யகரமாகத் திரிந்தும் வரும். செய்யாமல், செய்யாது என்பன எதிர்மறை வினையெச்ச வாய்பாடுகளாகும்.

அன்றி, இன்றி, அல்லது, நன்கு முதலியன குறிப்பு வினையெச்சங்களாகும். இவ்வாய்பாடுகளுள் செய்து என்பது 'த்' என்னும் இடைநிலையால் காலம் காட்டும். எஞ்சியவை விகுதியால் காலம் காட்டுவன.

## வினைஎச்சங்களின் முடிபுகள்

**அவற்றுள்,**
**முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்**
**வினைமுதல் கொள்ளும் பிறவும் ஏற் கும்பிற, (நன் 344)**

வினையெச்சங்களுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ. செய்வான், செய்பான், செய்பாக்கு ஏழும் வினைமுதலின் வினை கொண்டு முடியும். செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும் வினை முதலின் வினையையும் பிறவற்றின் வினையையும் கொண்டு முடியும்.

**எ.கா**

1. பாரி நடந்து வந்தான் - செய்து
2. அவன் உண்குபு சென்றான் - செய்பு
3. மழை பெய்யாக் கொடுக்கும் - செய்யா
4. மன்னன் காணூ மகிழ்ந்தான் - செய்யூ
5. அவன் கொள்வான் சென்றான் - வான்
6. வேடர் அலைப்பான் புகுந்தனர் - பான்
7. வள்ளல் தருபாக்கு வருவான் - பாக்கு

இவை ஏழும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்தன.

**1. செய்தென**

அ) தான் உண்டென மகிழ்ந்தான் - தன்வினை முதல்
ஆ) பிறர் உண்டென யான் மகிழ்ந்தேன் - பிறவினை முதல்

**2. செய**

அ) அரசர் உண்ண வருகின்றார் - தன்வினை முதல்
ஆ) பிறர் உண்ணக் காண்கின்றான் - பிறவினை முதல்

**3. செயின்**

அ) அவன் உண்ணின் மகிழ்வான் - தன்வினை முதல்
ஆ) வறியவன் உண்ணின் வள்ளல் மகிழ்வான் - பிறவினை முதல்

**4. செய்யிய**

அ) தான் உண்ணிய வருவான் - தன்வினை முதல்
ஆ) பிறர் உண்ணிய கொடுப்பான் - பிறவினை முதல்

5. **செய்யியர்**

அ) தான் உண்ணியர் போவான் - தன்வினை முதல்

ஆ)பிறர் உண்ணியர் வழங்குவான் - பிறவினை முதல்

இவை ஐந்தும் தன் கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடிந்தன.

| | |
|---|---|
| உண்டால் மகிழ்வான்<br>உண்டால் பசி நீங்கும் | செய்தால் என்பது வினைமுதலும்<br>பிற வினைமுதலும் கொண்டன |
| மழையின்றிப் பொய்ப்பின்<br>விருந்தின்றி உண்டான் | வினையெச்சக் குறிப்புத் தன்வினை,<br>பிறவினை முதல் கொண்டு முடிந்தன |

## வினைமுதல் கொள்வதற்குப் புறனடை

**சினைவினை சினையொடும் முதலொடும் செறியும். (நன் 345)**

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்ற வினையெச்சங்கள் சினைவினையாகும் போது அவை சினை வினையுடன் முடிவது மட்டுமன்றி முதல் வினையைக் கொண்டும் முடியும்.

**எ.கா.**

கால் ஒடிந்து வீழ்ந்தது - சினைவினை சினையுடன் முடிந்தது.

கால் ஒடிந்து வீழ்ந்தான் - ஒடிந்து என்னும் சினைவினை வீழ்ந்தான் என்னும் முதலைக் கொண்டு முடிந்தது.

## வினையெச்ச வாய்பாடுகளின் திரிபு

**சொல்திரி யினும் பொருள் திரியா வினைக்குறை. (நன் 346)**

செய முதலாக முதலில் உள்ள நான்கும் ஈற்றில் மூன்றுமான கூறப்பட்ட வினையெச்ச வாய்ப்பாடுகள் வேறு வாய்ப்பாடுகளாக மாறி வரினும் அவற்றின் பொருள் வேறுபடாது.

**எ.கா.**

1. ஞாயிறு பட்டு வந்தான்.

இத்தொடருக்கு ஞாயிறு பட (மறைய) வந்தான் என்பதே பொருளாகும். பட என்பது செயவென் எச்சம். அது பட்டு எனச் செய்தென் எச்சமாகத் திரிந்து நின்றது. ஆயினும் செயவென் எச்சப் பொருளையே தந்தது.

2. கதிரவன் வந்து பனி விலகியது

இது கதிரவன் வர பனி விலகியது என இருக்க வேண்டும். செய என்னும் வினையெச்ச வாய்ப்பாட்டுக்குப் பதில் செய்து என்னும் வினை எச்ச வாய்ப்பாடு அமைந்தது. எனினும் பொருள் மாறவில்லை.

3. மழை பெய்து நெல் விளைந்தது

இத்தொடரில் 'பெய்ய' என்னும் காரணப் பொருட்களாகிய 'செய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் 'செய்து' எனத் திரிந்துள்ளது.

4. யான் கொள்வான் பொன் கொடுத்தான்

இத்தொடரில் 'கொள்' என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் 'கொள்வான்' எனத் திரிந்துள்ளது.

## குறிப்பு வினைக்குப் புறனடை

**ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம் இன்று இயலா. (நன் 347)**

ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள் வெளிப்படையாகவோ, மறைந்தோ தம்முடன் ஓர் ஆக்கவினைச் சொல்லை சேர்த்துக் கொண்டே வரும்.

**எ.கா.**

மருந்துண்டு திண்ணியன் ஆயினான்.
நல்லாரோடு பழகி நல்லன் ஆயினான்

திண்ணியன், நல்லன் என்பன குறிப்பு வினைச் சொற்களாகும். நோஞ்சான் ஆக இருந்தவன் மருந்து உண்டதால் திண்ணியன் ஆயினான். இது ஆக்கத்தால் (செயற்கையால்) ஆனதால் ஆக்க வினைக் குறிப்பு ஆகும். இத்தகைய குறிப்பு வினைச் சொற்கள் 'ஆகு' என்ற வினைப் பகுதியிலிருந்து பிறந்த சொற்களுடன் சேர்ந்தே வரும். தனித்து வாராது.

செய்யுளில் ஆக்க வினைக்குறிப்பு ஆக்க வினைச் சொல் இன்றியும் வரும்.

"வேங்கையும் காந்தளும் நாறி, ஆம்பல் மலரினும்
தான்தண் ணியளே''

'குருதி படிந்துண்ட காகம் உருவிழந்து, குக்கின் புறத்த.'

தண்ணியள் ஆனாள், புறத்த ஆனது என்பவற்றில் ஆக்கச் சொற்களாகிய ஆனாள், ஆனது என்பவை தொக்கி வந்துள்ளன.

## செய்யும் என்னும் வினைமுற்றுக்குச் சிறப்பு விதி

**பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்**
**செல்லாது ஆகும் செய்யும்என் முற்றே. (நன் 348)**

படர்க்கைப் பலர்பாலிலும், முன்னிலையிலும் ,தன்மையிலும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுச் சொல் வராது.

ஆண்பால், பெண்பால் ஆகிய உயர்திணைப் பால்களிலும் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய அ∴றிணைப் பால்களிலுமாக இந்நான்கு பால்களிலும் செய்யும் என்னும் முற்றுச்சொற்கள் பயனிலையாக வரும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| அவன் உண்ணும் | - ஆண்பால் | படர்க்கை - செய்யுமென் முற்று |
| அவள் உண்ணும் | - பெண்பால் | |
| அது உண்ணும் | - ஒன்றன்பால் | |
| அவை உண்ணும் | - பலவின்பால் | |

## யார் என்னும் குறிப்பு வினைமுற்றுக்குச் சிறப்பு விதி

**யார் என் வினாவினைக் குறிப்புஉயர் முப்பால். (நன் 349)**

யார் என்பது வினாப்பொருளைத் தருகின்ற குறிப்பு வினைமுற்றாகும். இது உயர்திணைப் படர்க்கைக்குரிய ஆண்பால்,பெண்பால்,பலர்பால் ஆகிய மூன்று பால்களுக்கும் பொதுவினையாக வரும்.

**எ.கா.**

அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

தற்காலத்தில் நான் யார்?, நீயார்? நாம் யார் எனத் தன்மை, முன்னிலையிலும் வருகிறது.

யார் என்பதில் உள்ள ரகர ஈறு பலர்பாலைக் குறிக்காது, உயர்திணைப் பொது விகுதியாக நின்றது.

## எவன் என்னும்

**குறிப்பு வினைமுற்றுக்குச் சிறப்புவிதி**
**எவன்என் வினாவினைக் குறிப்புஇழி இருபால். (நன் 350)**

எவன் என்பது வினாப் பொருளைத் தருகின்ற குறிப்பு வினைமுற்றாகும். இது ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய அ∴றிணைப் படர்க்கைக்குரிய இருபால்களுக்கும் பொது வினையாக வரும்.

**எ.கா.**

அது எவன், எது எவன்

அவை எவன், எவை எவன்

எவன் என்பதில் உள்ள னகர ஈறு ஆண்பாலை உணர்த்தாமல் அ.்.றிணைப் பொது விகுதியாக நின்றது.

என், என்ன, என்னை, ஏன் என்பன எவன் என்பதன் திரிபுகளாகும் இவை புதியன புகுதலாய் இடம் பெறுகின்றன.

## முற்றெச்சம்

ஒருவினைமுற்று எச்சமாகப் பொருள் தந்தால் அது முற்றெச்சம் எனப்படும். முற்றுக்கள் தன் உருவில் திரியாமல் நின்றே எச்சப்பொருளைத் தருகின்றன.

**வினைமுற் றேவினை எச்சம் ஆகலும்**
**குறிப்புமுற்று ஈர்எச்சம் ஆகலும் உளவே. (நன் 351)**

தெரிநிலை வினைமுற்று வினையெச்சப் பொருளை தரும். குறிப்பு வினைமுற்றுப் பெயரெச்சம்,வினையெச்சம் என்னும் இருவகைப் பொருள்களிலும் வரும்.இவ்வாறு வினைமுற்று எச்சமாக வருதல் முற்றெச்சம் எனப்படும்.

**எ.கா.**

**தெரிநிலை வினைமுற்று வினை எச்சமாதல்**

கண்டனன் வணங்கினான்.

இத்தொடர் கண்டு வணங்கினான் எனப் பொருள்படும். இதில் கண்டனன் என்னும் வினைமுற்றுக் கண்டு என வினையெச்சம் ஆயிற்று.

**குறிப்பு வினைமுற்று வினை எச்சமாதல்**

வில்லினன் வந்தான்

இத்தொடர் வில்லை உடையவனாய வந்தான் எனப் பொருள் தரும். இதில் வில்லினன் என்னும் குறிப்பு வினைமுற்று வில்லினனாய் என வினையெச்சம் ஆயிற்று.

**குறிப்பு வினைமுற்று பெயரெச்சமாதல்**

வெந்திறலினன் விறல் வழுதி

இத்தொடர் திறலினனாகிய விறல்வழுதி எனப் பொருள் தரும். இதில் திறலினன் என்பது வினைமுற்று. அது திறலினன் ஆகிய எனப் பெயரெச்சம் ஆயிற்று.

**எச்ச வினை**

| **பெயரெச்சம்** | **வினையெச்சம்** |
| --- | --- |
| **செய்த, செய்கின்ற, செய்யும்** | **1. செய்து, 2. செய்பு, 3. செய்யா, 4. செய்யூ, 5. செய்தென, 6. சேய, 7. செயின், 8. செய்யிய, 9. செய்யியர், 10. செய்வான், 11. செய்பான், 12. செய்பாக்கு** |

# பொதுவியல்

பொதுவியல் என்பது பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்னும் நான்கு இயலிலும் கூறப்படாத பொதுவான இலக்கணத்தைக் கூறும் இயலாகும். ஆதலால் பொதுவியல் எனப் பெயர் பெற்றது.

## ஒன்றொழி பொதுச்சொல்

**இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்**
**பெயரும் வினையும் குறிப்பி னானே. (நன் 352)**

உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளிலும் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் சொல்லுகிறவனது மனக்குறிப்பினால் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலை உணர்த்தும். இதுவே ஒன்றொழி பொதுச்சொல் ஆகும்.

**எ.கா.**

1. ஆயிரம் மக்கள் போர் புரிந்தனர்

இத்தொடரில் மக்கள் என்பது உயர்திணைப் பொதுப்பெயர். புரிந்தனர் என்பது இருதிணைப் பொதுவினை. போர் என்னும் குறிப்பினால் மக்கள் என்னும் பெயர் பெண்பாலை நீக்கி ஆண்பாலை உணர்த்தியது.

2. பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிலின் கீழ் நால்வர் மக்கள் உளர்.

இத்தொடரில் மக்கள் என்பது பொதுப்பெயர். உளர் என்பது பொதுவினை. பொறை (கரு) உயிர்த்தல் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கி பெண்பாலை உணர்த்தியது.

3. இப்பெற்றங்கள் உழவு ஒழிந்தன.

இத்தொடரில் பெற்றங்கள் என்பது காளைக்கும் பசுவுக்கும் பொதுவான அஃறிணைப் பொதுப்பெயர் ஒழிந்தன என்பது பொதுவினை. உழவு என்னும் குறிப்பால் ஆண்பாலை உணர்த்திப் பெண்பாலை நீக்கியது.

4. இப்பெற்றங்கள் பால் சொரிந்தன.

இத்தொடரில் அமைந்த பால் என்னும் குறிப்பு ஆண்பாலை நீக்கிப் பெண்பாலைக் (பசு) காட்டியது.

## செய்யுளில் பெயர், வினையின் ஈற்றயல் திரிதல்

**பெயர்வினை இடத்து னளரய ஈற்றுஅயல்**
**ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே. (நன் 353)**

செய்யுளில் பெயர் சொல்லிலும் வினைச்சொல்லிலும் ஈற்றில் அமைந்த ன, ள, ர, ய என்னும் எழுத்துக்களுக்கு முன் உள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரியும்.

**எ.கா.**

**பெயர்**

| | | |
|---|---|---|
| ன் | - வில்லான் | - வில்லோன் |
| ள் | - தொடியாள் | - தொடியோள் |
| ர் | - நல்லார் | - நல்லோர் |
| ய் | - கொடுத்தாய் | - கொடுத்தோய் |

பெயர்ச்சொற்களின் ஈற்றயல் ஆ - ஓ ஆக திரிந்தது.

**வினை**

| | | |
|---|---|---|
| ன் | - படைத்தான் | - படைத்தோன் |
| ள் | - பெயர்த்தாள் | - பெயர்த்தோள் |
| ர் | - வந்தார் | - வந்தோர் |
| ய் | - வந்தாய் | - வந்தோய் |

வினைச் சொற்களின் ஈற்றயல் ஆ.ஓ ஆக திரிந்தது.

## உருபும் விகுதிகளும் எதிர்மறையில் திரியாமை

**உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்**
**திரியாது தத்தம்ஈற்று உருபின் என்ப. (நன் 354)**

எட்டு வேற்றுமை உருபுகளும் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்னும் மூவகை வினைச்சொற்களும் எதிர்மறையாகக் கூறும் போதும் தத்தம் விகுதியிலும், உருபிலும் வேறுபடாது என்று புலவர் சொல்லுவர்.

| **உடன்பாடு** | **எதிர்மறை** | |
|---|---|---|
| சாத்தன் வருவான் | - சாத்தன் வாரான் | |
| குடத்தை வனைந்தான் | - குடத்தை வனையான் | |
| வாளால் வெட்டினான் | - வாளால் வெட்டான் | |
| புலவர்க்குக் கொடுப்பான் | - புல்லர்க்குக் கொடான் | வேற்றுமை உருபுகள் |
| ஊரின் நீங்கினான் | - குணத்தின் நீங்கான் | எதிர்மறையில மாறவில்லை |
| பொருளினது உண்மை | - செயலினது இன்மை | |
| நல்லவர்கண் சேர்வான் | - தீயார்கண் சேரான் | |
| நண்பா ! போ. | - தம்பீ ! போகேல் | |

வினைமுற்று - கேளான் ,கேளாள், கேளார், மேயாது, மேயா, உண்ணேன், உண்ணோம், உண்ணாய், உண்ணீர்

பெயரெச்சம் - வராத, உண்ணாத

வினையெச்சம் - வராது ( போனான்) , காணாது ( வந்தேன்)

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

உண்ணா ( சோறு) , ஓடா (குதிரை)

## உருபும் வினையும் அடுக்கி முடிதல்

**உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்**
**ஒருதம் எச்சம் ஈறுஉற முடியும். (நன் 355)**

ஓர் வேற்றுமை உருபு பலமுறை அடுக்கி வந்தாலும், வெவ்வேறு வேற்றுமை உருபுகள் விரவி அடுக்கி வந்தாலும், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்னும் மூவகை வினைச்சொற்களும் அடுக்கி வந்தாலும் அவற்றிற்கு எச்சமாகிய ஒரு பெயர் அல்லது வினைமுற்று இறுதியில் வந்தால் அதனுடன் அனைத்தும் முற்றுப் பெறும்.

**எ.கா.**

**ஒரு வேற்றுமை உருபு அடுக்கி வருதல்**

1. முருகனையும் இராமனையும் இயேசுவையும் அல்லாவையும் வணங்கினான்.

இதில் ஐகார உருபு பலமுறை அடுக்கி இறுதியில் வணங்கினான் என்ற ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

2. செல்விக்கும் வள்ளிக்கும் கலைவாணிக்கும் தந்தை

இதில் குகர உருபு பலமுறை அடுக்கி இறுதியில் தந்தை என்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தது.

**வெவ்வேறு வேற்றுமை உருபுகள் அடுக்கி வருதல்**

1. யானையது தந்தத்தை வாளால் அறுத்தான்

இதில் அது, ஐ, ஆல் என்னும் வெவ்வேறு வேற்றுமை உருபுகள் அடுக்கி இறுதியில் அறுத்தான் என்ற ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தன.

2. செல்வி நல்லூரின்கண் முருகனது மகனுக்கு மனைவி

இதில் செல்வி, கண், அது, கு என்னும் வெவ்வேறு வேற்றுமை உருபுகள் அடுக்கி இறுதியில் மனைவி என்ற ஒரு பெயர் கொண்டு முடிந்தன.

**வினைமுற்று**

1. வந்தான் வணங்கினான் இருந்தான் படித்தான் சாத்தன்.
2. கண்டாள் கேட்டாள் படித்தாள் மகிழ்ந்தாள் செல்வி.

இவற்றில் பல தெரிநிலை வினைமுற்றுக்கள் அடுக்கி, இறுதியில் சாத்தன், செல்வி என்ற ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தன.

3. இளையள் இனியள் மெல்லியள் கண்ணகி

இவற்றில் பல குறிப்பு வினைமுற்றுக்கள் அடுக்கி, இறுதியில் கண்ணகி என்ற ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தன.

**பெயரெச்சம்**

1. கற்ற கேட்ட உணர்ந்த புலவர்

தெரிநிலைப் பெயரெச்சங்கள் பல அடுக்கி இறுதியில் புலவர் என்ற ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தன.

2. சிறிய இனிய மெல்லிய பெண்

இதில் பல குறிப்புப் பெயரெச்சங்கள் அடுக்கி, இறுதியில் பெண் என்ற ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தன.

**வினையெச்சம்**

1. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்
2. பிறந்து தவழ்ந்து நடந்து வளர்ந்து தளர்ந்து இறந்தார்
3. திருக்குறள் படிக்கக் கேட்க நினைக்க இனியது

இவற்றில் தெரிநிலை வினையெச்சங்கள் பல அடுக்கி இறுதியில் அறியும், இறந்தார், இனியது என்ற ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தன.

4. அன்பின்றிப் பொருளின்றி உலகில் வாழார்

இதில் இன்றி என்னும் குறிப்பு வினையெச்சம் அடுக்கி, இறுதியில் வாழார் என்ற ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தது

## இடைப்பிறவரல்

தொடர்களில் வேற்றுமை உருபேற்ற பெயர் முதலானவை நிலைமொழியாய் நிற்கும். அவற்றுக்கும் அவை கொண்டு முடிகின்ற சொற்களுக்கும் இடையில் பொருந்துவனவாகிய பிற சொற்கள் வரும்.அவை இடைப்பிறவரல் எனப்படும். இடையில் பிற வருதலால் இடைப்பிறவரல் என்பது காரணப் பெயர் ஆகும்.

**உருபு முற்றுஈர் எச்சம் கொள்ளும்**
**பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன. (நன் 356)**

எட்டு வேற்றுமை உருபுகள், தெரிநிலை வினைமுற்றுக்கள், குறிப்பு வினைமுற்றுக்கள், பெயரெச்சம், வினையெச்சம் என்னும் இருவகை எச்சங்கள் ஆகியவற்றுக்கும் அவற்றின் முடிக்கும் சொற்களாகிய பெயர்,வினைகளுக்கும் இடையில் பொருந்துவனவாகிய பிற சொற்கள் வருதலும் உண்டு.

**எ.கா.**

**வேற்றுமை உருபுகள்**

1. சாத்தன் இன்று வயிறார உண்டான் - இதில் இன்று, வயிறு, ஆர என்பன இடைப்பிறவரல்.
2. முருகன் திருக்குறளைச் சிறப்பாகப் படித்தான் - இதில் சிறப்பாக என்பது இடைப்பிறவரல்.
3. வாளால் துண்டு துண்டாக வெட்டினான் - இதில் துண்டு, துண்டாக என்பன இடைப்பிறவரல்.
4. முருகனுக்கு வளமாக வாழக் காவடி எடுத்தான் - இதில் வளமாக, வாழ என்பன இடைப்பிறவரல்.
5. மலையிலிருந்து உருண்டு விழுந்தான் - இதில் உருண்டு என்பது இடைப்பிறவரல்.
6. இராமனது கற்பில் சிறந்த மனைவி - இதில் கற்பில், சிறந்த என்பன இடைப்பிறவரல்.
7. ஊரில் மிக உயர்ந்த பெரிய மாளிகை - இதில் மிக, உயர்ந்த, பெரிய என்பன இடைப்பிறவரல்.
8. சாத்தா மிக விரைந்து ஓடி வா - இதில் மிக, விரைந்து, ஓடி என்பன இடைப்பிறவரல்.

**வினைமுற்றுக்கள்**

1. வந்தான் ஊருக்குப் போன சாத்தன் - இதில் ஊருக்கு, போன என்பன இடைப்பிறவரல்.

2. இனியள் கற்புக்கரசி கண்ணகி - இதில் கற்புக்கரசி என்பது இடைப்பிறவரல்.

**பெயரெச்சம்**

1. படித்த கவின் மிகு கவிதை - இதில் கவின், மிகு என்பன இடைப்பிறவரல்.
2. பெரிய கடுந்தவ முனிவன் - இதில் கடும், தவ என்பன இடைப்பிறவரல்.

**வினையெச்சம்**

1. முருகன் கற்றுச் சிறப்பாகத் தேர்ந்தான் - இதில் சிறப்பாக என்பது இடைப்பிறவரல்.
2. செல்வி பிறந்து நீண்ட நாள் வாழ்ந்தாள் - இதில் நீண்ட, நாள் என்பன இடைப்பிறவரல்.

## முடிக்கும் சொற்கள் நிற்கும் இடம்

**எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும். (நன் 357)**

வேற்றுமை உருபுகள், வினைமுற்று, பெரயரெச்சம், வினையெச்சம் ஆகியவை பெயர், வினைகளைக் கொண்டு முடியும். அப்பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் உருபுகள்,வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றிற்கு இறுதியிலும் வரும். முதலிலும் வரும்.

**எ.கா**

**வேற்றுமை உருபுகள்**

தம்பி வந்தான் - வந்தான் தம்பி
மரத்தை வெட்டினான் - வெட்டினான் மரத்தை
வாளால் அறுத்தான் - அறுத்தான் வாளால்
சாத்தனோடு வந்தான் - வந்தான் சாத்தனோடு
சாக்திக்குக் கொடுத்தான் - கொடுத்தான் சாக்திக்கு
ஊரின் நீங்கினான் - நீங்கினான் ஊரின்
ஊரிலிருந்து போனான் - போனான் ஊரிலிருந்து
சாத்தனது நாடு - நாடு சாத்தனது
நாட்டின்கண் வாழ்ந்தான் - வாழ்ந்தான் நாட்டின்கண்
சாத்தா வா - வா சாத்தா

**வினைமுற்று**

முருகன் படித்தான் - படித்தான் முருகன்
துன்பம் இல்லை - இல்லை துன்பம்

**பெயரெச்சம்**

படித்த பாடம்
நல்ல சிறுமி

பாடம் படித்த என்று பெயரெச்சத்திற்கு முதலில் பெயர் வராது.

**வினையெச்சம்**

படிக்க வந்தான் - வந்தான் படிக்க

முயற்சி இன்றிக் கெட்டான் - கெட்டான் முயற்சி இன்றி

## இனங்குறித்தல்

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நால்வகைச் சொற்களுள் ஒருசொல் நின்று தன்னை உணர்த்துவதோடு தன் இனத்தையும் தழுவிப் பொருள் தரும். இதனை இனங்குறித்தல் என்பர். இதனை வடமொழியில் உபலட்சணம் என்று கூறுவர்.

**ஒருமொழி ஒழிதன் இனம்கொளற்கு உரித்தே. (நன் 358)**

ஒரு சொல் தனக்குரிய பொருளை மட்டுமன்றி, ஒழிந்துள்ள தனக்கு இனமான பிற பொருள்களை உணர்த்துதலும் உண்டு.

**எ.கா.**

1. சோறு உண்டான்

இதில் சோறு என்ற சொல் அதற்கு இனமான கறி, கூட்டு, மோர், பாயசம் முதலியவற்றையும் உண்டான் என்பதை உணர்த்துகிறது.

2. வெற்றிலை தின்றான்

இதில் வெற்றிலை என்ற சொல் அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றையும் தின்றான் என்பதை உணர்த்துகிறது.

3. நஞ்சு உண்டவன் சாவான்

இதில் நஞ்சு உண்டவன் என்னும் ஆண்பால் வினை தனக்கு இனமான நஞ்சு உண்டவள் சாவாள் , நஞ்சு உண்டவர் சாவார், நஞ்சு உண்டது சாகும், நஞ்சு உண்டவை சாகும் என்னும் பிற பால் வினைகளையும் உணர்த்தி நிற்கின்றது.

## பொதுப்பெயர், பொதுவினைகள் பொதுமை நீக்கும் தன்மை

**பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்**
**மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே. (நன் 359)**

திணை, பால், இடம், காலம் ஆகியவற்றுக்குப் பொதுவான பெயர்களும் வினைகளும் உள்ளன. அவற்றை அடுத்து வரும் சிறப்பு பெயர்களும் சிறப்பு வினைகளும் பொதுத்தன்மையை நீக்கி ஒன்றுக்கு உரிமைப்படுத்தும்.

எ.கா.

**பொதுப்பெயர்**

1. சாத்தன் இவன் - சாத்தன் இது

இதில் சாத்தன் என்பது பொதுப்பெயர். இப்பெயரின் திணைப்பொதுமையைப் பின் வந்த இவன்,இது என்ற சிறப்புப் பெயர்கள் நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது.

2. சாத்தன் வந்தான் - சாத்தன் வந்தது

இதில் சாத்தன் என்ற பெயரின் திணைப்பொதுமையை பின் வந்த சிறப்பு வினை நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது.

3. ஒருவர் என்தாயர் - ஒருவர் என் தந்தையார்

இதில் ஒருவர் என்னும் பெயரின் பால் பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயர் நீக்கி ஒருபாலுக்கு உரிமை செய்தது.

4. மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன

இதில் மரம் என்னும் பெயரின் பால் பொதுமையைப் பின் வந்த சிறப்புவினை நீக்கி ஒரு பாலுக்கு உரிமை செய்தது.

5. யாமெல்லாம் வருவோம், நீரெல்லாம் வருவீர்,அவரெல்லாம் வருவார்

பெயர், இடப்பொதுமையை முன் வந்த சிறப்புப்பெயரும் பின் வந்த சிறப்பு வினையும் நீக்கி ஓரிடத்துக்கு உரிமை செய்தன.

## எச்சங்கள்

குறைந்து நிற்கும் வினைச்சொல் எச்சமாகும். இது பத்து வகைப்படும். இவற்றைச் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்னும் இரண்டனுள் அடக்கலாம்.

**பெயர்வினை உம்மைசொல் பிரிப்புஎன ஒழியிசை**
**எதிர்மறை இசைஎனும் சொல்ஒழிபு ஒன்பதும்**
**குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும். (நன் 360)**

எச்சங்கள் பத்து வகைப்படும்.1. பெயரெச்சம், 2.வினையெச்சம், 3. உம்மையெச்சம், 4. சொல்லெச்சம், 5. பிரிநிலை எச்சம், 6. என எச்சம், 7. ஒழியிசை எச்சம், 8. எதிர்மறை எச்சம் 9. இசை எச்சம், 10. குறிப்பெச்சம்.இவற்றுள் முதல் ஒன்பதும் சொல்லெச்சங்கள் ஆகும். இவை பத்தும் தத்தமக்குரிய எச்சச் சொற்களைக் கொண்டு முடியும்.

இப்பத்துள் பெயரெச்சம், வினையெச்சம், எனவென் எச்சம் என்னும் மூன்றில் மட்டுமே எச்சச் சொற்கள் தொடர்களில் வெளிப்பட்டு நிற்கும். பிறவற்றில் எச்சச் சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

**1. பெயரெச்சம்**

பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம் ஆகும்.

**எ.கா.** செய்த சாத்தன் - தெரிநிலை

நல்ல சாத்தன் - குறிப்பு

**2. வினையெச்சம்**

வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம். ஆகும்.

**எ.கா.** சென்று வீழ்ந்தான் - தெரிநிலை

மெல்ல வந்தான் - குறிப்பு

**3. உம்மையெச்சம்**

உம் என்பது நடந்ததையோ நடக்கப் போவதையோ வெளிப்படுத்துவது உம்மையெச்சமாகும்.

**எ.கா.**

சாத்தனும் வந்தான் முன்னே கொற்றனும் வந்தான் அல்லது பின்னர்க் கொற்றனும் வருவான் எனத் தன்னெச்சத்தைக் கொண்டது.

**4. சொல்லெச்சம்**

சொல் என்னும் இடைச்சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சம் ஆகும்.

**எ.கா.** கடியென்றார் (நீக்கென்றார்)

இதில் கடி என்று சொன்னார் என ஒரு சொல் எஞ்சியது.

**5. பிரிநிலை எச்சம்**

பிரிக்கப்பட்ட பொருளைத் தருவது பிரிநிலை எச்சமாகும்.

**எ.கா.** அவனே கொண்டான்

இது பிறர் கொண்டிலர் எனத் தன்னெச்சம் கொண்டது.

**6. எனவென் எச்சம்**

தனக்குரிய வினையைக் கொண்டு முடிவதே எனவென் எச்சமாகும்.

**எ.கா.** கடல் ஒல்லென ஒலித்தது

இதில் என என்னும் எச்சம் தன்வினையான ஒலித்தது என்பதைக் கொண்டு முடிந்தது.

**7. ஒழியிசை எச்சம்**

ஒழிந்த பொருளைத் தருவது ஒழியிசை எச்சமாகும்.

**எ.கா.** படிப்பதற்கோ வந்தான்

இது விளையாட வந்தான் என ஒழிந்த பொருளைக் கொண்டு முடிந்தது.

**8. எதிர்மறை எச்சம்**

எதிர்மறைப் பொருளைத் தருவது எதிர்மறை எச்சமாகும்.

**எ.கா.** யானோ செய்தேன்

இது செய்யவில்லை என எதிர்மறைப் பொருளைக் கொண்டு முடிந்தது.

**9. இசை எச்சம்**

தொடரில் அமைந்த சொற்களை இடத்திற்கு ஏற்ப வேண்டியன தந்து அகல உரைகூற வேண்டி நிற்பது இசை எச்சமாகும்.

**எ.கா.**

1. கற்றதனால் ஆய பயனென்கொல்

என்ற இடத்தில் நூலைக்கற்றதனால் என ஒரு சொல்லை வருவித்து உரைக்க வேண்டும்.

2. அம்தாமரை அன்னமே நின்னையான் அகன்று ஆற்றுவேனோ?

என்ற இடத்தில் என் உயிரினும் சிறந்த நின்னை எனப் பல சொற்களை வருவித்து உரைக்க வேண்டும்.

**10. குறிப்பு எச்சம்**

பொருளைக் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு எச்சமாகும். அது ஒன்றொழி பொதுச்சொல் முதலாகக் கூறப்பட்ட ஒன்பதுமாகும்.

**எ.கா.**

ஆயிரம் மக்கள் பொருதார்

இதில் மக்கள் என்னும் பொதுப்பெயர் பொருதார் என்னும் வினையால் ஆண்பாலைக் குறித்தது.

## தொகைநிலைத் தொடர்மொழி

சொற்கள் ஒன்றோடு ஒன்று பொருள் பொருத்தமுறத் தொடர்வது தொடராகும். அது 1. தொகை நிலைத் தொடர் 2. தொகா நிலைத் தொடர் என இருவகைப்படும். இவற்றுள் தொகைநிலைத் தொடர் என்பது இருசொற்களுக்கு இடையில் வேற்றுமை முதலியவற்றின் உருபுகள் மறைந்து வருதலைக் குறிக்கும்.

**பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளின் அவற்றின் உருபிடை**
**ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்துஒரு**
**மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல். (நன் 361)**

பெயர்ச்சொல்லோடு பெயர்ச் சொல்லும் பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் கூடி வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என்னும் அறுவகைப் பொருளுடனும் புணர்ச்சி அடையும். அவ்வாறு புணரும் போது ஆறு பொருள்களையும் காட்டுகின்ற உருபுகள் இடையே மறைந்து நிற்கும்படி இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து ஒரு மொழிபோல் நடப்பன தொகைநிலைத்தொடர் ஆகும்.

## தொகைகளின் வகைகள்

**வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை**
**அன்மொழி எனஅத் தொகைஆறு ஆகும். (நன் 362)**

தொகைநிலைத் தொடர்மொழிகள், 1. வேற்றுமைத்தொகை, 2.வினைத்தொகை, 3. பண்புத்தொகை, 4. உவமைத் தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித் தொகை என ஆறுவகைப்படும்.

**எ.கா.**

1. வேற்றுமைத்தொகை - பூனைக்கண்
2. வினைத்தொகை - சுடுசோறு
3. பண்புத்தொகை - கருங்குருவி
4. உவமைத் தொகை - பவளவாய்
5. உம்மைத்தொகை - அண்ணன் தம்பி
6. அன்மொழித் தொகை - கயல்விழி வந்தாள்

## வேற்றுமைத் தொகையின் இலக்கணம்

**இரண்டு முதலாம் இடைஆறு உருபும்**
**வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே. (நன் 363)**

எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் இடையில் நிற்கும் ஐ முதலான ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகையாம்.

**எ.கா.**

1. நிலம் கடந்தான் (நிலத்தைக் கடந்தான்) - 2ஆம் வே. தொகை
2. தலை வணங்கினான் (தலையால் வணங்கினான்) - 3 ஆம் வே.தொகை
3. கொற்றன் மகன் (கொற்றற்கு மகன்) - 4 ஆம் வே. தொகை
4. ஊர் நீங்கினான் (ஊரின் நீங்கினான்) - 5ஆம் வே. தொகை
5. சாத்தன் கை (சாத்தனது கை) - 6 ஆம் வே.தொகை
6. குன்றக் கூகை (குன்றத்தின் கண் கூகை) - 7 ஆம் வே. தொகை

## வினைத்தொகையின் இலக்கணம்

**காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. (நன் 364)**

காலத்தைக் காட்டுகின்ற இடைநிலையும் விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதி மட்டும் பெயரைத் தொடர்ந்து வரின் அது வினைத்தொகை ஆகும்.

**எ.கா.**

நேற்று அடு களிறு

இத்தொடர் இறந்தகால வினைத்தொகை ஆகும். இதனை விரிக்குமிடத்து நேற்று அட்டகளிறு என விரியும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பொருந்தாமல் பொதுவாக நிற்பது முக்கால வினைத்தொகை ஆகும்.

கூப்பு கரம், ஈட்டுபுகழ், காய்கதிர், சுடுதீ, ஊறுகாய், வறுகடலை, கடிநாய், கொல்யானை.

## பண்புத்தொகையின் இலக்கணம்

**பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்**
**ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை. (நன் 365)**

பண்புப் பெயர்க்கும் பண்பை உடைய பொருட் பெயர்க்கும் உள்ள ஒற்றுமையை விளக்குகின்ற ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து நிற்பது, ஒரு பொருளுக்குச் சிறப்புப் பெயர், பொதுப்பெயர் என்னும் இரு பெயர்கள் வருதல் ஆகியவை பண்புத்தொகைகளாம்.

**எ.கா.**

1. பண்புத்தொகை வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் பண்புகளைப் பெற்று வரும்.

செந்தாமரை (செம்மையாகிய தாமரை), கருங்குதிரை - வண்ணம்
வட்டக்கல் (வட்டமாகிய கல்), சதுரப்பலகை - வடிவு
ஒருபொருள் (ஒன்றாகிய பொருள்), இருபொருள் - அளவு
இன்சொல் (இனிதாகிய சொல்) துவர்க்காய் - சுவை

2. ஒரு பொருளுக்கு இருபெயர் (இருபெயரொட்டு) அமைதல்.

ஆனித்திங்கள் - ஆனியாகிய திங்கள்
முல்லைப்பூ - முல்லையாகிய பூ
சாரைப்பாம்பு - சாரையாகிய பாம்பு

## உவமைத்தொகையின் இலக்கணம்

**உவம உருபு இலது உவமத் தொகையே. (நன் 366)**

வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வருகின்ற உவம உருபுகள் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் உவமைத் தொகையாகும்.

**எ.கா.**

**வினை**

| | | |
|---|---|---|
| புலிக்கொற்றன் | - | புலி போலும் கொற்றன் |
| குருவி கூப்பிட்டான் | - | குருவியைப் போலும் கூப்பிட்டான் |

**பயன்**

| | | |
|---|---|---|
| மழைக்கை | - | மழை போலும் கை |
| கற்பக வள்ளல் | - | கற்பகம் போலும் வள்ளல் |

**மெய் (வடிவம்)**

| | | |
|---|---|---|
| துடியிடை | - | துடி போலும் இடை |
| வேய்த்தோள் | - | வேய்போலும் தோள் |

**உரு (நிறம்)**

| | | |
|---|---|---|
| கார்கூந்தல் | - | கார்போலும் கூத்தல் |
| பவளவாய் | - | பவளம் போலும் வாய் |

## உவம உருபுகள்

**போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமத்து உருபே. (நன் 367)**

போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன என்னும் சொற்களும் இவை போன்ற பிற சொற்களும் உவமை உருபுகள் ஆகும்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| போல | - | புலி போலப் பாய்ந்தாள் |
| புரைய | - | கிளி புரையப் பேசினாள் |
| ஒப்ப | - | கயல் ஒப்பக் கண் பிறழ்ந்தது |
| உறழ | - | நிலவு உறழும் ஒளிமுகம் |
| மான | - | கருங்கல் மானும் கொடுநெஞ்சம் |

| | | |
|---|---|---|
| கடுப்ப | - | வாழைப்பூக் கடுக்கும் கூந்தல் |
| இயைய | - | பண் இயையும் பேச்சு |
| ஏய்ப்ப | - | செம்பவளம் ஏய்ப்பத் திகழும் செவ்விதழ் |
| நேர | - | பொன் நேர் மேனி |
| நிகர | - | கார்நிகர் வண்கை |
| அன்ன | - | அரிமா அன்ன வலிமை |
| இன்ன | - | வெண்முத்து இன்ன பற்கள் |

## உம்மைத் தொகையின் இலக்கணம்

**எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**
**எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை. (நன் 368)**

எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்னும் நான்கு அளவைப் பெயர்களிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வரும் தொடர் மொழி உம்மைத்தொகை ஆகும்.

**எ.கா.**

**எண்ணலளவை**

| | | |
|---|---|---|
| உயிர்மெய் | - | உயிரும் மெய்யும் |
| ஆயிரத்தைந்நூறு | - | ஆயிரமும் ஐந்நூறும் |
| பதினாறு | - | பத்தும் ஆறும் |
| கபில பரணர் | - | கபிலரும் பரணரும் |
| சேர சோழ பாண்டியர் | - | சேரரும் சோழரும் பாண்டியரும் |

**எடுத்தலளவை**

| | | |
|---|---|---|
| கழஞ்சே கால் | - | கழஞ்சும் காலும் |
| கழஞ்சே மஞ்சாடி | - | கழஞ்சும் மஞ்சாடியும் |

**முகத்தலளவை**

| | | |
|---|---|---|
| மரக்காலே நாழி | - | மரக்காலும் நாழியும் |
| நாழியே உழக்கு | - | நாழியும் உழக்கும் |
| உழக்கே ஆழாக்கு | - | உழக்கும் ஆழாக்கும் |

**நீட்டலளவை**

| | | |
|---|---|---|
| சாண் அங்குலம் | - | சாணும் அங்குலமும் |
| முழம் சாண் | - | முழமும் சாணும் |

## அன்மொழித் தொகையின் இலக்கணம்

**ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி. (நன் 369)**

வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை என்னும் ஐந்து தொகைநிலைத்தொடர் மொழிகளில் அவற்றின் பொருள்களை தழுவிய அவை அல்லாத பிற சொற்கள் புறத்தே மறைந்து வருதல் அன்மொழித் தொகை எனப்படும்.

ஐந்து தொகைகளுக்கு உரியவை அல்லாத மொழிகள் மறைந்து நிற்பதால் அன்மொழி என்பது காரணப் பெயராகும்.

**எ.கா.**

1. **வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) பூங்குழல் - பூவை அணிந்த குழலினை உடையாள் (2 ஆம் வேற்றுமை)

ஆ) பொற்றொடி - பொன்னால் ஆகிய தொடியினை உடையாள் (3ஆம்வேற்றுமை)

இ) அணி இலக்கணம் - அணிக்கு இலக்கணம் சொன்ன நூல் (4ஆம் வேற்றுமை)

ஈ) பொற்றாலி - பொன்னின் ஆகிய தாலி உடையாள் (5ஆம் வேற்றுமை)

உ) கிள்ளிகுடி - கிள்ளியது குடியிருக்கும் ஊர் (6ஆம் வேற்றுமை)

ஊ) கீழ் வயிற்றுக் கழலை - கீழ் வயிற்றுக்கண் எழுந்த கழலை போல்வான் (7ஆம் வேற்றுமை)

2. **வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) தாழ்குழல் வந்தாள் - தாழ்ந்த குழலினை உடையாள் வந்தாள்
ஆ) செறிதொடி பார்த்தாள் - செறிந்த தொடியினை உடையாள் பார்த்தாள்.

3. **பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) ஆண்டகை வந்தான் - ஆண்மையாகிய பண்பை உடையான் வந்தான்
ஆ) கருங்குழல் வந்தாள் - கரிய குழலினை உடையாள் வந்தாள்.

4. **உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை**

அ) துடியிடை சென்றாள் - துடி போலும் இடையை உடையாள் சென்றாள்
ஆ) கிளிமொழி பேசினாள் - கிளி போலும் மொழியை உடையாள் பேசினாள்.

5. **உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை**

அ) உயிர்மெய் அறிவான் - உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து அறிவான்.

ஆ) தகரஞாழல் சென்றாள் - தகரமும் ஞாழலும் கலந்த சாந்தணிந்தாள் சென்றாள்.

இ) மதித்திருமுகப் பூங்குழல் கண்டாள் - மதிபோலும் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையும் உடையாள் கண்டாள் - பன்மொழித்தொடர்

## தொகைகளில் பொருள் சிறந்து நிற்கும் இடம்

**முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி**
**எனும்நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப்பொருள். (நன் 370)**

தொகைநிலைத் தொடர் மொழிகளில் முதலில் உள்ள சொல்லிலோ, பின்னால் உள்ள சொல்லிலோ, தொடரிலுள்ள அனைத்துச் சொற்களிலுமோ, தொடரிலுள்ள சொற்களில் இல்லாமல் அவற்றிற்குப் புறத்தே விரிக்கப்படும் சொற்களிலோ தொகைச் சொல்லின் பொருள் சிறந்து நிற்கும்.

முன்மொழி - முதலில் உள்ள சொல்.
பின்மொழி - பின்னால் உள்ள சொல்.

பொருள் சிறந்து நிற்றல் - பொருளைச் சிறப்பாக உணர்த்துதல், குறிப்பிட்ட பொருளை வரையறுத்தல்.

**எ.கா.**

**முன்மொழி**

குடம் வனைந்தான், வேங்கைப் பூ, முள் மரம், குவிபூ,செந்தாமரை, கயற்கண்

இவற்றில் குடம், வேங்கை, முள்,குவி, செம், கயல் என்னும் முன்மொழிகள் சட்டி, குறிஞ்சி போன்ற பிற இனங்களை நீக்கி, குறிப்பிட்ட ஒரு சிறப்புப் பொருளைக் காட்டுகின்றன.

**பின்மொழி**

நிலம் உழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ

நிலத்தை மட்டுமே உழுதல் இயலும். இமை கண்ணுக்கு மட்டும் உரிய உறுப்பு. குவளை நீரில் மட்டுமே தளிர்க்கும். தீயின் பண்பு சுடுதல். எனவே இவற்றில் நிலம், கண், நீர், சுடு என்பன இனத்தை விலக்கவில்லை. பின்மொழிகளான உழுதான், இமை, குவளை, தீ என்பவற்றில் மட்டுமே பொருள் சிறந்து நிற்கின்றது. உழுதான் என்று கூறினாலே நிலத்தை உழுதான் என்னும் பொருள் விளங்கும்.அவ்வாறே இமை, குவளை, தீ என்பனவும் ஆகும்.

**அனைத்து மொழி**

கபிலபரணர், புலிவில் கெண்டை, சேர சோழ பாண்டியர்

இவற்றில் கபிலன், பரணன், புலி, வில், கெண்டை, சேரன், சோழன், பாண்டியன் என்னும் அனைத்தும் சமமான பொருள் சிறப்பு உடையன. எனவே இவற்றில் அனைத்துச் சொற்களிலும் தொகைப்பொருள் (கபிலனும் பரணனும், புலியும் வில்லும் கெண்டையும், சேரனும் சோழனும் பாண்டியனும்) சிறந்து நிற்கின்றது.

**புறமொழி**

பூங்குழல், தகரஞாழல்

இவை பூவை உடைய குழல், தகரமும் ஞாழலும் என விரியும். கூறுகிறவர் மனத்தில் கருதிய பொருள் குழலும் ஞாழலும் அல்ல. பூங்குழலை உடையவள், தகரமும் ஞாழலும் கலந்த சாந்து என்பனவே கருதிய பொருள். இப்பொருள் பூ, குழல், தகரம், ஞாழல் என்னும் சொற்களில் இல்லை. இவற்றுக்குப் புறத்தே விரிக்கப்படுகிற உடையவள், சாந்து என்னும் சொற்களிலேயே கருதிய பொருள் சிறந்து நிற்கிறது.

## இடத்தொகை, பெயர்த் தொகைகளுக்கு உரிய வேறுபாடு

**வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்**
**மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும். (நன் 371)**

தொகைச் சொற்களின் இடையில் வல்லின மெய் மிகுந்து வந்தால் அது இடத்தொகைச் சொல்லாகும். தொகைச் சொற்களின் இடையில் மெல்லின மெய் மிகுந்து வந்தால் அது பெயர்த்தொகைச் சொல்லாகும்.

**எ.கா.**

**இடத்தொகை (வல்லெழுத்து)**

1. வடுகக் கண்ணன் - வடுக நாட்டின்கண் பிறந்த கண்ணன்
2. துளுவச் சாத்தன் - துளுவ நாட்டின்கண் பிறந்த சாத்தன்

**பெயர்த்தொகை (மெல்லெழுத்து)**

1. வடுகங் கண்ணன் - வடுகனாகிய கண்ணன் வடுகனுக்கு மகனாகிய கண்ணன்
2. துளுவஞ்சாத்தன் - துளுவனாகிய சாத்தன் துளுவனுக்கு மகனாகிய சாத்தன்

இவ்வாறு வல்லெழுத்தோ மெல்லெழுத்தோ வரின் அவ்வெழுத்தைக் கொண்டு தொகைகளின் வேறுபாட்டை அறிய முடியும்.

வடுக நாகன், வடுக வணிகன், வடுக அரசன் - என மெய்யெழுத்து மிகா மொழிகளில் சொல்லுவான் குறிப்பால் மட்டுமே பொருள் அறிய முடியும்.

## உம்மைத் தொகைக்குச் சிறப்பு விதி

**உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே. (நன் 372)**

உயர்திணை ஒருமையில் வருகின்ற உம்மைத் தொகைகள் பலர்பால் விகுதிகளைப் பெற்று முடியும். அவை ரகர ஒற்றும் கள் என்னும் ஈறும் ஆகும்.

**எ.கா.**

1. கபிலன் பரணன் - கபிலபரணர்
2. கல்லாடன் மாமூலன் - கல்லாடமாமூலர்

3. சேரன் சோழன்பாண்டியன் - சேரசோழபாண்டியர்

இத்தொடர்கள் பலர்பாலில் ரகர ஈற்றைப் பெற்றன.

தேவன் தேவி - தேவன் தேவிகள் - கள் ஈறு பெற்றது.

அஃறிணையிலும் பொதுத்திணையிலும் உம்மைத்தொகைகள் பன்மை விகுதி பெற்றும் பெறாமலும் வரும்.

நன்மை, தீமை - பன்மை விகுதி இன்றி வந்தது

நன்மை தீமைகள் - பன்மை விகுதி பெற்று வந்தது

தந்தை தாய் - பன்மை விகுதி இன்றி வந்தது

தந்தை தாய்கள் - பன்மை விகுதி பெற்று வந்தது.

## தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்

**தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்**
**எல்லைப் பொருளின் மயங்கும் என்ப. (நன் 373)**

வேற்றுமைத்தொகை முதலாக அன்மொழித்தொகை ஈறாக உள்ள தொகைநிலைத் தொடர்மொழிகளை விரித்துப் பொருள் கொள்ளுகின்ற போது அவை இரண்டு பொருள் முதல் ஏழு பொருள் ஈறாகிய பல பொருள்களால் மயங்கும். இவ்வாறு அமைவது பொருள் மயக்கம் ஆகும்.

**எ.கா.**

**தெய்வ வணக்கம்** - தெய்வத்தை வணங்கும் வணக்கம்

- தெங்வத்துக்கு வணங்கும் வணக்கம்

என இரண்டு பொருள்பட மயங்கியது.

**தற்சேர்ந்தார்** - தன்னைச் சேர்ந்தார்

- தன்னொடு சேர்ந்தார்

- தன்கண் சேர்ந்தார்

என மூன்று பொருள்பட மயங்கியது.

**சொல்லிலக்கணம்** - சொல்லினது இலக்கணம்

- சொல்லுக்கு இலக்கணம்

- சொல்லின்கண் இலக்கணம்

- சொல்லினது இலக்கணம்

என நான்கு பொருள்பட மயங்கியது.

**பொன்மணி** - பொன்னால் ஆன மணி

- பொன்னோடு சேர்ந்த மணி
- பொன்னாகிய மணி
- பொன்னின்கண் மணி
- பொன்னும் மணியும்

என ஐந்து பொருள்பட மயங்கியது.

**மரவேலி** - மரத்தைக் காக்கும் வேலி
- மரத்தாலான வேலி
- மரத்துக்கு வேலி
- மரத்தினது வேலி
- மரத்தின் புறத்து வேலி
- மரமாகிய வேலி

என ஆறு பொருள்பட மயங்கியது.

**சொற்பொருள்** - சொல்லால் அறியப்படும் பொருள்
- சொல்லுக்குப் பொருள்
- சொல்லினது பொருள்
- சொல்லின்கண் பொருள்
- சொல்லும் பொருளும்
- சொல்லாகிய பொருள்
- சொல்லானது பொருள்

என ஏழு பொருள்பட மயங்கியது.

இவ்வாறு வேற்றுமைத்தொகை முதல் அன்மொழித்தொகை ஈறாக உள்ள தொடர்மொழிகள் இரண்டும் முதல் ஏழு ஈறாக பல பொருள்களால் மயங்கும் தன்மையுடையனவாகும்.

## தொகாநிலைத் தொடர்மொழி

நிலைமொழி, வருமொழிகளாகிய இருசொற்களின் இடையில் பிறசொற்கள் வெளிப்பட்டு நிற்கும். ஆதலால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் ஒருமொழித் தன்மையின்றிப் பிளவுபட்டு ஒலிக்கும். அதனைத் தொகாநிலைத் தொடர் என்றும் குறிப்பர். இது ஒன்பதாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது.

**முற்றுஈர் எச்சம் எழுவாய் விளிப்பொருள்**
**ஆறுஉருபு இடைஉரி அடுக்குஇவை தொகாநிலை. (நன் 374)**

சொற்கள் மறையாமல் விரிந்து வருதல் தொகாநிலைத் தொடர்மொழி எனப்படும். தொகாநிலைத் தொடர்மொழி ஒன்பது வகைப்படும்.அவை 1. வினைமுற்றுத் தொடர், 2. பெயரெச்சத் தொடர், 3. வினையெச்சத் தொடர், 4. எழுவாய்த் தொடர், 5. விளித் தொடர், 6. வேற்றுமை உருபு விரிந்த தொடர், 7. இடைச் சொற்றொடர், 8. உரிச் சொற்றொடர், 9. அடுக்கு மொழித் தொடர் என்பனவாகும்.

**எ.கா.**

**1. வினைமுற்றுத் தொடர்**

வந்தான் சாத்தன், வந்தான்கண்டு, குழையன் சாத்தன், இல்லை சாத்தன்.

**2. பெயரெச்சத் தொடர்**

வந்த சாத்தன், வருகிற சாத்தன், வரும் சாத்தன், பெரிய மனிதன்.

**3. வினையெச்சத் தொடர்**

வந்து போனான், தோழி இன்றி உண்ணான்.

**4. எழுவாய்த் தொடர்**

சாத்தன் படித்தான், சாத்தன் உளன்.

**5. விளித்தொடர்**

சாத்தா வா, சாத்தா கேள்.

**6. வேற்றுமை விரிதொடர்**

கவிதையை எழுதினான், கண்ணால் பார்த்தான், புலவருக்குக் கொடுத்தான், மலையின் இறங்கினான், சாத்தனது கை, தீயின் கண் வெப்பம்.

**7. இடைச்சொற்றொடர்**

அது கொல் தோழி, என் ஆற்றுங்கொல்லோ உலகு.

**8. உரிச்சொற்றொடர்**

நனி பேதை, சாலப் பேசினாள்.

**9. அடுக்குமொழித் தொடர்**

பாம்பு பாம்பு, ஓடு ஓடு ஓடு, தீ தீ தீ

## வினாக்கள்

1. எச்சம் என்றால் என்ன? பெயரெச்சம் குறித்து எழுதுக.
2. வினையெச்சத்தின் இலக்கணம் பற்றி கட்டுரைக்க.
3. வினையெச்சங்களின் முடிவு குறித்து எழுதுக
4. தொகைநிலைத் தொடரினைச் சான்றுடன் விளக்குக.
5. தொகாநிலைத் தொடர்கள் பற்றி விவரி

# இயல் - 4

## வழாநிலையும் வழுவமைதியும்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நிற்பது தொடர் ஆகும். அச்சொற்கள் தொடருமிடத்து முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபடாமல் நிற்பதே இலக்கண முறையாகும். இவ்வாறு வழுவின்றி சொற்களை வழங்குவது வழாநிலை எனப்படும். இது வழுக் காத்தல் என்றும் கூறப்படும்.அவ்வாறு இல்லாமல் சொற்கள் மாறுபட்டு நிற்பது வழு என்று கூறப்படும். வழுவாக இருந்தாலும் காலந்தோறும் சான்றோரால் ஏற்கப்பட்டு வருவனவும் உள்ளன. அப்படி முன்னோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை வழுவமைதி என்று கூறுவர்.

### வழுக்களின் வகைகள்

**திணையே பால்இடம் பொழுது வினாஇறை**
**மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே. (நன் 375)**

சொற்கள் தமக்குரிய சொல்லோடு மட்டுமன்றி பிறவற்றிற்குரிய சொல்லோடும் தொடர்ந்து வருதல் வழு எனப்படும். இது ஏழு வகைப்படும் அவை 1. திணை வழு, 2. பால் வழு, 3. இட வழு, 4. கால வழு, 5. வினா வழு, 6. விடை, மரபுவழு என்பனவாகும்.

**எ.கா.**

**1. திணை வழு**

ஒரு திணைச்சொல் மற்றொரு திணைச் சொல்லொடு முடிவது திணை வழுவாகும்.

அவன் வந்தது - அவன் உயர்திணை, வந்தது அஃறிணை
அது வந்தாள் - அது அஃறிணை, வந்தாள் உயர்திணை

**2. பால் வழு**

ஒரு பாலைக் குறிக்கும் சொல் மற்றொரு பாலைக் குறிக்கும் சொல்லோடு முடிவது பால் வழுவாகும்.

அவன் வந்தாள் - அவன் ஆண்பால், வந்தாள் பெண்பால்
அவள் வந்தான் - அவள் பெண்பால்,வந்தான் ஆண்பால்

**3. இடவழு**

ஓர் இடச்சொல் மற்றோர் இடச்சொல்லோடு முடிவது இடவழுவாகும்.

யான் வந்தான் - யான் தன்மை இடம், வந்தான் - படர்க்கை இடம்
யான் வந்தாய் - யான் தன்மை, வந்தாய் முன்னிலை

| | |
|---|---|
| நீ வந்தான் | - நீ முன்னிலை, வந்தான் படர்க்கை |
| நீ வந்தேன் | - நீ முன்னிலை, வந்தேன் தன்மை |
| அவன் வந்தாய் | - அவன் படர்க்கை, வந்தாய் முன்னிலை |
| அவன் வந்தேன் | - அவன் படர்க்கை, வந்தான் தன்மை |

**4. கால வழு**

ஒரு காலத்தை உணர்த்தும் சொல் வேறொரு காலம் உணர்த்தும் சொல்லோடு முடிவது கால வழுவாகும்.

| | |
|---|---|
| நாளை வந்தான் | - நாளை எதிர்காலம், வந்தான் இறந்தகாலம் |
| நேற்று வருகிறேன் | - நேற்று இறந்தகாலம், வருகிறேன் நிகழ்காலம் |
| நேற்று வருவேன் | - நேற்று இறந்தகாலம், வருவேன் எதிர்காலம் |
| இன்று வந்தேன் | - இன்று நிகழ்காலம், வந்தேன் இறந்த காலம் |
| இன்று வருவேன் | - இன்று நிகழ்காலம் , வருவேன் எதிர்காலம் |
| நாளை வருகிறேன் | - நாளை எதிர்காலம், வருகிறேன் இறந்தகாலம் |

**5. வினா வழு**

வினவப்படக் கூடாத பொருளை வினவுவது வினா வழுவாகும்.

ஒரு விரலைக் காட்டி இது சிறிதோ? பெரிதோ? என வினவுதல்.
பால் கறக்கின்ற எருமையை பால் மாடா? சினை மாடா? என்று வினவுதல்.

**6. விடை வழு**

வினவியதற்குப் பொருத்தமின்றி விடை கூறுதல் விடை வழுவாகும்.

பட்டுக்கோட்டைக்கு வழி எங்கே? என்ற வினாவுக்கு கொட்டைப்பாக்கு நூறு என்று விடை கூறுதல்.

திருச்செந்தூருக்கு எத்தனை கிலோமீட்டர்? என்ற வினாவுக்கு நூறு கிலோகிராம் என்று விடை கூறுதல்

**7. மரபு வழு**

முன்னோர் கூறிய வழக்கிலிருந்து மாறுபட்டுக் கூறுதல் மரபு வழுவாகும்.

யானை மேய்ப்பானை இடையன் என்றும், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றும், ஆண் ஆட்டினை களிறு என்றும், பெண் மாட்டினை கிடா என்றும் கூறுதல்.

அவ்வாறே எருமைச் சாணத்தை எருமை இலத்தி என்றும், குதிரை இலத்தியை குதிரைச் சாணம் என்றும் கூறுவதும் மரபு வழுவாகும்.

## திணை பால்களுடன் வினா விடைகள் வழுவாமல் காத்தல்

**ஐயம் திணைபால் அவ்வப் பொதுவினும்**
**மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப. (நன் 376)**

திணையில் ஐயம் தோன்றிய போதும், பாலில் ஐயம் தோன்றிய போதும் அவற்றிற்குரிய சிறப்புச் சொல்லால் கூறாமல் பொதுச்சொல்லால் கூற வேண்டும். ஐயம் நீங்கி உண்மை தெரிந்த பின்னர், உறுதியான பொருளுக்குரிய அன்மைச் சொல்லால் கூற வேண்டும்.

அன்மைச் சொல் - அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல.

**திணை ஐயம் வினவுதல்**

**எ.கா.** குற்றியோ மகனோ அங்குத் தோன்றுகிற உருவம்?

தொலைவில் ஓர் உருவத்தைப் பார்த்த ஒருவனுக்கு அது மரக்குற்றியா, மனிதனா என்று திணையில் ஐயம் தோன்றுகிறது. ஐயத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுக், குற்றியோ மகனோ அங்குத் தோன்றுவது? என்றோ, குற்றியோ மகனோ அங்கு தோன்றுகிறவன்? என்றோ வினவுதல் திணை வழுவும் வினா வழுவும் ஆகும். எனவே இருதிணைக்கும் பொதுவான உரு, உருவம், வடிவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, குற்றியோ மகனோ அங்கு தோன்றுகின்ற உரு? என்று வினவுதல் வேண்டும். இவ்வாறு வினவுதல் திணை வழுவமைதி எனப்படும்.

**பால் ஐயம் வினவுதல்**

உயர்திணையில் பால் ஐயம் தோன்றிய இடத்து பொதுச் சொல்லால் வினவ வேண்டும்.

**எ.கா.** ஆணோ பெண்ணோ அங்கு நிற்பவர்?

தொலைவில் ஓர் உருவத்தைப் பார்த்த ஒருவனுக்கு அவ்வுருவம் மனிதரே (உயர்திணை) என்பது உறுதியாகிறது. ஆனால் அம்மனிதர் ஆணா பெண்ணா என்பது உறுதியாகவில்லை. இவ்வாறு திணை அறியப்பட்டுப் பால் அறியப்படாத நிலையில், ஆணோ, பெண்ணோ அங்கு நிற்பவன்? என்றோ, ஆணோ பெண்ணோ அங்கு நிற்பவள்? என்றோ வினவினால், அது பால் வழுவும் வினா வழுவும் ஆகும். எனவே இரு பாலுக்கும் பொதுவான பலர்பால் வினைமுற்றால் கூறினால் வழுவாகாது. இருபாலுக்கும் பொதுவான பலர்பால் பெயர்ச்சொல்லாலும் கூறலாம்.

**எ.கா.** ஆணோ பெண்ணோ அந்த மனிதர்?

இவை உயர்திணையில் பால் ஐயம் தோன்றிய போதுள்ள செய்திகளாகும்.

அ·:.றிணையில் திணை அறியப் பட்டுப் பால் அறியப்படாது ஐயமுற்ற நிலையில், ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவான பெயர்ச்சொல்லால் கூறுதல் வேண்டும்.

**எ.கா.** ஒன்றோ பலவோ வயலில் மேய்ந்த மாடு?

வயலில் மேய்ந்த மாடு ஒன்றோ பலவோ என்பது அறியப்படாத நிலையில், வயலில் மேய்ந்தது ஒன்றோ பலவோ? என்றோ வயலில் மேய்ந்தன ஒன்றோ பலவோ? என்றோ வினாவுதல் பால் வழுவும் வினா வழுவும் ஆகும். எனவே ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவான சொல்லால் கூறுதல் வேண்டும். பெற்றம், மாடு என்பன பொதுப்பெயர்ச் சொற்கள் ஆகும். இவை திணை, பாலில் ஐயம் தோன்றிய போது வினாவுதல் பற்றியவை.

**துணிந்த பொருளைக் கூறும் முறை**

திணையிலும் பாலிலும் ஐயம் தெளிந்து உண்மை உறுதியான நிலையில் துணிந்த பொருளுக்குரிய அன்மைச் சொல்லைச் சேர்த்துக் கூறுதல் வேண்டும்.

1. குற்றி என்றால் மகன் அன்று எனவும்
   மகன் என்றால் குற்றி அல்லன் எனவும் கூற வேண்டும்
2. ஆண்மகன் என்றால் பெண் மகள் அல்லன் எனவும்
   பெண்மகள் என்றால் ஆண்மகன் அல்லள் எனவும் கூற வேண்டும்
3. ஒன்று என்றால் பல அன்று எனவும்
   பல என்றால் ஒன்று அல்ல எனவும் கூற வேண்டும்

இவ்வாறு உறுதி செய்யப்பட்ட பொருளின் மீது மற்றொன்றின் அல்லாத தன்மையை ஏற்றிக் கூறுதல் வேண்டும்.

## திணை வழுவமைதி

**உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்**
**அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.** **(நன் 377)**

உயர்திணை எழுவாய்க்குரிய பயனிலையோடு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாகப் பிறக்கும் அ·:.றிணை எழுவாயும் உயர்திணை எழுவாயோடு சேர்த்து முடிக்கப்படும். இது திணை வழுவமைதி ஆகும்.

**எ.கா-**

கண்ணப்பன் அன்பு பெரியன்
இலக்குவன் மனம் தூயன்

இங்கு 'அன்' என்னும் அ..:.றிணை எழுவாய் கண்ணப்பன் என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய 'பெரியன்' என்னும் உயர்திணைக் குறிப்பு வினைமுற்று கொண்டு முடிந்தது. மனம் என்பதும் அவ்வாறே முடிந்தது.

நம்பி பொன் பெரியன் - பொருள்
நம்பி நாடு பெரியன் - இடம்
நம்பி வாழ்நாள் பெரியன் - காலம்
நம்பி மூக்குக் கூரியன் - சினை
நம்பி குடிமை நல்லன் - குணம்
நம்பி நடை கடியன் - தொழில்

இவற்றுள் நம்பி என்னும் பெயர் உயர்திணை எழுவாய். பொன் முதலான ஆறும் அஃறிணை எழுவாய். இவை உயர்திணைக்குரிய பயனிலையைக் கொண்டு முடிந்தன.

தொடர்தலாவது - அஃறிணைப் பொருள் முதலிய ஆறும் உயர்திணைக்கு உரிமையுடைய பொருள்களாய் நிற்றலாகும்.

சார்த்தலாவது - அஃறிணைப் பொருள் முதலியவற்றின் தன்மையை அவற்றை உடைய உயர்திணையின் மேல் ஏற்றிக் கூறுவதாகும்.

கிணறு நீர் ஊறிற்று
மாடு கோடு கூரிது

என்பன அஃறிணையோடு சார்த்திக் கூறப்பட்டதால் அஃறிணை முடிபைப் பெற்றன.

## திணை, பால், மரபு வழுவமைதி

**திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்**
**மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே. (நன் 378)**

வெவ்வேறு திணை, வெவ்வேறு பால், வெவ்வேறு பொருள்கள் ஆகியவற்றை உணர்த்தும் சொற்கள் பல கலந்து அமையும் தொடர் சிறப்பு, மிகுதி, இழிவு குறித்த சொற்களின் முடிவை கொள்ளும்.

**எ.கா.**

**திணை கலந்து வருதல்**

**1. சிறப்பு**

திங்களும் சான்றோரும் ஒப்பர்

இத்தொடரில் திங்கள் - அஃறிணை, சான்றோர் - உயர்திணை. சிறப்பினால் அஃறிணையாகிய திங்கள் ஒப்பர் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றது.

**2. மிகுதி**

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிபட்டார்
மூத்தார் இளையர் பசுப் பெண்டிர் என்றிவர்கள்

என்னும் எட்டனுள் பசு ஒன்றே அ∴றிணை, எஞ்சிய எழும் உயர்திணை. எனவே மிகுந்த எண்ணிக்கையால் இவர்கள் என உயர்திணை முடிபைப் பெற்றன.

**3. இழிபு**

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா

இத்தொடரில் மூர்க்கன் - உயர்திணை, முதலை - அ∴றிணை. இழிபினால் அ∴றிணைக்குரிய விடா என்னும் வினை கொண்டு முடிந்தது.

**பால் கலந்து வருதல்**

**சிறப்பு**

"தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்"

இத்தொடரில் தையல் (உமாதேவி) - பெண்பால், தாழ்சடையோன் (சிவன்) - ஆண்பால். இவ்வாறு விரவி நின்றும் சிறப்பால் ஆண்டிலன் என ஆண்பால் முடிபைப் பெற்றது.

**பலபொருள் கலந்து வருதல்**

**சிறப்பு**

கறியும் சோறும் உண்டான்

இத்தொடரில் கறி என்பது தின்னுவதற்கு உரியது சோறு உண்ணுவதற்கு உரியது. எனவே கறி தின்றான், சோறு உண்டான் என வர வேண்டும். கறியைக் காட்டிலும் சோற்றுக்குத் தலைமைச் சிறப்புண்டு. அக்காரணத்தால் உண்டான் என்னும் வினை முடிபினைக் கொண்டது.

## திணை, பால் வழுவமைதி

**உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்**
**இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே. (நன் 379)**

மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, சினம், பழிப்பு என்னும் ஐந்து காரணங்களால் பாலும் திணையும் வழுவி வந்தாலும் அவை வழுவமைதி ஆகும்.

**எ.கா.**

**1. மகிழ்ச்சி**

'என் அம்மை வந்தாள்'

என தன் புதல்வனைத் தாய் கூறுதல். புதல்வனாகிய ஆண்பால் மகிழ்ச்சியினால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

**2. உயர்வு**

'அவர் வந்தார்'

என ஒருவனைக் கூறுதல். ஒருவன் எனக் கூற வேண்டியது உயர்வின் காரணமாக அவர் எனப் பலர்பாலாகக் கூறப்பட்டது.

**3. சிறப்பு**

'மன்னனை மூவேழ் உலகிற்கும் தாயே'

எனக் கூறுதல். ஆண்பாலாகிய மன்னன் இங்குச் சிறப்பின் காரணத்தால் பெண்பாலாகச் (தாய்) சுட்டப்பட்டுள்ளான்.

**4. சினம்**

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.

இக்குறட்பாவில் எனைத்துணையர் என்பது பன்மைப்பால். சினத்தின் காரணமாகத் தேரான் என ஒருமைப் பாலில் கூறப்பட்டுள்ளது.

**5. இழிபு**

'பெண்வழிச் செல்வானைப் பெண்' எனல்.

பெண்ணின் பின்னர் செல்லும் இழிவான செயலை செய்வதன் காரணமாகச் செல்வான் என்னும் ஆண்பால், பெண்பாலாகக் கூறப்பட்டது.

## பால், இட வழுவமைதி

**ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்**
**ஓரிடம் பிறஇடம் தழுவலும் உளவே. (நன் 380)**

ஒருமைச் சொல்லுடன் பன்மைச் சொல்லை தழுவிக் கூறுதலும், பன்மைச் சொல்லுடன் ஒருமைச் சொல்லைக் தழுவிக் கூறுதலும், ஓர் இடத்திற்குரிய சொல்லுடன் பிற இடத்திற்குரிய சொல்லைத் தழுவி கூறுதலும் மொழி வழக்கில் உள்ளன.

**1. பால் மயங்குதல்**

**அ) ஒருமைப்பன்மை மயக்கம்**

வெயில் எல்லாம் மறைத்தது மேகம்

இத்தொடரில் வெயில் என்பது ஒருமைப்பால். எல்லாம் என்பது பன்மைப்பாலைக் குறிக்கும் சொல். இவை சேர்த்துக் கூறப்பட்டதால் ஒருமைப் பன்மை மயங்கி வந்துள்ளன.

**ஆ) பன்மை ஒருமை மயக்கம்**

இரண்டு கண்ணும் சிவந்தது

இத்தொடரில் இரண்டு என்பது பன்மைப்பால். இது சிவந்தது என்னும் ஒருமைப்பாலைக் குறிக்கும் சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் பன்மையும் ஒருமையும் மயங்கி வந்துள்ளன.

**2. இடம் மயங்குதல்**

**அ) தன்மைப் படர்க்கை மயக்கம்**

சாத்தன் தாய் இவை செய்வலோ

இது சாத்தனுடைய தாயின் கூற்றாகும். இத்தொடர் சாத்தனின் தாயாகிய யான் எனத் தன்மையில் கூற வேண்டும். அதை விடுத்துத் தாய் எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் இது தன்மைப் படர்க்கை மயக்கமாகும்.

**ஆ) முன்னிலைப் படர்க்கை மயக்கம்**

எம்பியை இங்குப் பெற்றேன்

இது அண்ணனின் கூற்றாகும். இத்தொடரில் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனை நோக்கி நின்னை எனக் கூற வேண்டும். அதை விடுத்து எம்பியை எனப் படர்த்கைச்சொல் சேர்த்துக்கூறப்பட்டதால் இது முன்னிலைப்படர்க்கை மயக்கமாகும்.

**இ) தன்மை, முன்னிலை, படர்க்கை மயக்கம்**

நீயோ அவனோ யாரிது செய்தார் - முன்னிலை, படர்க்கை
யானோ அவனோ யாரிது செய்தார் - தன்மை, படர்க்கை
நீயோ யானோ யாரிது செய்தார் - முன்னிலை, தன்மை
நீயோ அவனோ யானோ யாரிது செய்தார் - முன்னிலை, படர்க்கை, தன்மை.

இவற்றில் இடம் என்பது விரவி ஓர் இடத்திற்குப் பதிலாக பிற இடம் வந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு ஒருமைப் பாலில் பன்மைப் பால் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப்பால் சொல்லையும் மூவிடங்களில் ஒன்றிற்குரிய சொல்லில் பிற இடங்களுக்குரிய சொற்களையும் விரவிக் கூறுதல் இட வழுவமைதி ஆகும்.

## இடம் வழுவாமல் காத்தல்

**தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை**
**எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும். (நன் 381)**

மூவிடங்களை உணர்த்தும் சொற்களில் பிழையின்றி அல்லது மயக்கமின்றி காத்தல் இலக்கணத்தில் முக்கிய இடம் பெறுகிறது. தரல், வரல், கொடை, செலல் என்னும் நான்கு

வினைச்சொற்களும் படர்க்கை ஏற்கும். இவற்றில் தரல், வரல் என்பனவற்றை தன்மை முன்னிலைகளை மட்டுமே ஏற்கும். இவ்வாறு அமைவது இடம் வழுவாமல் காக்கும்.

| | | |
|---|---|---|
| அவனுக்குத் தந்தான் | - தரல் | - படர்க்கை |
| அவனிடத்து வந்தான் | - வரல் | |
| அவனுக்குக் கொடுத்தான் | - கொடை | |
| அவனிடத்துச் சென்றான் | - செலல் | |
| எனக்குத் தந்தான் | - தரல் | - தன்மை |
| என்னிடத்து வந்தான் | - வரல் | |
| உனக்குத் தந்தான் | - தரல் | - முன்னிலை |
| உன்னிடத்து வந்தான் | - வரல் | |

இவ்வாறு தரல், வரல், கொடை, செலல் என்னும் நான்கும் படர்க்கையில் இடம் பெறும். ஆயினும் கொடை, செலல் என்னும் இரண்டும் படர்க்கைக்கே சிறப்பாக அமைவனவாகும்.

தரல், வரல் என்பன படர்க்கைக்கு சிறப்புடையன அல்ல. எனினும் அவை தன்மை ,முன்னிலையில் அமைந்து வரும்.

அவ்வாறே கொடை, வரல் என்பன தன்மை முன்னிலையில் இடம் பெறாது. மேலும் இவை அரிதாக முறைதவறி,

எனக்குக் கொடுத்தான் - தன்மை

நின்பால் சென்றான் - முன்னிலை

எனவும் வரும்.இவ்வாறு தரலும் வரலும் வருவது வழுவமைதி ஆகும்.

## கால வகைகள்

**இறப்பு எதிர்வு நிகழ்வு எனக்காலம் மூன்றே. (நன் 382)**

இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் என காலம் மூன்று வகைப்படும்.

இறப்பு - நடந்ததை உரைப்பது
எதிர்வு - நடக்கப் போவதைக் குறிப்பது
நிகழ்வு - நடந்து கொண்டிருப்பதைக் காட்டுவது.

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் கூறாமல் இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் கூறப்பட்டுள்ளது. இதற்கு காரணம் நிகழ்காலம் மற்றைய காலங்களுக்கும் உரியதாகும் தன்மையுடையதால் முறைமாற்றி உரைக்கப்பட்டுள்ளது.

## கால வழுவமைதி

**முக்கா லத்தினும் ஒத்துஇயல் பொருளைச்**
**செப்புவர் நிகழும் காலத் தானே. (நன் 383)**

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையாக நிகழும் பொருள்களை நிகழ்கால வினைச்சொல்லால் சொல்லுவர் புலவர்.

**எ.கா.**

உலகம் சுற்றுகிறது
மலை நிற்கிறது
கடவுள் கொடுக்கின்றார்.

இங்கு உலகம் சுற்றுவதும், மலை நிற்பதும், கடவுள் கொடுப்பதும் மூன்று காலத்திற்கும் பொருந்தும் நிகழ்வாகும். ஆனால் நிகழ்காலத்தில் குறித்திருப்பது வழு வமைதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே மூன்று காலங்களிலும் நிகழும் தொழிலை நிகழ்காலத்தில் குறிப்பது வழுவின்மை ஆகும்.

## காலம் மயங்குதல்

**விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்**
**பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி. (நன் 384)**

விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு என்னும் நான்கு காரணங்களாலும் மூன்று காலங்களுக்கும் உரிய சொற்கள் ஏற்ற இடங்களில் ஒன்றுக்குரிய இடத்தில் மற்றொன்று மயங்கி வரும்.

கால வழுவமைதி அமையும் முறையினை சில சான்றுகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

‘இந்தக் காட்டு வழியில் செல்வாயாயின் கைப் பொருளை இழந்தாய்’

என்பதில் காட்டு வழியில் சேரலால் கைப்பொருள் இழத்தல் பெரும்பாலும் நடைபெறுவதாகும். எனவே இங்கு எதிர்காலம் இறந்த காலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு காலத்திற்குரியதை மற்றொரு காலத்தினால் குறிப்பது வழுவாயினும் அது வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

**எ.கா**

**1. விரைவு**

அழைத்துப் போக வந்தவன் உண்டு கொண்டிருப்பவனை ‘நீ இன்னும் உண்ணவில்லையா’ என கேட்கும் பொழுது அவன், ‘இதோ உண்டு விட்டேன்’ என்பான்.

உண்ணப் போகிறவனும் அவ்வாறே கூறுவான். இதில் விரைவு அடிப்படையில் எதிர் காலமும் நிகழ் காலமும் இறந்த காலமாய் அமைந்துள்ளன.

**2. மிகுதி**

'களவு செய்ய நினையின் கையறுப்புண்டான்' என்பது மிகுதி அடிப்படையில் எதிர்காலம் இறந்த காலமாக வந்துள்ளது.

**3. தெளிவு**

'எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழை பெய்தது' என்பது தெளிவு அடிப்படையில் எதிர்காலம் இறந்த காலமாயிற்று.

**4. இயல்பு**

"யாம் முன்னே விளையாடுவது இச்சோலை, யாம் பண்டு விளையாடுகிறது இச்சோலை". இதில் காரணம் ஏதுமின்றி இயல்பினால் இறந்த காலம் எதிர்காலமாகவும் நிகழ் காலமாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே மிகுதி, விரைவு, தெளிவு, இயல்பு முதலியவற்றால் ஒரு காலத்தை மற்றொரு காலமாகக் கூறுவது கால வழுவாயினும் கால வழுவமைதியாகக் கொள்ளப்படுகிறது.

## வினா

அறிய வேண்டுவதை வெளிப்படுத்துவது வினாவாகும். இவ்வினா பலவகைப்படும்.

**அறிவுஅறி யாமை ஐயுறல் கொளல்கொடை**
**ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார். (நன் 385)**

வினா ஆறு வகைப்படும்.அவை 1. அறிவினா, 2. அறியா வினா, 3. ஐய வினா, 4. கொளல் வினா, 5. கொடை வினா, 6. ஏவல் வினா என்பனவாகும். இந்த ஆறு வினாக்களையும் அறிஞர்கள் பிழையின்றி வழங்குவர்.

வினவுவோரின் இயல்பையும் நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டே வினாக்கள் ஆறாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

**1. அறிவினா**

தனக்குத் தெரிந்த ஒன்றை பிறர் தெரிந்திருக்கிறாரா என்பதை அறிந்துகொள்ள தெரியாதவரிடம் வினவுதல் அறிவினா ஆகும்.

**எ.கா.**

ஆசிரியர் மாணவரிடம் தனக்குத் தெரிந்த ஒன்றை அறியும் பொருட்டு, 'இதன்பொருள் யாது?' என வினவுதலைக் குறிப்பிடலாம்.

**2. அறியா வினா**

தனக்குத் தெரியாத ஒன்றை அறிந்துகொள்ள தெரிந்தவரிடம் வினவுதல் அறியாவினா ஆகும்.

**எ.கா.**

மாணவன் ஆசிரியரிடம் தனக்குத் தெரியாத ஒன்றை அறியும் பொருட்டு, இதன் பொருள் யாது? என கேட்கும் வினாக்களைக் குறிப்பிடலாம்.

**3. ஐயவினா**

ஐயம் ஏற்படுத்தும் ஒன்றை அறியும் பொருட்டு வினவுதல் ஐயவினா ஆகும்.

**எ.கா**.

அங்கே கிடப்பது பாம்போ கயிறோ? என அமையும் வினாக்களைக் குறிப்பிடலாம்.

**4. கொளல்வினா**

ஒரு பொருளைப் பெறுவதற்காக வினவுதல் கொளல்வினா ஆகும்.

**எ.கா.**

ஒருவர் கடையில் சென்று, "உப்பு உள்ளதோ வணிகரே?" என வினவுவதைக் குறிப்பிடலாம்.

**5. கொடைவினா**

ஒரு பொருளை மற்றொருவருக்குக் கொடுக்கும் பொருட்டு வினவுதல் கொடைவினா ஆகும்.

**எ.கா.**

ஒருவர் மற்றொருவரிடம், 'உனக்கு உணவு வேண்டுமா?' என வினவுதலைக் குறிப்பிடலாம்.

**6. ஏவல்வினா**

ஒருவர் மற்றொருவரை ஒரு பணியின் பொருட்டு ஏவுதல் பொருளில் வினவுதல் ஏவல்வினா ஆகும்.

**எ.கா.**

ஒருவர் மற்றொருவரிடம், 'நீ இன்னும் உணவு உண்ணவில்லையா?' என வினவுதலைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு அறிதலும் அறியாமையும் ஐயப்படுதலும் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையும் தருவதால் அறுவகை வினாக்கள் என அழைக்கப்படுகின்றன.

**விடை**

ஒருவர் வினவும் வினாவிற்கு மற்றொருவர் பதில் கூறுவது விடை ஆகும். இது எட்டு வகைப்படும். எனவே இதனை எண்வகை விடை என குறிப்பிடுகின்றனர்.இது செவ்வன் இறை , இறை பயப்பது என இரு வகைப்படும். செவ்வன் இறை என்பது நேராக விடை தருவது. இறை பயப்பது என்பது குறிப்பால் விடை தருவதாகும்.

**சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்**
**உற்றது உரைத்தல் உறுவது கூறல்**
**இனமொழி எனும்எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப. (நன் 386)**

விடை எட்டு வகைப்படும்.அவை 1. சுட்டு, 2. எதிர்மறை, 3. நேர், 4. ஏவல், 5. எதிர் வினாவுதல், 6. உற்றது உரைத்தல், 7. உறுவது கூறல், 8. இனமொழி கூறல் என்பனவாகும். இவற்றுள் சுட்டு, எதிர்மறை, நேர் என்னும் மூன்றும் செவ்வன் இறையாகும். ஏவல், வினாவுதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி எனும் ஐந்தும் இறைபயப்பன ஆகும்.

**1. சுட்டு விடை**

ஒரு பொருளை சுட்டிக் காட்டும் விடை சுட்டு விடை ஆகும்.

**எ.கா.**

பல்கலைக் கழகத்திற்கு வழி யாது? என்னும் வினாவிற்கு ‘வழி இது’ என சுட்டிக்காட்டுவது சுட்டுவிடை ஆகும்.

**2. நேர் விடை**

ஒரு வினாவிற்கு நேரடியாக விடை கூறுவது நேர் விடை ஆகும்.

**எ.கா.**

நீ வருவாயா? என்னும் வினாவிற்கு ‘நான் வருவேன்’ எனகூறுவது நேர் விடை ஆகும்.

**3. மறை விடை**

ஒரு வினாவிற்கு மறைமுகமாக விடை கூறுவது மறை விடை ஆகும்.

**எ.கா.**

நீ படிப்பாயா? என்னும் வினாவிற்கு ‘படியேன்’ என கூறுவது மறை விடை ஆகும்.

**4. ஏவல் விடை**

ஒரு வினாவிற்கு ஏவல் பொருளில் விடை கூறுவது ஏவல் விடை ஆகும்.

**எ.கா.**

நீ படிப்பாயா என்னும் வினாவிற்கு 'நீ படி' என கூறுவது ஏவல் விடை ஆகும்.

**5. வினாதல் விடை**

ஒரு வினாவிற்கு மற்றொரு வினாவினை விடையாகக் கூறுவது வினாதல் விடை ஆகும்.

**எ.கா.**

நீ படிப்பாயா? என்னும் வினாவிற்கு 'நான் படிப்பேனா' என கூறுவது வினாதல் விடை ஆகும்.

**6. உற்றது உரைத்தல் விடை**

ஒரு வினாவிற்கு தனக்கு ஏற்பட்ட நிலையினை விடையாகக் கூறுவது உற்றது உரைத்தல் விடை ஆகும்.

**எ.கா.**

நீ வருவாயா? என்னும் வினாவிற்கு 'கால் வலித்தது' என கூறுவது உற்றது உரைத்தல் விடை ஆகும்.

**7. உறுவது கூறல் விடை**

ஒரு வினாவிற்கு தனக்கு ஏற்படும் நிலையினை விடையாகக் கூறுவது உறுவது கூறல் விடை ஆகும்.

**எ.கா.**

நீ வருவாயா? என்னும் வினாவிற்கு 'கால் வலிக்கும்' என கூறுவது உறுவது கூறல் விடை ஆகும்.

**8. இன மொழி விடை**

ஒரு வினாவிற்குத் தொடர்புடைய மற்றொரு செயலை விடையாகக் கூறுவது இனமொழி விடை ஆகும்.

**எ.கா.**

நீ வருவாயா? என்னும் வினாவிற்கு 'வேண்டுமானால் வீட்டுக்குச் செல்கிறேன்' என கூறுவது இனமொழி விடை ஆகும்.

மேற்குறிப்பிட்ட எண்வகை விடையுள் சுட்டு, நேர், மறை ஆகிய மூன்றும் விடையை வெளிப்படையாகத் தருவனவாகும். எனவே இவற்றை செவ்வண் இறை என்பர். ஏவல், வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி ஆகிய ஐந்தும் குறிப்பாக விடை தருவனவாகும். எனவே இறை பயப்பன என்பர். எண்வகை விடைகளில் ஈற்றில் இடம்பெறும்

ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருவதால் அவற்றையும் அறிஞர்கள் விடைகளாகவே அமைத்துக் கூறுகின்றனர்.

## வினா, விடைகளில் முதல் சினை வழுவாமை

**வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல். (நன் 387)**

வினவுதலின் போதும் விடை கூறுதலின் போதும் சினையும் முதலும் மயங்கி நிற்பதில்லை. இது வினா, விடை இரண்டிலும் சினையும் முதலும் மயங்குதல் (மாறுதல்) கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

**எ.கா.**

கண் பிறழ்ந்ததோ
நம்பி நல்லனோ?

என வினவினால் கண் பிறழ்ந்தது, நம்பி நல்லன் என விடை அமையும்.

கண் பிறழ்ந்ததோ? என சினையை வினவுவான் அதனை ஒழித்துக் கண் உடையாளைக் கருத்தில் கொண்டு இவள் பிறழ்ந்தாளோ எனக் கேட்டலும் இவள் பிறழ்ந்தாள் எனக் கூறலும் விடையாக அமையும் பொழுது வழுவாகும். இவ்வாறு வினாவிலும் விடையிலும் முதலை ஒழித்து சினையை வினவுதலும் செப்புதலும் வழுவல்ல.

எனவே வினவும் போதும் விடைகொடுக்கும் போதும் சினையும் முதலும் ஒற்றுமை கருதி மயங்கக் கூறப்படுவதில்லை எனலாம்.

## மரபின் இலக்கணம்

**எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (நன் 388)**

மரபு எனப்படுவது காலம் காலமாக மாறாமல் சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் வழக்காறுகள் ஆகும். எந்த ஒரு பொருளை எந்தச் சொல்லால் எம்முறையால் அறிவுடையோர் சொன்னார்களோ அந்தப் பொருளை அச்சொல்லால் அம்முறையில் சொல்லுதலே மரபாகும்.

**எ.கா.**

**மரபு வழாநிலை**

குதிரைக்குட்டி
யானைக்குட்டி
யானைக் கன்று
பசுவின் கன்று
யானையிலத்தி
மாட்டுச் சாணம்
யானைப் பாகன்
ஆட்டு இடையன்

**மரபு வழு**

பசுவின் குட்டி

குதிரைக் குஞ்சு

யானைச் சாணம்

ஆட்டுப் பாகன்

## மரபு வழாநிலை - வேறுவினைப் பொதுச்சொல்

**வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்**
**வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும். (நன் 389)**

வேறுவேறு வினையுடையதாய் நின்ற பொருள்களை ஒருவினையால் சொல்லாது பொதுவினையால் சொல்லுதல் வேண்டும். இங்ஙனம் பல்வேறு வினைகளுக்கும் பொதுவாகிய பொருள்களைப் பிரித்து எண்ணிய இடத்தும் சிறப்பு வினை கூறாது பொதுவினையைக் கொடுத்து முடிக்க வேண்டும்.

**எ.கா.**

| | |
|---|---|
| அடிசில் | - உண்பன, தின்பன, பருகுவன, நக்குவனவற்றிற்குப் பொது |
| அணி | - கவிப்பன, கட்டுவன, செறிப்பன, பூண்பனவற்றிற்குப் பொது |
| இயம் | - கொட்டுவன, ஊதுவன, எழுப்புவனவற்றிற்குப் பொது |
| படை | - எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்குப் பொது |

எனவே இவற்றைச் சொல்லும் போது சிறப்பு வினையால் கூறாமல் பொது வினையால் கூற வேண்டும்.

**பொதுவினை**

| | |
|---|---|
| அடிசில் | - அயின்றார், மிசைந்தார் |
| அணி | - அணிந்தார், மெய்ப்படுத்தார் |
| இயம் | - இயம்பினார், படுத்தார் |
| படை | - வழங்கினார், தொட்டார் |

ஒவ்வொன்றையும் தனித்தனியாக பிரித்துக் கூறும் போதும் பொதுவினையால் கூற வேண்டும்.

சோறு உண்பதற்கு உரியது கறி தின்பதற்கு உரியது.

யாழ் இசைப்பதற்கு உரியது, குழல் ஊதுவதற்கு உரியது. இவற்றை,

சோறும் கறியும், அயின்றார்
யாழும் குழலும் இயம்பினார் } - பொதுவினை

எனப் பொதுவினை கொடுத்துக் கூறுதல் வேண்டும்.

சோறும் கறியும் தின்றார்
யாழும் குழலும் ஊதினார் } - சிறப்புவினை

என ஒன்றற்குரிய சிறப்பு வினையால் கூறுவது வழுவாம்.

சிலநாள் சோறும் (உண்பது) சிலநாள் மாவும் (தின்பது)
சிலநாள் பாலும் சிலநாள் நீரும் (பருகுவது) அயின்றார்.

இத்தொடரில் வேறுவேறு வினைகளுக்குரியவை பொதுவினைச் சொல்லைக் கொண்டு முடிவு பெற்றுள்ளதை அறியலாம்.

**பலபொருள் ஒருசொல்**

ஒருசொல் ஒருபொருளைக் குறித்தே வழங்கப்பெறும். ஒரு சில சொற்கள் பல பொருள்களை விளக்குவனவாக அமைந்துள்ளன. இவற்றைப் பலபொருள் ஒருசொல் என்று கூறுவர். இவை பல பொருள்களைக் குறிப்பதால் பொருள் விளங்காமல் மயக்கத்தை ஏற்படுத்துவனவாய் அமைகின்றன.

## பலபொருள் ஒருசொல் பொருள் அறியும் முறை

**வினைசார்பு இனம்இடம் மேவி விளங்காப்**
**பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்புஎடுத்தே. (நன் 390)**

வினை, சார்பு, இனம், இடம் ஆகிய சொற்களுள் ஒன்றைப் பொருத்தி ஒரு குறிப்பிட்ட பொருளை விளக்குவது பலபொருள் ஒருசொல் ஆகும். அவ்வாறு பொருள் விளங்காத இடத்தில் அப்பொருளுக்குரிய சிறப்புச் சொல்லைச் சேர்த்துப் பொருள் அறிதல் வேண்டும் என புலவர் கூறுவர்.

வினை,சார்பு, இனம், இடம் ஆகியவற்றால் பொருள் விளங்க வைப்பது ஒரு வகையாகும்.

மா என்பது மாமரம், வண்டு, குதிரை, திருமகள் போன்ற பல பொருள்களைத் தருகின்ற ஒரு சொல்லாகும்.

**எ.கா.**

1. மா பூத்தது - பூத்தது என்னும் வினையால் மரத்தைக் குறித்தது.
2. மாவீழ் மலர் - மலர் என்னும் சார்பால் வண்டைக் குறித்தது.
3. யானைத் தேர்மா - யானைப் படை முதலிய இனத்தால் குதிரையைக் குறித்தது.
4. மா வீழ் மார்பன் - மார்பு என்னும் இடத்தால் திருமகளைக் குறித்தது.

சிறப்புச் சொல்லைக் (அடைமொழி) கூட்டிப் பொருள் விளங்க வைப்பது மற்றொரு வகை.

மா ஏறினான் என்ற இடத்தில் ஏறினான் என்ற வினையால் மரத்தில் ஏறினானா? குதிரையில் ஏறினானா? என்ற ஐயம் ஏற்படுகிறது. இவ்ஐயத்தைப் போக்கப் பாய்மா ஏறினான், மாமரம் ஏறினான் எனச் சிறப்புச் சொல்லை முன்னோ பின்னோ சேர்த்துக்கூறி ஐயத்தைப் போக்க வேண்டும்.

**எழுத்தியல் திரியாச் சொற்கள்**

எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு சொல்லும் பொருளும் ஐயப்பட நிற்கின்ற தொடர்மொழிகள் உள்ளன. அவை எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழிகள் என்று அழைக்கப்படுகின்றன.

## ஓசை வேறுபாட்டால் பொருள் தரும் சொற்கள்

**எழுத்துஇயல் திரியாப் பொருள்திரி புணர்மொழி**
**இசைத்திரி பால்தெளிவு எய்தும் என்ப. (நன் 391)**

எழுத்து வேறுபாடின்றி ஒரு தன்மையாக உள்ள தொடர் மொழிகள் கூறுவோரின் ஒலிப்பு வேறுபாட்டினால் வெவ்வேறு பொருளை உணர்த்தும் என்று புலவர் கூறுவர்.

**எ.கா.**

1. செம்பொன்பதின்தொடி
   - → செம்பொன் + பதின் + தொடி
   - → செம்பு + ஒன்பதின் + தொடி
2. நாகன்றேவன்போத்து
   - → நாகன் + தேவன் + போத்து
   - → நாகன் + தேவன்போத்து
   - → நாகன்றே + வன்போத்து
3. குன்றேறாமா
   - → குன்று + ஏறு + ஆமா
   - → குன்று+ ஏறா+ மா
4. குறும்பரம்பு
   - → குறும்பர் + அம்பு
   - → குறும் + பரம்பு
5. புத்தியில்லாதவன்
   - → புத்தி + இல்லாதவன்
   - → புத்தியில் + ஆதவன்
6. தாமரைக்கணியார்
   - → தாமரை + கணியார்
   - → தா + மரைக்கணியார்
   - → தாம் + அரைக்கணியார்
   - → தாம் + அரைக்கு + அணியார்

## ஒருபொருள் பலபெயர் பெறுதல்

**ஒருபொருள் மேல்பல பெயர்வரின் இறுதி**
**ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி. (நன் 392)**

ஒரு பொருளுக்கு அடையாக பல பெயர்கள் வரும் இடத்தில், பொருள் ஒன்றே என்பதனைக் காட்டுவதற்கு இறுதியில் ஒரு வினைமுற்றை முடிக்கும் சொல்லாக கொடுக்க வேண்டும். அடையாக வரும் பெயர்கள் யாவும் ஒரு பொருளே என்று உறுதியான நிலையில் பெயர்தோறும் தனித்தனியே ஒரே வினைமுற்றை முடிக்கும் சொல்லாக வழங்குவதும் சிறுபான்மையாக வழக்கில் உண்டு.

**எ.கா.**

1. ஆசிரியன் பேருர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்.
2. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்.
3. தேசிய கவி மக்கள் கவி புரட்சிக்கவி பாரதி பாடினான்.

இவை பல பெயர்களை அடையாகக் கொண்ட பெயர்கள். இறுதியாக ஒரு வினையைக் கொண்டு முடிவு பெற்றுள்ளன.

எந்தை வருக! பெருமான் வருக!
மைந்தன் வருக மணாளன் வருக!

என்னும் இத்தொடரில் எந்தை, பெருமான், மைந்தன், மணாளன் என ஒரு பொருளைக் குறித்த பல பெயர்கள் வந்தாலும் பெயர்தோறும் ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளன.

**சிறப்புப் பெயர் - இயற்பெயர்**

ஒருவருக்குக் காரணம் கருதியும் கருதாமலும் இடப்படும் பெயர் இயற்பெயர் ஆகும். சிறப்பின் காரணமாக ஒருவருக்கு அமையும் பெயர் சிறப்புப் பெயர் ஆகும். இவ் இருபெயராலும் ஒருவர் அழைக்கப் பெறுதலும் உண்டு.

## சிறப்புப் பெயரின் பின் இயற்பெயர் வருதல்

**திணைநிலம் சாதி குடியே உடைமை**
**குணம்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு**
**இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே. (நன் 393)**

திணை, நிலம், குலம், குடி, உடைமை, பண்பு, தொழில், கல்வி ஆகியவை பற்றி வரும் சிறப்பு பெயர்களும் இயற்பெயரை ஏற்குமாயின் சிறப்புப் பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னுமாக கூறவேண்டும்.

**எ.கா.**

| | **பின் இயற்பெயர்** | **முன் இயற்பெயர்** |
|---|---|---|
| திணை | - குன்றவன் கொற்றன் | கொற்றன் குன்றவன் |
| நிலம் | - சோழியன் சாத்தன் | சாத்தன் சோழியன் |
| குலம் | - பார்ப்பான் துரோணன் | துரோணன் பார்ப்பான் |
| குடி | - பாண்டியன் குலசேகரன் | குலசேகரன் பாண்டியன் |
| உடைமை | - பொன்னன் நம்பி | நம்பி பொன்னன் |
| பண்பு | - கரியன் கம்பன் | கரியன் கம்பன் |
| தொழில் | - நடையன் நாகன். | நடையன் நாகன் |

இத்தொடர்களில் இயற்பெயர் என்பது சிறப்புப் பெயர்களுக்கு முன்னும் பின்னும் வந்துள்ளன. இயற்பெயர் பின் வருவது வழா நிலையாகும். இதுவே சிறப்பு என கருதப்படும். இயற்பெயர் முன்வருவது வழுவமைதி ஆகும். இவ்வாறு திணை, நிலம், குலம், குடி, உடைமை, பண்பு, தொழில், கல்வி எனப் பல நிலைகளில் சிறப்புப் பெயர்கள் அமையும்.

## சுட்டுப்பெயர் வருதல்

**படர்க்கைமுப் பெயரோடு அணையின் சுட்டுப்**
**பெயர்பின் வரும் வினை எனில்பெயர்க்கு எங்கும்**
**மருவும் வழக்கிடைச் செய்யுட்கு ஏற்புழி. (நன் 394)**

சுட்டுப் பெயர் என்பது இயற்பெயருக்குப் பின் அமைந்து வரும். இயற்பெயர் மூவகைப்படும். அவை உயர்திணை இயற்பெயர், அ∴றிணை இயற்பெயர், பொதுப்பெயர் என்பனவாகும்.

**எ.கா.**

1. நம்பி வந்தான் அவனுக்கு உணவளிக்க - உயர் திணை இயற்பெயர் பின் சுட்டு
2. பூனை வந்தது அதற்குப் பால் சோறிடுக - அ∴றிணை இயற்பெயர் பின் சுட்டு
3. சாத்தன் வந்தான் அவனுக்கு உணவளிக்க
   சாத்தன் வந்தது அதற்குப் புல் இடுக } - பொதுப்பெயரின் பின் சுட்டு

சில தொடர்களில் முடிக்கும் சொல்லாக வினைச் சொல் இல்லாமையால் சுட்டுப் பெயர் முன்னும் பின்னும் அமைவதும் உண்டு. இது உலக வழக்காகும்.

**எ.கா.**

அவன் தம்பி - தம்பி அவன்
அது காகம் - காகம் அது

செய்யுளில் சுட்டுப் பெயர் வரையறை இன்றி வேண்டியவாறு முன்னும் பின்னுமாக அமையும். படர்க்கை இடத்திற்குரிய உயர்திணை, அ∴றிணை, பொதுப்பெயர்களோடு சுட்டுப்

பெயர் சேரும்பொழுது அங்கு முடிக்கும் சொல் வினையாக வருமானால் அம்மூவகைப் பெயருக்கும் பின்னால் சுட்டுப் பெயர் வரவேண்டும். அம்முடிக்கும் வினைச் சொல் இல்லையானால் சுட்டுப் பெயர் மூவகைப் பெயருக்கு முன்னும் பின்னும் வரும். இம்மரபு உலக வழக்கத்திற்குரியது. செய்யுளில் வரையறையின்றி வேண்டியவாரே வரும்.

**எ.கா.**

அவனணங்கு நோய்செய்தா னாயிழையாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி.

இச்செய்யுளில் 'அவன்' என முன்னரும் 'அதன்' எனப் பின்னரும் வரையறையின்றிச் சுட்டுப்பெயர் அமைந்துள்ளது.

## அடுக்குத்தொடர்

ஒரு சொல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முறை அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் ஆகும்.

**அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்**
**இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும். (நன் 395)**

ஒரு சொல் இரு முறைக்கு மேல் அடுக்கி வருவதும் பிரித்தால் பொருள் தருவதுமான சொற்கள் அடுக்குத் தொடர் ஆகும். ஒரு சொல்லை பல முறைக் கூறுவது வழுவாகும். ஆனால் அசைநிலை, விரைவு, வெகுளி, அச்சம், அவலம், உவகை ஆகிய பொருள் நிலைகளில் இசை நிறைக்கும் ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறைவரை அடுக்கிக் கூறப்படும். இது வழுவாயினும் வழுவமைதியாகும். அடுக்கி வரும் இத்தகைய சொற்களை அடுக்குத் தொடர் என்பர்.

**எ.கா.**

| | | |
|---|---|---|
| அன்றே அன்றே | - | அசைநிலை |
| வா வா, போ போ | - | விரைவு |
| ஒழிக ஒழிக | - | வெகுளி |
| பாம்பு பாம்பு, தீ தீ | - | அச்சம் |
| ஐயோ ஐயோ | - | அவலம் |
| வாழ்க வாழ்க | - | உவகை |
| ஏ ஏ, ஓ. | - | இசைநிறை |

இத்தொடர்கள் மேற்குறித்த பொருண்மையின் அடிப்படையில் அடுக்கி வந்துள்ளமையால் இவற்றை அடுக்குத் தொடர் எனலாம்.

## இரட்டைக்கிளவி

**இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்து இசையா. (நன் 396)**

ஒரு சொல் இருமுறை வந்து பிரித்தால் பொருள் தராமல் வழங்கும் இரட்டைச் சொல் இரட்டைக்கிளவி ஆகும்.இச்சொல் பிரியாமல் இரண்டிரண்டாகவே இடம் பெறல் வேண்டும். இதனை மரபு வழாநிலை என்பர்.

**எ.கா.**

கிளை மடமடவென முறிந்தது
கூரை பொலபொலவென உதிர்ந்தது.
மழை சலசலவென பொழிந்தது
அவன் வளவளவெனப் பேசினான்

இத்தொடர்களின் வாயிலாக இரட்டைக் கிளவியை அடையாளம் காணலாம். இதனை மரபு வழாநிலை எனவும் வழங்குவர்.

## ஒருபொருள் பலபெயர்

**ஒருபொருள் பல்பெயர் பிரிவில வரையார். (நன் 397)**

ஒரு பொருளுக்கே பல பெயர்களைக் கூறும் போது அப்பொருளில் இருந்து பிரிக்க இயலாதவற்றை நீக்காமல் ஏற்றுக் கொள்வர். எனவே பிரிவுள்ளனவற்றை ஏற்றுக் கொள்வதில்லை.

**எ.கா.**

ஆசிரியன் பேரூர் கிழான் சாத்தன் வந்தான்.
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்.

இவற்றில் சாத்தன் என்ற பொருளுக்கு ஆசிரியன், பேரூர்கிழான் என்னும் பல பெயர்களும், பெருவழுதி என்னும் பொருளுக்கு பாண்டியன், பல்யாகசாலை, முதுகுடுமி என்னும் பல பெயர்களும் வந்துள்ளன.

## ஒரு பொருள் பன்மொழி

**ஒருபொருள் பன்மொழி சிறப்பி னின்வழா. (நன் 398)**

ஒரு பொருளைக் குறித்து வருகின்ற பல சொற்கள் அவ்வாறு வருவதற்கு ஒரு காரணமும் இல்லையென்றாலும் சிறந்து நிற்பதால் அதனை மரபு வழு என்று நீக்காமல் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளலாம்.

**எ.கா.**

1. மீமிசை ஞாயிறு - மேல் மேல் உயர்ந்த (உச்சியில் உள்ள ஞாயிறு)
2. புனிற்று இளங்கன்று - புனிறு - இளமை (பிறந்த கன்று)
3. நாகு இளம்கமுகு - நாகு - இளமை (மிக இளைய கமுகு)
4. உயர்ந்தோங்கு பெருவரை - உயர்தல் - ஓங்குதல் (மிக உயர்ந்த மலை)
5. குழிந்து ஆழ்ந்த கண் குழிதல் - ஆழ்தல் (உள்ளடங்கிய கண்)

இவற்றுள் மீ, மிசை என்பன மேல் என்னும் ஒரு பொருளைத் தந்தன.

புனிறு, இளம் என்பன இளமை என்னும் ஒரு பொருளைத் தந்தன.

நாகு, இளம் என்பன இளமை என்னும் ஒரு பொருளைத் தந்தன.

உயர்ந்து, ஓங்கு என்பன உயர்தல் என்னும் ஒரு பொருளைத் தந்தன.

குழிந்து, ஆழ்ந்த என்பன உள்ளடங்கிய என்னும் ஒரு பொருளைத் தந்தன.

## முற்றும்மை வரும் இடங்கள்

**இனைத்துஎன்று அறிபொருள் உலகின் இலாப்பொருள்**
**வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும். (நன் 399)**

இவ்வளவே என்று வரையறுத்து அறியப்படும் பொருள்களையும் உலகில் இல்லாத பொருள்களையும் வினையுடன் கூறுமிடத்து முற்றும்மை சேர்த்துக் கூற வேண்டும்.

**எ.கா.**

1. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தனர்.
2. மும்மூர்த்திகளும் அருளினர்.
3. பாண்டவர் ஐவரும் நல்லவர்.
4. கண் இரண்டும் சிவந்தன.

இவற்றுள் மூவேந்தர், மும்மூர்த்திகள், பாண்டவர் ஐவர்,இரண்டு கண் என்பன தொகை வரையறுக்கப்பட்ட பொருள்கள்.

உலகில் இல்லாத பொருள்

1. முயற்கொம்பு, ஆகாயப்பூ என்றும் இல்லை.
2. குதிரை முட்டை என்றும் இல்லை

இவை உலகில் இல்லாத பொருள்கள் ஆதலின் முற்றும்மையைப் பெற்று வந்துள்ளன.

## செயப்படுபொருளைச் செய்ததாகக் கூறுதல்

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே (நன் 400)**

செயப்படுபொருளை எழுவாயாக ஆக்கி வினையை ஏற்றிக் கூறுதலும் வழக்கில் உள்ளது.

**எ.கா.**

இல்லம் மெழுகிற்று - இல்லம் மெழுகப்பட்டது

சோறு வேகிறது - சோறு வேக வைக்கப்படுகிறது

சோறு குழைந்திற்று - சோறு குழைக்கப்பட்டது

கால் சுடுகிறது - கால் சுடப்படுகிறது

இவற்றில் இல்லம், சோறு, கால் என்பன செயப்படுபொருள்கள். இத்தொடர்களில் செயப்படுபொருள்கள் எழுவாயாக வந்துள்ளன. கருவி,நிலம்,செயல்,காலம் முதலியனவும் சில இடங்களில் செயப்படுபொருளாக வருவதுண்டு.

இவ்வெழுதுகோல் யான் எழுதியது - கருவி

இத்தொழில் யான் செய்தது - செயல்

இப்பள்ளி யான் படித்தது - இடம்

இந்நாள் அவர் பிறந்தது - காலம்

இத்தொடர்களில் செயப்படு பொருளை கருத்தாவாக வைத்து அதன்மேல் வினையை ஏற்றி கூறப்பட்டுள்ளது.

தமிழில் செயப்பாட்டுவினைக்கு என்று தனி வடிவம் பெருவழக்கில் இல்லை. செய்வினையே செயப்பாட்டு வினையாகவும் வழங்கப்படுகிறது.

## அடைமொழி

**பொருள்முதல் ஆறாம் அடைசேர் மொழி இனம்**
**உள்ளவும் இல்லவும் ஆம்இரு வழக்கினும் (நன் 401)**

உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளிலும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறனையும் அடையாகக் கொண்ட சொற்களுள் இனம் உடையனவும், இனம் இல்லாதனவுமாக இரு வகைகள் உள்ளன.

**எ.கா.**

**உலக வழக்கு**

**இனம் உள்ளன**

பொருள் - நெய் குடம் - பால்குடம்

இடம் - குள நெல் - வயல் நெல்

காலம் - கார்த்திகை விளக்கு - தை விளக்கு

சினை - பூ மரம் - காய் மரம்

குணம் - செந்தாமரை - வெண்டாமரை

தொழில் - ஊன்றுகோல் - ஊது கோல்

இவையாவும் உலக வழக்கில் இனம் உடையவை ஆகும்.

**இனம் இல்லாதன**

பொருள் - உப்பளம்

இடம் - ஊர் மன்று

| | | |
|---|---|---|
| காலம் | - | நாளரும்பு |
| சினை | - | இலை மரம் |
| குணம் | - | செம்போத்து |
| தொழில் | - | தோய்தயிர் |

இவையாவும் உலக வழக்கில் இனம் இல்லாதவை ஆகும்.

**செய்யுள் வழக்கு**

**இனம் உள்ளன**

| | | |
|---|---|---|
| பொருள் | - | பொருட் பெண் |
| இடம் | - | கான்யாறு |
| காலம் | - | முந்நாட்பிறை |
| சினை | - | கலவை மாமயில் |
| குணம் | - | பெரும்பழம் |
| தொழில் | - | ஆடரவு |

இவையாவும் செய்யுள் வழக்கில் இனம் உடையவை ஆகும்.

**இனம் இல்லாதன**

| | | |
|---|---|---|
| பொருள் | - | பொற்கோட்டு இமயம் |
| இடம் | - | வடவேங்கடம் |
| காலம் | - | வேனிற்கோங்கு |
| சினை | - | சிறகர் வண்டு |
| குணம் | - | செஞ்ஞாயிறு |
| தொழில் | - | முழங்கு கடல் |

இவையாவும் செய்யுள் வழக்கில் இனம் இல்லாதவை ஆகும்.

இவ்வாறு உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இனம் உள்ளவற்றை அடை கொடுத்து கூறுவது வழாநிலை என்றும், இனம் இல்லாதவற்றை அடை கொடுத்து கூறுவது வழுவமைதி என்றும் வழங்கப்படுகிறது.

## அடை மொழிகளுக்கு வழுவமைதி

**அடைமொழி இனம்அல் வதும்தரு ஆண்டுஉறின். (நன் 402)**

அடை சேர்ந்த சொல் தனது இனத்தைக் காட்டுவது மட்டுமின்றி, பொருத்தமான இடத்தில் இனம் அல்லாதவற்றையும் காட்டும்.

**எ.கா.**

பாவம் செய்தால் நரகம் புகுவான்

என்னும் தொடர் புண்ணியம் செய்தால் சுவர்க்கம் புகுவான் என்னும் இனத்தைத் தந்தது. அத்துடன் பாவம் செய்பவன் இது செய்தால் இது வரும் என்னும் அறிவில்லாதவன் என்று இனமல்லாததையும் தந்தது.

மேலைச்சேரிச் சேவல் அலைத்தது

என்னும் தொடர் கீழைச்சேரிச் சேவல் தோற்றது என்னும் இனப்பொருளையும் காட்டுகிறது.அத்துடன், மேலைச்சேரியார்க்கு வெற்றி கிடைத்தது என்னும் இனமல்லாததையும் காட்டுகிறது.

## தருதல். அடை, சினை, முதல்கள் ஒன்றை ஒன்று சிறப்பித்தல்

**அடைசினை முதல்முறை அடைதலும் ஈர்அடை**
**முதலோடு ஆதலும் வழக்கியல் ஈர்அடை**
**சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே. (நன் 403)**

தொடரில் ஓர் அடையும் ஒரு சினையும் ஒரு முதலும் ஒன்றை ஒன்று சிறப்பித்து வருதலும், இரண்டு அடைகள் ஒரு முதலைச் சிறப்பித்து வருதலும் உலக வழக்காகும். இரண்டு அடைமொழிகள் ஒரு சினைப் பொருளைச் சிறப்பித்து வருதலும், இம்முறை மயங்கி வருதல் செய்யுள் வழக்காகும்.

**எ.கா.**

**உலக வழக்கு**

சீத்தலைச்சாத்தன், வேற்கைமுருகன், பழக்குலை வாழை, செங்கால் நாரை, முழங்குதிரைக்கடல், கூழங்கைத்தம்பிரான், நொண்டிக்கால் மாதவன் இவை அடை, சினை, முதல் என்னும் முறையில் வந்துள்ளன.

மனைச்சிறுகிணறு, சிறுவெள்ளாங்குருகு , சிறுகருங்காக்கை, குள்ளக் கறுப்புக் குமரன் இவற்றில் இரு அடைகள் முதலுக்கு வந்துள்ளன.

**செய்யுள் வழக்கு**

சிறுபைந்தூவி, கருநெடுங்கண்
இவற்றில் இரு அடைகள் சினைக்கு வந்தன.
பெருந்தோள் சிறுமருங்கின் பேரமர்க்கண் பேதை.

இவற்றில் ஓர் அடை சினைக்கும் இரு அடைகள் சினைக்கும் பல சினைகள் ஒரு முதலுக்கும் வந்துள்ளன.

**இயற்கைப் பொருள் - செயற்கைப் பொருள்**

உலகப் பொருள்களை இரண்டு வகைப்படுத்தலாம். அவை 1. இயற்கைப் பொருள் 2.செயற்கைப் பொருள் என்பனவாம். தனக்குப் பின் தோன்றாமல் தான் தோன்றிய போதே

உடன் தோன்றிய தன்மை உடையது, அதாவது மாறுபடாத் தன்மை கொண்டது இயற்கைப் பொருள். தனக்குப் பின் தோன்றிய தன்மை உடையது, அதாவது மாறுபடுவது செயற்கைப் பொருளாகும்.

## இயற்கைப் பொருளைக் கூறும் முறை

**இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல். (நன் 404)**

இயற்கையாய் உள்ள பொருள்களை இன்ன தன்மை உடையது எனக் கூறுதல் வேண்டும்.

**எ.கா.**

நிலம் வலிது, நீர் தண்ணிது, வளி வீசும், தீ வெய்து, மயிர் கரிது, பயிர் பசியது.

## செயற்கைப் பொருளைக் கூறும் முறை

**காரண முதலா ஆக்கம் பெற்றும்**
**காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்**
**ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்**
**இருமையும் இன்றியும் இயலும் செயும்பொருள். (நன் 405)**

செயற்கைப் பொருட்கள் நான்கு நிலைகளில் கூறப்படும். அவை,

1. காரணச் சொல் முன்னும் ஆக்கச் சொல் பின்னும் வரக் கூறுதல்
2. காரணச் சொல் மறைந்து நிற்க ஆக்கச் சொல் மட்டும் வரப் பெறுதல்
3. ஆக்கச் சொல் மறைந்து நிற்கக் காரணச் சொல் மட்டும் வரப் பெறுதல்
4. ஆக்கமும் காரணமும் மறைந்து வருதல் என்பனவாகும்.

**எ.கா.**

1. கைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர் நல்லவாயின.

   எண்ணெய் பெற்றமை - காரணம் (முன் வந்தது) ஆயின - ஆக்கம் (பின் வந்தது)

2. பயிர் நல்லவாயின
   மயிர் நல்லவாயின } - ஆக்கச்சொல் மட்டும் வந்தது

3. கைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர்நல்ல
   எருப் பெய்தமையால் பயிர் நல்ல } - காரணம் மட்டும் வந்தது

4. பயிர் நல்ல
   மயிர் நல்ல } - ஆக்கமும் காரணமும் மறைந்து நின்றன

இவற்றுள் முதலில் உள்ளது ஒன்று மட்டுமே வழாநிலை. பின்னால் வந்த மூன்றும் வழுவமைதி ஆகும்.

## வணிகர் விடை கூறும் முறை

**தம்பால் இல்லது இல்எனின் இனனாய்**
**உள்ளது கூறி மாற்றியும் உள்ளது**
**சுட்டியும் உரைப்பர் சொல்சுருங் குதற்கே. (நன் 406)**

ஒருவர் வினவிய பொருள் தம்மிடம் இல்லாத போது, அதனை இல்லையென்று கூறுவதாயின், வினவிய பொருள்களுக்கு இனமாகத் தம்மிடம் உள்ளதைக் கூறியும், இனமாக உள்ளதைச் சுட்டி இல்லை என்று கூறியும் விடையளிப்பர். மேலும், வினவிய பொருள் தம்மிடம் உள்ளதாயின், அதனை இவ்வளவு உண்டு என்று சுட்டியும் விடையளிப்பர். வினாவும் விடையுமாகிய உரையாடலின் சுருக்கம் காரணமாக இவ்வாறு பேசுவர்.

**எ.கா.**

வினா - பயறு உளதோ வணிகரே?
விடை - உளுந்து உள்ளது

(பயிறு - இல்லாதது , உளுந்து வணிகரிடம் இருப்பது)

இவ்வாறு விடை கூறுவதால் அடுத்து என்ன உண்டு எனும் வினா எழ வேண்டிய தேவை இல்லை.

வினா - பயறு உண்டோ வணிகரே?
விடை - ஒரு கிலோ உள்ளது

இவ்வாறு விடை கூறுவதால் அடுத்து எவ்வளவு உண்டு எனும் வினா எழத் தேவையில்லை.

எனவே தம்மிடம் இல்லாத பொருளை இல்லை எனக் கூறுமிடத்து தம்மிடம் உள்ள இனமான பொருளைக் கூறி அதனை இல்லை என உணர்த்தியும், உள்ளதாயின் இவ்வளவு உண்டு என உணர்த்தியும் வினாவும் விடையுமாக சுருக்கி உரைப்பர். இவ்வாறு உரைப்பது விடை மரபு வழுவாமை ஆகும்.

## ஈ, தா, கொடு என்னும் சொற்கள்

**ஈதா கொடுஎனும் மூன்றும் முறையே**
**இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை. (நன் 407)**

ஈ, தா, கொடு என்னும் மூன்றும் இரப்பவர் கூறும் சொற்கள் ஆகும். ஈ என்பது இழிந்தவன் உயர்ந்தவனிடம் இரக்கும் சொல்லாகும். தா என்பது ஒத்தவன் ஒத்தவனிடம் இரக்கும் சொல்லாகும். கொடு என்பது உயர்ந்தவன் இழிந்தவனிடம் இரக்கும் சொல்லாகும்.

இழிந்தவன் தன்னின் உயர்ந்தவனிடத்து இரத்தல் ⟶ ஈ

தன்னின் ஒத்தவனிடம் கேட்டல் ⟶ தா

உயர்ந்தவன் தன்னின் இழிந்தவனிடம் கேட்டல் ⟶ கொடு

**எ.கா.**

ஆசிரியரே! ஈ - இழிந்தோன் இரப்பு
தோழா! தா - ஒப்போன் இரப்பு
மகனே! கொடு - உயர்ந்தோன் இரப்பு

## குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள்

**முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே. (நன் 408)**

வெளிப்படையாக அன்றிக் குறிப்பினால் பொருள் உணர்த்துகின்ற சொற்களும் உண்டு.

**எ.கா.**

குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்.

இத்தொடர் கோழி எறிதலாகிய வெளிப்படைத் தொழிலை முதன்மைப் படுத்தவில்லை. மாறாகப் பெரிய செல்வத்தினை உடையவர் என்பதைக் குறிப்பால் உணர்த்தியது.

வெளிப்படையாக பொருள் விளங்கச் சொல்லுதல் மரபு வழாநிலை ஆகும். குறிப்பால் உணர்த்துதல் வழுவமைதியாகும்.

## அ.்றிணையை உயர்திணை போலக் கூறுதல்

**கேட்குந போலவும் கிளக்குந போலவும்**
**இயக்குந போலவும் இயற்றுந போலவும்**
**அ.்றிணை மருங்கினும் அறையப் படுமே. (நன் 409)**

கேளாத பொருள்களைக் கேட்பன போலவும், பேசாதவற்றைப் பேசுவன போலவும், நடக்காதவற்றை நடப்பன போலவும், செய்யாதவற்றைச் செய்வனபோலவும் அ.்றிணையை உயர்திணைப் போலவைத்துக் கற்பனையாக சொல்லப்படுவதும் உண்டு.

**எ.கா.**

1. நன்னீரை வாழி அனிச்சமே - கேளாத அனிச்ச மலரிடம் கேட்பது போலக்கூறுதல்
2. பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - பேசாத கண்ணைப் பேசுவது போலக் கூறுதல்
3. இவ்வழி அவ்வூர்க்குப்போகும் - நடக்கும் தன்மையற்ற வழியை நடப்பது போலக் கூறுதல்
4. தன் நெஞ்சேதன்னைச் சுடும் - சுடாத நெஞ்சத்தைக் சுடுவது போலக் கூறுதல்

அ.்றிணைப் பொருள் உயர்திணைப் பண்புகளைப் பெற்றிருப்பது போலக் கூறுதல் வழுவமைதி ஆகும்.

## உருவகம், உவமை அணிகளில் திணைகள் மாறிவருதல்

**உருவக உவமையில் திணைசினை முதல்கள்**
**பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே. (நன் 410)**

உருவக அணியிலும் உவமை அணியிலும் திணை சினை முதலானவை தம்முள் மயங்கி வரும். இவை ஏற்றுக்கொள்ளத் தக்கவையே ஆகும்.

**எ.கா.**

**உருவகம்**

1. அரசனாகிய சிங்கத்திற்கு பகைவர் கூட்டமாகிய யானைகள் அஞ்சி ஓடின.

   இத்தொடரில் உயர்திணையுடன் அஃறிணை மயங்கி உள்ளது.

2. கல்வி மங்கையை நல்லோர் விரும்புவர்

   இத்தொடரில் அஃறிணை உயர்திணையுடன் மயங்கிற்று.

3. அரசனின் தம்பியர் இருவரும் இரு தோள்கள்

   இதில் உயர்திணை முதல் உயர்திணைச் சினையுடன் மயங்கிற்று.

4. முகமாகி மதி

   இதில் உயர்திணைச் சினை அஃறிணை முதலுடன் மயங்கிற்று

**உவமை**

1. மயில் போலும் மங்கை

   அஃறிணை முதல் உயர்திணை முதலுடன் மயங்கிற்று.

2. முற்றிய நெற்கதிர்கள் கற்றார் போல் கவிழ்ந்தன

   அஃறிணை சினை உயர்திணை சினையுடன் மயங்கிற்று.

3. கயல்போலும் கண்

   உயர்திணை சினை அஃறிணை முதலுடன் மயங்கிற்று.

இவ்வாறு உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை அஃறிணைகளும் சினை முதலும் தம்முள் மயங்கி வருதலும் இவை தவிர பிற தம்முள் மயங்கி வருதலும் உண்டு. இவை வழுவமைதியாகும்.

## பொருள்கோள்

பொருள்கோள் என்பது செய்யுளில் பொருள் அமைந்து நிற்கும் முறையாகும். இதனை பொருள் + கோள் எனப் பிரித்துப் புரிந்து கொள்ளலாம். பொருள் கொள்ளும் முறை என்பது பொருள். செய்யுளில் இடம்பெறும் சொற்களை உள்ளவாறும், முன்பின்னாக மாற்றியும் பொருள் கொள்ளும் முறை பொருள் கோள் எனப்படும்.

**யாற்றுநீர் மொழிமாற்று நிரல்நிறை வில்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு**
**அடிமறி மாற்று எனப் பொருள்கோள் எட்டே. (நன் 411)**

பொருள்கோள்,

1. யாற்று நீர்ப் பொருள்கோள்
2. மொழி மாற்றுப் பொருள்கோள்
3. நிரல் நிரைப் பொருள்கோள்
4. பூட்டுவில் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளை மறி பாப்புப் பொள்கோள்
7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்

என எட்டு வகைப்படும்.

## யாற்றுநீர்ப் பொருள்கோள்

**மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்**
**அற்றுஅற்று ஒழுகும்அ.்.து யாற்றுப் புனலே. (நன் 412)**

ஆற்று நீரானது முன்னும் பின்னும் திரும்பாது ஒரே சீராக இடையில் தடையின்றி செல்லும் ஓட்டம் போலப் பாடலின் சொற்கள் நேராகப் பொருள் கொள்ளுமாறு அமைவது யாற்றுநீர் பொருள்கோள் ஆகும். இதனை ஆற்று நீர்ப் பொருள்கோள் என்றும் குறிப்பிடுவர். யாறு என்பது ஆறு ஆகும்.

**எ.கா.** சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தலே.

இப்பாடலில் சொல் என்னும் எழுவாய், இருந்து, ஈன்று, நிறுவி என்னும் எச்சங்களை முறையாகக் கொண்டு காய்த்த என்னும் பயனிலையை ஈற்றில் பெற்று முடிந்துள்ளது. ஆற்று நீர் ஓட்டம் போல ஓர் ஒழுங்கு முறையுடன் இடையில் தடைபடாமல் பொருள் அமைந்துள்ளது. சொற்களை முன் பின்னாக மாற்ற வேண்டிய நிலை இல்லை. ஒன்றோடொன்று அடுத்தடுத்துத் தொடர்ந்து நின்ற நிலையில் பொருள் கொள்ளும் முறையில் அமைந்துள்ளன. இவ்வாறு மொழிமாற்று முதலிய பிற பொருள்கோள்களைப் போன்று பிறழ்ந்து செல்லாமல் ஆற்றுநீரின் ஓட்டத்தைப் போல அடிதோறும் சிறந்த பொருள் அமைவது யாற்றுநீர் பொருள்கோள் ஆகும்.

## மொழிமாற்றுப் பொருள்கோள்

**ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை**
**மாற்றிஓர் அடியுள் வழங்கல்மொழி மாற்றே. (நன் 413)**

செய்யுளில் அமைந்த சொற்களைப் பொருள் நிலைக்கு ஏற்ப ஓர் அடிக்குள் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொள்ளும் நிலை மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

**எ.கா.** சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப
கானக நாடன் சுனை.

காடுகள் சூழ்ந்த நாட்டையுடைய அரசனது மலைச்சுனை, சுரைக்காய் மிதக்க அம்மி அமிழ மலை போன்ற யானைக்கு கால் நிலைக்கும் ஆழமும் முயலுக்கு நீந்தத்தக்க தன்மையும் உடையதாகும் என்பது கற்றறிந்தோர் கருத்தாகும். ஆனால் சுனையில் சுரைக்காய் உள்ளே போகும், அம்மி மேலே மிதக்கும், யானை நிற்க முடியாமல் நீந்தும், முயல் மூழ்காமல் நிற்கும் என்று பொருள் கொள்ளும்படியாக இப்பாடல் உள்ளது. இது பொருள் பொருத்தம் உடையதாக இல்லை. எனவே கீழ்க்கண்டவாறு ஒரே அடிக்குள் மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

சுரை மிதப்ப அம்மி ஆழ வரையனைய
யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப
கானக நாடன் சுனை.

என்று பொருள் மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

முதல் அடியில் ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மியை மிதப்ப என்னும் பயனிலைக்கும் மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரையை ஆழ என்னும் பயனிலைக்கும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் அடியில் நீத்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயலை நிலை என்னும் பயனிலைக்கும் நிலை என்னும் பயனிலைக்கு இயைந்த யானையை நீத்து என்னும் பயனிலைக்கும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆனால் செய்யுளில் பயனிலைக்குப் பொருந்தும் சொற்களை மாற்றி ஏலாத பயனிலைகளை தனித்தனியே கூட்டி ஓரடிக்குள் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் கொள்வது மொழி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.

## நிரல்நிறைப் பொருள்கோள்

**பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்**
**வேறுநிரல் நிறீஇ முறையினும் எதிரினும்**
**நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே. (நன் 414)**

நிரல் நிறை என்பது வரிசை முறை ஆகும். பெயரும் வினையுமாகிய சொற்களை முறையாகவோ எதிராகவோ வரிசைப்பட நிறுத்திப் பொருள் கொள்வது நிரல் நிரைப் பொருள்கோள் ஆகும். இது இரு வகைப்படும். அவை, 1. முறை நிரல்நிறை 2. எதிர் நிரல்நிறை என்பனவாகும்.

**முறை நிரல்நிரை**

சொற்களை நேருக்கு நேராக முறை மாறாமல் அமைப்பது முறை நிரல் நிரை ஆகும்.

**எ.கா.**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இக்குறளில் அன்பு இல்வாழ்க்கைக்கு உரிய பண்பு என்றும் அறம் இல்வாழ்க்கையின் பயன் என்றும் சொற்கள் முறை மாறாமல் நிரல் நிறையாக அமைந்துள்ளன. எனவே இது முறை நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

**எதிர் நிரல்நிரை**

சொற்களை எதிர் எதிராக அமைத்து பொருள் கொள்வது எதிர் நிரல் நிறை ஆகும்.

**எ.கா**

களிறும் கந்தும் போல நளிகடல்
கூம்பும் கலனும் தோன்றும்
தோன்றல் மறந்த துறைகெழு நாடே.

இப்பாடலில் களிறு போலக் கலனும், கந்து போலக் கூம்பும் தோன்றும் என எதிர் எதிராக நிறுத்திப் பொருள் கொள்ள வேண்டும். சொற்களை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளும் முறைக்கு எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும். இவ்வாறு பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறு வரிசையாகக் கொண்டு முறையாகவோ எதிராகவோ இதற்கு இது பயனிலை என்னும் பொருள்பட அமைத்துப் பாடுவது நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

## பூட்டுவில் பொருள்கோள்

**எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்**
**பொருள்நோக்கு உடையது பூட்டுவில் ஆகும். (நன் 415)**

வில்லின் இரு முனைகளிலும் நாண் பூட்டப்பெற்று இணைக்கும் செயல் வில் பூட்டு ஆகும். எனவே இதனை வில் பூட்டு என்று கூறுவர். அவ்வாறே ஒரு பாடலின் இறுதிச் சொல்லும் முதற்சொல்லும் இணைந்து பொருள் முழுமை பெறுவதாக அமைப்பது பூட்டுவில் பொருள்கோள் ஆகும்.

**எ.கா**

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடின் பெரிதாம் ஏதம் - உறந்தையர்கோன்
தண்ணார மார்பில் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

இப்பாடலில் கதவு என்னும் இறுதிச் சொல் திறந்திடுமின் என்னும் முதல் சொல்லுடன் சேர்ந்து பொருள் முழுமை பெறுகிறது. அவ்வாறு சேர்ப்பது வில்லில் கயிறு பூட்டுவது போல் அமைந்துள்ளது. இவ்வாறு செய்யுளில் இறுதி சொல்லுடன் முதல் சொல்லை சேர்த்துப் பொருள் கொள்ளுவது பூட்டுவில் பொருள்கோள் ஆகும்.

## தாப்பிசைப் பொருள்கோள்

**இடைநிலை மொழியே ஏனைஈர் இடத்தும்**
**நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை. (நன் 416)**

தாம்பு இசை என்பது தாப்பு இசை ஆனது. தாம்பு என்பது ஊஞ்சல் கயிறு ஆகும். ஊஞ்சல் கயிறு முன்னும் பின்னும் செல்வது போன்று ஒரு பாடலின் நடுவில் அமைந்த சொல் அப்பாடலின் முன்னும் பின்னும் சென்று பொருள் தந்து நிற்குமாயின் அதனைத் தாப்பிசைப் பொருள்கோள் என்பர்.

**எ.கா.**

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

இக்குறளில் இடையில் அமைந்துள்ள ஊன் என்னும் சொல் முன் சென்று ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என்றும் பின் சென்று ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு என்றும் பொருள் தந்து நிற்கிறது. எனவே அது ஊஞ்சல் கயிறு முன்னும் பின்னும் செல்வது போன்று அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு ஒரு செய்யுளில் இடையில் நிற்கும் சொல், அதன் முதலிலும் ஈற்றிலும் சென்று இயைந்து பொருள் தருவது தாப்பிசைப் பொருள்கோள் எனலாம்.

## அளைமறியாப்புப் பொருள்கோள்

**செய்யுள் இறுதி மொழிஇடை முதலினும்**
**எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே. (நன் 417)**

அளை மறி பாப்பு என்பதற்குப் புற்றினுள் நுழையும் பாம்பு என்று பொருள். பாம்பானது புற்றினுள் நுழைந்தவுடன் தானே மடங்கித் தலை மேலாகவும் வால் கீழாகவும் நிலைமாறும். அவ்வாறு மாறும் போது உடல்பகுதி முழுவதும் தலைப்பகுதியைத் தொட்டுக் கொண்டே செல்லும். அவ்வாறே பாடலின் ஒரு பகுதியுடன் பிற பகுதிகள் தொடர்பு கொண்டு பொருள் புலப்படுத்தும். இது அளைமறி பாப்புப் பொருள் கோள் ஆகும்.

**எ.கா.**

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
    தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியில் கழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த

வினையென்றே முனிவார் தாமும்

வாழ்ந்த பொழுதினே வானெய்து

நெறிமுன்னி முயலாதாரே.

இப்பாடல் எவ்வாறு அமைந்துள்ளதோ அவ்வாறே பொருள் கொண்டால் அது பொருந்தாது. எனவே 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' என்னும் ஈற்றடியினை பிற அடிகளுடன் இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும். அதுவே முழுமையான பொருளைத் தரும். செய்யுளின் இறுதி அடி அதன் இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள் தந்துள்ளது. எனவே இது அளை மறி பாப்பு பொருள்கோள் ஆகும்.

## கொண்டு கூட்டுப் பொருள்கோள்

**யாப்புஅடி பலவினும் கோப்புடை மொழிகளை**
**ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே. (நன 418)**

செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருள் அமைப்புக்கு ஏற்ப மாற்றிக் கொண்டு பொருள் காண்பது கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆகும்.

**எ.கா.**

தெங்கங்காய் போலத் திரண்டுஉருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி

அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்.

இப்பாடலின் சொற்களை உள்ளது போலவே வைத்துப் பொருள் கொண்டால் பொருத்தமும் தெளிவும் அமையாது. எனவே 'வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத்து அன்ன பைங்கூந்தலை உடையாள் மாமேனி மேல் தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட, வெண்கோழி முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம்' என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பல அடிகளின் சொற்களையும் கொண்டு சேர்த்துப் பொருள்கொள்வது கொண்டு கூட்டுப் பொருளாகும்.

### அடிமறிமாற்றுப் பொருள்கோள்

**ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்**
**யாப்புஈறு இடைமுதல் ஆக்கினும் பொருள்இசை**
**மாட்சியும் மாறா அடியவும் அடிமறி. (நன் 419)**

ஒரு பாடலின் அடிகளை முன்பின்னாக மாற்றி அமைத்தாலும் அதன் பொருளும் ஓசையும் மாறாமல் இருக்குமாறு அமைப்பது அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகும். அந்தந்த அடியில் பொருள் முடிந்து விட்டால் மட்டுமே அந்த அடியை எங்கு வேண்டுமாயினும் மாற்றி அமைக்க முடியும்.

**எ.கா**

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.

இப்பாடலின் நான்கு அடிகளையும் முன் பின்னாக மாற்றினாலும் பொருள் மாறாது. ஆகவே இது அடி மறி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.

## வினாக்கள்:

1. திணை பால்களுடன் வினா விடைகள் வழுவாமல் காத்தல் எவ்வாறு? விவரி.
2. மரபு வழுவமைதியினை விளக்கி வரைக.
3. அறுவகை வினாக்களைச் சான்றுடன் விளக்குக.
4. எண்வகை விடைகளைச் சான்றுடன் விவரி.
5. பொருள்கோள் என்றால் என்ன? வகைகளை விளக்குக.

# இயல் - 5

# இடையியல்

இடைச்சொல்லின் இலக்கணத்தை உணர்த்தும் இயல் இடையியல் எனப்படும். இடைச்சொல் என்பது காரணப் பெயராகும். இது சொற்களின் முன்னும் பின்னும் நிற்குமாயினும் பெரும்பாலும் இடையில் நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று என்பது சேனாவரையர் கூறும் கருத்து. தனித்து இயங்கும் தன்மையின்றிப் பெயர், வினைகளை இடமாகக் கொண்டு நடப்பதால் இடைச்சொல் என்கிறார் தெய்வச்சிலையார்.

## இடைச்சொல்லின் வகையும் இலக்கணமும்

**வேற்றுமை வினைசா ரியையொப்பு உருபுகள்**
**தத்தம் பொருள் இசைநிறை அசைநிலை**
**குறிப்பு என்எண் பகுதியின் தனித்துஇயல் இன்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து**
**ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல். (நன் - 420)**

இடைச்சொல் தனித்து வராது, பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் இடமாகச் சார்ந்து வரும். பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் அகத்தும், அவற்றுக்குப் பின்னோ முன்னோ புறத்தும் வரும். ஓரிடத்தில் ஓர் இடைச்சொல்லாகவோ, பல இடைச் சொற்கள் சேர்ந்தோ வரும். பெயர், வினைச் சொற்களின் பொருளொடு பொருந்தி வரும்.இவ்வாறு வருகின்ற இடைச்சொல் எட்டு வகைப்படும். அவை,

1. வேற்றுமையுருபு
2. கால இடைநிலை,விகுதி
3. சாரியை
4. உவமையுருபு
5. தத்தமக்கு உரிய பொருளை உணர்த்தும் சொல்
6. இசைநிறை (செய்யுளில் இசையை நிறைத்தற்கு வரும் சொல்)
7. அசைநிலை (செய்யுளிலும் உரையிலும் அசையை நிறைத்தற்காக வரும் சொல்)
8. ஒலிக்குறிப்பால் பொருளை உணர்த்தும் சொல்

என்பனவாகும்.

**எ.கா.**

**1. வேற்றுமையுருபு**

பெயருக்குப் புறத்தே நின்று பொருள்களை வேற்றுமைப் படுத்தும். ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியன

சாத்தனை, சாத்தனால்

**2. வினையுருபுகள்**

கால இடைநிலை - த், ட், கிறு, ப், வ் முதலியன.

வந்தான் (த்) வருகிறான் (கிறு) வருவான் (வ்)

விகுதி - ஏன், ஓம், ஆய், ஈர், ஆன், ஆள்,ஆள், அர், து, அ முதலியன

நடந்தனன் - அன், நடந்தான் - ஆள்

**3. சாரியை - அத்து, அற்று, இன் முதலியன**

நடந்தனன் - அன் வினையின் அகத்துறுப்பாய் நின்றது.

புளியங்காய் - அம் பெயரின் அகத்துறுப்பாய் நின்றது

மன்றம் - அம் பெயரின் புறத்துறுப்பாய் நின்றது.

**4. உவமையுருபு**

போல, மான, ஒப்ப முதலியன

போன்றான் - போல என வினையில் அகத்துறுப்பாய் நின்றது.

**5. தத்தம்**

பொருளை உணர்த்துவன - ஏ,ஓ முதலியன

**6. இசைநிறை**

ஏ, ஓ முதலியன.

**7. அசைநிலை**

மியா, இக, மோ முதலியன

**8. ஒலிக் குறிப்புச் சொல்**

விண்ணென, ஒல்லென, சட்டென்று முதலியன

**சொல்லின் அகத்து வருதல்**

வந்தான் - த் - இடைநிலை

**சொல்லின் புறத்து வருதல்**

அது கொல் - கொல் - இடைச்சொல்

**பெயருக்கு முன்னால் வருதல்**

அம்ம கொற்றா

**பெயருக்குப் பின்னால் வருதல்**

அவனா, அது மற்றும்மதானே

**வினைக்கு முன்னால் வருதல்**

ஏ! வா, ஏஏ! நில்

எனவே ஐ முதலிய வேற்றுமை உருபுகளும் ,வினை உருபுகளும், அன், ஆன் முதலிய சாரியைகளும், போல, புரைய முதலிய உவம உருபுகளும் தத்தமக்குரிய பொருளை உணர்த்தும். எ, ஓ முதலியனவும், செய்யுளில் இசைநிறைத்தற்கே வருபனவும், வருதலே பொருளாக நிற்பனவும், குறிப்பினால் வருதலே பொருளாக நிற்பனவும், குறிப்பினால் பொருள் உணர்த்தி வருபனவும் என்னும் இவ்வெட்டுநிலை சொற்களும் தனித்து நிற்கும் தன்மை இல்லாமல் பெயர்ச் சொல்லிடத்தும் வினைச் சொல்லிடத்தும் முன்னேயாயினும் பின்னேயாயினும் ஓரிடத்து ஒன்றாயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நிற்பது இடைச்சொல்லாகும்.

## இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள்

**தெரிநிலை தேற்றம் ஐயம்முற்று எண்சிறப்பு**
**எதிர்மறை எச்சம் வினாவிழைவு ஒழியிசை**
**பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள். (நன் - 421)**

1. தெரிநிலை 2. தெளிவு 3. ஐயம் 4. முற்று 5.எண் 6. சிறப்பு எதிர்மறை 8. எச்சம் 9. வினா 10. விருப்பு 11. ஒழிந்த சொல் 12. பிரிநிலை 13. கழிவு 14. ஆக்கம் என்னும் பதினான்குடன் இவை போன்ற பிறவும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் ஆகும்.

**எ.கா.**

1 **தெரிநிலை** - இன்னது எனத் தெரிவித்தல்

ஆண்பெண் அன்று அலி

2. **தேற்றம்**- உறுதிபடக் கூறுதல்

உண்டே மறுமை

3. **ஐயம்** - துணிவின்மை

ஆணோ? பெண்ணோ?

4. **முற்று** - முழுமைப்படுத்துதல்

இருவரும் வந்தார்

5. **எண்** - எண்ணிக்கைப் பொருண்மை

கண்ணும் காதும்

6. **சிறப்பு** - ஒன்றுக்குரிய பெருமை

குறவரும் அஞ்சும் குன்று

7. **எதிர்மறை** - மாறுபடுதல்

வந்தாலும் வருவான் - வாராமை குறித்தது

8. **எச்சம்** - பிறிதொன்றைத் தொடர்புறுத்தல்

அவனும் வந்தான்

9. **வினா** - வினவுதல் - ஐயத்தை வினவுதல்

குற்றியோ? மகனோ?

10. **விழைவு** - விருப்பம்

வருகதில் அம்ம

11. **ஒழியிசை** - வேறு பொருள் படுதல்

படிப்பதற்கோ வந்தாய் - விளையாட வந்தாய்

12. **பிரிநிலை** - பிரித்துக் கூறுதல்

அவனே வந்தான் -பிறர் இல்லை

13. **கழிவு** - நடந்ததற்கு வருந்துதல்

எமக்கீயும் மன்னே

14. **ஆக்கம்** - வளர்ச்சி

பண்டு காடுமன் - இன்று வயலாயிற்று

இவை போன்றதாய் வருபவை.

சுட்டுப்பொருள் தருவன (அ.இ.உ) - அவன், இவன், உவன்
வினாப்பொருள் தருவன (எ,யா,ஆ.ஏ,ஓ) - எவன், யாவன், அவனோ
எல்லைப்பொருள் தருவன (கால, இடச் சொற்கள்) - இனிக்கூறுக, முன் செல்க

பன்மைப்பொருள் தருவன - தொறும், தோறும்

வருந்தோறும் - தொழிற்பன்மை

ஊர்தோறும் - இடப்பன்மை

விகற்பப்பொருள் தருவன - ஆவது, ஆயினும்

ஒன்றாவது, இரண்டாவது

இரக்கப்பொருள் தருவன - ஐயோ,அந்தோ,ஆ

ஐயோ இறந்தான்

வியப்புப் பொருள் தருவன - அம்மா,ஆ.

அம்மா கொடிது

அச்சப் பொருள் தருவன - (ஐயோ, ஆ.ஆ)

ஐயோ புலி

இகழ்ச்சிப் பொருள் தருவன - சீ, சிச்சீ

சீ எழுந்திரு

உயர்வுப் பொருள் தருவன - ந

நக்கிரன், நப்பின்னை

பயனின்மைப் பொருள் தருவன - வாளா, சும்மா

சும்மா வந்தேன், வாளா இருந்தான்

## ஏகார இடைசொல் உணர்த்தும் பொருள்கள்

**பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்**
**இசைநிறை எனஆறு ஏகா ரம்மே. (நன் - 422)**

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தெளிவு, இசைநிறைவித்தல் என்னும் ஆறு பொருள்களில் வரும்.

**எ.கா**.

**1. பிரிநிலை**

ஐவரில் நீயே தலைவன் - ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனை மட்டும் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலைப் பொருளைத் தந்தது.

**2. வினா**

நீயே கொடுத்தாய்? - இது வினாப் பொருளைத் தருவதால் வினாப்பொருள் ஏகாரம்

**3. எண்**

நிலமே, நீரே, காற்றே - எண்ணப் பொருளில் வருவதால் எண்ணப் பொருள் ஏகாரம்

**4. ஈற்றசை**

வாழ்த்துதுமே - வேறு பொருளைச் சுட்டாது இறுதியில் நிற்றலால் ஈற்றசை ஏகாரமாகும்.

**5. தேற்றம்**

நன்றே சொன்னேன் - இது தெளிவான பொருளைத் தருவதால் தேற்றேகாரம் ஆகும்.

6. **இசைநிறை**

ஓஓ என்ன அழகு - இது இசை நிறைத்தல் பொருட்டு வந்த ஏகார இடைச்சொல் ஆகும்.

சில இடங்களில் ‘நானே கொண்டேன்’ என வினவுகையில் ‘நான் கொண்டிலேன்’ என ஏகாரம் எதிர்மறைப் பொருளிலும் வருவதுண்டு.

## ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

**ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை**
**கழிவுஅசை நிலைபிரிப்பு எனஎட்டு ஓவே. (நன் - 423)**

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என்னும் எட்டுப் பொருள்களில் வரும்.

**எ.கா.**

1. **ஒழியிசை**

வாழ்வதற்கோ வந்தான் – இது வாழ்வதற்கு அன்று சாவதற்கு எனச் சொற்களைத் தருவதால் ஒழியிசை ஏகாரமாகும்.

2. **வினா**

இதுவோ? அதுவோ? - இது ஐயப்பட்டு வினவும் பொருளைத் தருதலால் வினா ஏகாரம்.

3. **சிறப்பு**

உயர்வு - ஓ ஓபெரியன் - இது ஒருவனுடைய பெருமையின் மிகுதியைக் காட்டுதலால் உயர்வு சிறப்பாய் நின்றது.

இழிவு - ஓ ஓ கொடியன் - இது ஒருவனுடைய கொடுமையின் மிகுதியைக் காட்டுதலால் இழிவு சிறப்பாய் நின்றது.

4. **எதிர்மறை**

அவனோ கொண்டான் - இது அவன் கொண்டிலன் என மாறான பொருளைத் தருதலால் எதிர்மறை.

5. **தெரிநிலை**

அலியை நோக்கி ஆணோ அதுவும் அன்று, பெண்ணோ அதுவும் அன்று.

இது ஆண், பெண் தன்மையற்றது என்பதைத் தெரிவித்தலால் தெரிநிலை.

**6. கழிவு**

ஓ ஓ உணரார் - இது நன்மை அறியாமல் செயல்பட்டுக் கெட்டவர்களுக்காக வருந்தும் பொருளைத் தருதலால் கழிவு.

**7. அசைநிலை**

கேண்மினோ - இது கேளுங்கள் என வேறு பொருள் இன்றி நிற்றலால் அசைநிலை.

**8. பிரிநிலை**

இவனோ கொண்டான் - பிறரிடமிருந்து ஒருவனைப் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை.

## ‘என’, ‘என்று’ என்னும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள்

**வினைபெயர் குறிப்புஇசை எண்பண்பு ஆறினும்**
**எனஎனும் மொழிவரும் என்றும் அற்றே. (நன் - 424)**

என, என்று என்னும் இரு இடைச்சொற்களும் வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு என்னும் ஆறு பொருள்களில் வரும்.

**எ.கா.**

**என இடைச்சொல்**

1. **வினை**

   கொள்ளெனக் கொண்டான்

   தந்தை வந்திருக்கிறார் என வந்தான்.

2. **பெயர்**

   ஊரெனப்படுவது உறையூர்

3. **குறிப்பு**

   விண்ணென ஒலித்தது

   சட்டென வந்தான்

   சுள்ளென வெயில் எரிக்கிறது.

4. **இசை**

   பளார் என அடித்தாள்

   காகம் கா கா எனக் கரையும்

5. **எண்**

   நிலமென, நீரென, காற்றென

6. **பண்பு**

வெள்ளென வெளுத்தது

கன்னங்கரேலெனக் கறுத்தது.

**என்று இடைச்சொல்**

1. **வினை**

இன்று போய் நாளை வா என்று கூறினான்.

2. **பெயர்**

அன்பு என்று ஒரு பண்பு

3. **குறிப்பு**

விண்ணென்று ஒலித்தது

சுரீரென்று முள் குத்தியது

4. **இசை**

பளாரென்று அடித்தான்

கூக் கூ என்று குயில் பாடாதோ

5. **எண்**

நிலமென்று, நீரென்று, காற்றென்று

6. **பண்பு**

வயலெங்கும் பச்சைப் பசேலென்று இருந்தது.

## உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

**எதிர்மறை சிறப்புஐயம் எச்சம்முற்று அளவை**
**தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே. (நன் - 425)**

உம் என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களில் வரும்.

**எ.கா.**

1. **எதிர்மறை**

வருதலும் உரியன் - வாராமைக்கும் உரியன் என எதிர்மறைப் பொருளைத் தந்தது

2 **சிறப்பு**

உயர்வு - குறவரும் மருள்வர் (வலிமையைச் சிறப்பித்தது)

இழிவு - நாயும் தின்னாது (இழிவைச் சிறப்பித்தது)

**3. ஐயம்**

பத்தாயினும் எட்டாயினும் கொடு - துணிவின்மையைக் காட்டியது

**4. எச்சம்**

இறந்தது தழுவல் - சாத்தனும் வந்தான் (முன் கொற்றன் வந்தான் என நடந்ததைக் குறித்தது)

எதிரது தழுவல் - சாத்தனும் வந்தான் (இனிக் கொற்றனும் வருவான் என நடப்பதைக் குறித்தது)

**5. முற்று**

மூவேந்தரும் வந்தார் - முடிவு பெற்றமையைக் காட்டியது

**6. அளவை**

ஒன்றும் இரண்டும் - எண்ணுவது போல் நின்றது.

**7. தெரிநிலை**

ஆணும் பெண்ணும் அன்று - அலியெனத் தெளிய நின்றது.

**8. ஆக்கம்**

பாலுமாயிற்று - அதுவே மருந்தும் ஆனது என ஆக்கத்தைக் குறித்தது.

## முற்றும்மை எச்சப்பொருள் தருதல்

**முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும். (நன் - 426)**

முற்று பொருளுக்குரிய முற்றும்மை சில இடங்களில் எச்சப் பொருளை உணர்த்துகிற எச்சவும்மையாக வருவதும் உண்டு.

**எ.கா.**

அனைவரும் வந்திலர் - சிலர் வந்தார்
பத்தும் கொடார் - சில கொடுப்பர்
முழுவதும் அறிந்திலன் - சில அறிந்துளன் எனப் பொருள் தரும்.

## எச்சவும்மை செவ்வெண்ணில் வருதல்

பெயர், வினைகளின் இடையே எண்ணிடைச் சொற்கள் மறைந்து நிற்க, எண்ணி நிற்பது செவ்வெண் ஆகும்.

**செவ்வெண் ஈற்றதாம் எச்ச உம்மை. (நன் - 427)**

எச்சப் பொருளில் வருகின்ற உம் என்னும் இடைச்சொல் செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும்.

**எ.கா.**

கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர்.

இவற்றுள் சில பெறுவாரும் உளர் எனப் பொருள் தருவது எச்சவும்மை. கல்வியும் செல்வமும் ஒழுக்கமும் குடிப்பிறப்பும் என்று உம்மை இல்லாமல் கல்வி, செல்வம், ஒழுக்கம், குடிப்பிறப்பு என வருவது செவ்வெண். இறுதி சொல்லில் குடிபிறப்பும் என உம்மை வந்து எச்ச பொருளை உணர்த்துகிறது.

## சில எண்ணிடைச் சொற்களுக்குரிய இலக்கணம்

**பெயர்ச்செவ் வெண்ஏ என்றா எனாஎண்**
**நான்கும் தொகைபெறும் உம்மைஎன்று எனஒடு**
**இந்நான்கு எண்ணும்அஃது இன்றியும் இயலும். (நன் - 428)**

பெயர் செவ்வெண், ஏகார எண், என்றா எண்,எனா எண் ஆகிய நான்கு எண்ணிடைச் சொற்களும் இறுதியில் தொகை எண்ணைப் பெற்று வரும். உம், என்று, என, ஒடு என்னும் இந்நான்கு எண்ணிடைச்சொற்களும் தொகை பெறாமலும் வரும். பெற்றும் வரும்.

**எ.கா.**

1. **பெயர்ச்செவ்வெண்**

சாத்தன் கொற்றன் தேவன் பூதன் நால்வரும் வந்தனர்.

2. **ஏகார எண்**

முருகனே சிவனே இராமனே மூவரும் வந்தனர்.

3. **என்றா எண்**

மாதவி என்ற மேகலை என்ற கண்ணகி என்ற மூவரும் வந்தனர்.

4. **எனா எண்**

சாத்தன் எனா இராமன் எனா முருகன் எனா குமரன் எனா நால்வரும் வந்தனர்.

5. **உம் எண்**

நிலமும் நீரும் நல்லவை,

நிலமும் நீரும் இரண்டும் நல்லவை

**6. என்று எண்**

சாத்தன் என்று தேவன் என்று சொல்லப்பட்டவர் வந்தனர்.

சாத்தன் என்று தேவன் என்று சொல்லப்பட்டவர் இருவரும் வந்தனர்.

**7. என எண்**

சாத்தன் என தேவன் என முருகன் எனச் சொல்லப்பட்டவர் வந்தனர்.

சாத்தன் என தேவன் என முருகன் எனச் சொல்லப்பட்டவர் மூவரும் வந்தனர்.

## என்று, என, ஒடு என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

**என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி**
**நின்றும் பிரிந்துஎண் பொருள்தொறும் நேரும். (நன் - 429)**

என்று, என, ஒடு என்னும் எண்ணுப் பொருளை உணர்த்தும் மூன்று இடைச் சொற்களும் எண்ணுகிற பொருள் தோறும் நிற்றலே அன்றி ஓரிடத்தில் நின்றாலும், பிரிந்து எண்ணுகிற பொருள் தோறும் சென்று பொருந்தும்.

**எ.கா.**

1. வினை பகை என்று இரண்டு

இதில் என்று என்பது ஈற்றில் நின்றது. அது வினை என்று, பகை என்று எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

2. பகை பாவம் அச்சம் பழியென நான்கும்

இத்தொடரில் பழி என்பது பழியென நின்றது. அது பகையென, பாவமென, அச்சமென, பழியென எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

3. பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்

இத்தொடரில் ஒடு என்னும் இடைச்சொல் பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு, இடனொடு எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

## எண்ணிடைச் சொற்கள் வினையுடன் வருதல்

**வினையொடு வரினும் எண்இனைய ஏற்பன. (நன் - 430)**

எண்ணுப் பொருளை உணர்த்தும் இடைச்சொற்கள் யாவும் வினையோடு வந்தாலும், பெயரோடு வருதலை போன்று தொகை பெற்றும் பெறாமலும் வரும்.

**எ.கா.**

1. மயிலாடக் குயிலாட மாமுகில் எழுந்தது - உம் மறைந்து நின்றது (செவ்வெண்)

2. கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார் - உம்
3. உண்ணவென்று உடுக்கவென்று வந்தான் - என்று
4. உண்ணவென உடுக்கவென வந்தான் - என
5. உண்ண உடுக்க வென்று வந்தான் - ஓரிடத்தில் நின்று பிரிந்து கூடும் எண்

## தில் என்னும் இடைச்சொல்

**விழைவே காலம் ஒழியிசை தில்லே. (நன் - 431)**

தில் என்னும் இடைச்சொல் மூன்று பொருள்களில் வரும். அவை 1. விருப்பம், 2. காலம், 3. ஒழியிசை என்பனவாகும்.

**எ.கா.**

**1. விழைவு**

அரிவையைப் பெறுகதில் அம்ம யானே - அரிவையைப் பெற வேண்டும் என்னும் விருப்பத்தைக் காட்டியது.

**2. காலம்**

பெற்றாங்கு அறிகதில் அம்ம இவ்வூரே - பெற்ற காலத்தில் அறிக எனக் காலத்தை உணர்த்தியது

**3. ஒழியிசை**

வருகதில் அம்ம எம்சேரி சேர - வந்தால் இன்னது செய்வேன் என ஒழிந்ததை உணர்த்தியது.

## மன் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

**மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபேறு ஆகும். (நன் - 432)**

மன் என்னும் இடைச்சொல் 1. அசைநிலை 2. ஒழியிசை 3. ஆக்கம் 4. கழிவு 5. மிகுதி 6. நிலைபெறுதல் என்னும் ஆறு பொருள்களில் வரும்.

**எ.கா.**

**1. அசைநிலை**

அதுமன் கொண்கன் தேரே - வேறு பொருளின்றிச் சார்ந்து நின்றது

**2. ஒழியிசை**

கூரியதோர் வாள்மன் - வாளின் திட்பமின்மையை உணர்த்தியது

**3. ஆக்கம்**

பண்டு காடு மன் - இன்று நாடு ஆயிற்று என்னும் பொருளை உணர்த்துகிறது.

**4. கழிவு**

சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே - இப்போது அவன் இறந்துவிட்டதால் கொடைத்தன்மை கழிந்துவிட்டது என்பது இதற்குப் பொருள்

**5. மிகுதி**

எந்தை எமக்கு அருளும்மன் - மிகுதியும் அருளுவான் என்னும் பொருளைத் தந்தது

**6. நிலைபேறு**

மன்னா உலகத்து மன்னியது புரிமோ - நிலைபெறாத உலகத்தில் நிலை பெற்றதைச் செய் என்னும் பொருளைத் தந்தது.

## மற்று என்னும் இடைச்சொல்

**வினைமாற்று அசைநிலை பிறிதுஎனும் மற்றே. (நன் - 433)**

மற்று என்னும் இடைச்சொல் 1. வினைமாற்று, 2. அசைநிலை, 3. பிறிது என்னும் மூன்று பொருள்களில் வரும்.

**எ.கா.**

**1. வினைமாற்று**

மற்றறிவாம் நல்வினை - நல்வினையை விரைந்து அறிவாம் என்னும் வினையை மாற்றி இனிமேல் விரைவுபடாது அறிவாம் என்னும் வினையைத் தந்தது.

**2. அசைநிலை**

அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்று - வேறு பொருள் உணர்த்தாமல் சார்ந்து நின்றது

**3. பிறிது**

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று - ஊழல்லது ஒன்று எனப் பொருள் தந்தது.

## மற்றை என்னும் இடைச்சொல்

**மற்றையது என்பது சுட்டியதற்கு இனம். (நன் - 434)**

சுட்டியதற்கு இனமான பிறிதொரு பொருளை உணர்த்த மற்றையது என்னும் இடைச் சொல் வரும்.

எ.கா.

இரண்டு ஆடை உள்ளவிடத்து ஒன்றைக் கண்டு அதனை விரும்பாதவன், ‘‘மற்றையது கொண்டு வா’’ என்றால் அதற்கு இனமாகிய மற்றொரு ஆடையை அது குறிக்கும்.

இளம்பூரணர் உரை நூலை ஒருவன் எடுத்து வரும்போது, “மற்றயதைக் கொண்டுவா“ என்று ஏவினால் அவன் சேனாவரையர் உரை நூலைக் கொண்டு வருவான்.

மற்று, மற்றை என்பன தனித்தனிச் சொற்கள்.எனவே இதனை மற்று என்பதன் விகாரமாகக் கொள்ளக் கூடாது.

## கொல் என்னும் இடைச்சொல்

**கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. ( நன் - 435)**

கொல் என்னும் இடைச்சொல் 1. ஐயம் 2.அசைநிலை என்னும் இரண்டு பொருள்களில் வரும்.

**எ.கா.**

**1. ஐயம்**

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ – அணங்கோ மயிலோ எனத் துணிவின்மையைக் காட்டியது

**2. அசைநிலை**

கற்றதனால் ஆய பயனென் கொல் - வேறு பொருள் உணர்த்தாமல் சார்ந்து நின்றது.

## ஓடு, தெய்ய என்னும் இடைச்சொல்

**ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே. (நன் - 436)**

ஒடு, தெய்ய என்னும் இரண்டும் இசைநிறைப் பொருளில் வரும்.

**எ.கா.**

**1. ஒடு**

விதைக்குறு வட்டி போதொடு பொதுள – வேறு பொருளின்றிச் செய்யுளில் இசையை நிறைத்து நின்றது

**2. தெய்ய**

சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே – இசை நிறையாக வந்தது.

## அந்தில், ஆங்க என்னும் இடைச்சொற்கள்

**அந்தில்ஆங் கஅசைநிலை இடப்பொருள் அவ்வே. (நன் - 437)**

அந்தில், ஆங்க என்னும் இடைச்சொற்களும் அசைநிலைப்பொருள் , இடப்பொருள் என்னும் இரண்டு பொருள்களில் வரும்.

**எ.கா.**

**1. அசைநிலை**

அந்தில் கழலினன் கச்சினன் ஆங்கத் திறனல்ல யாம் கழற - வேறுபொருள் இன்றி அசைநிலையாய் வந்தன

**2. இடம்**

வருமே சேயிழை அந்திற் கொழுநற்காணிய
ஆங்காங்கு ஆயினும் ஆக.
இவை அவ்விடத்து என்னும் இடப்பொருளைத் தந்தன.

## அம்ம என்னும் இடைச்சொல்

**அம்ம உரையசை கேண்மின் என்றுஆகும். (நன் - 438)**

அம்ம என்னும் இடைச்சொல் உரையசைப் பொருளிலும், நான் சொல்வதைக் கேள் என்னும் ஏவற்பொருளிலும் வரும்.

**எ.கா.**

**1. உரையசை**

அது மற்றம்ம - வேறு பொருளின்றி உரையாடலில் உரையசையாய் நின்றது

**2. கேண்மின் என்னும் ஏவல்**

அம்ம வாழி தோழி – ஒன்றைச் சொல்வேன் கேள் என ஏவல் பொருளில் வந்தது.

## மா என்னும் இடைச்சொல்

**மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல். (நன் - 439)**

மா என்னும் இடைச்சொல் வியங்கோள் வினைமுற்றில் அசைச்சொல்லாக வரும்.

**எ.கா.**

புற்கை உண்கமா கொற்கையோனே - உண்க என்னும் வியங்கோளை அடுத்து அசையாய் வந்தது.

**அசைச்சொற்கள்**

தமக்கென ஒரு பொருளுமின்றிப் பெயர் வினைகளோடு சார்த்திச் சொல்லப்படுவன அசைச்சொற்களாகும். இவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடங்களிலும் வரும். அவற்றுள் முன்னிலைக்கு மட்டுமே வருவனவற்றை முன்னிலை அசைச்சொற்கள் எனப் பகுப்பர். பிற சொற்கள் மூவிட அசைச்சொல் என்றும் பொதுவசைச்சொல் என்றும் கூறப்பெறும்.

## முன்னிலை அசைச்சொற்கள்

**மியாஇக மோமதி அத்தை இத்தை**
**வாழிய மாளஈ யாழமுன் னிலை அசை. (நன் - 440)**

முன்னிலை அசைச்சொற்கள் பத்து வகையாகும். அவை 1. மியா, 2. இக , 3. மோ, 4. மதி, 5. அத்தை 6. இத்தை, 7. வாழிய, 8. மாள, 9. ஈ, 10. யாழ என்பனவாகும்.

**எ.கா.**

1. மியா - கேண்மியா
2. இக - காணிக
3. மோ - மொழிமோ
4. மதி - செல்மதி
5. அத்தை - செலியர் அத்தை
6. இத்தை - பாடித்தை
7. வுாழிய - காணிய வாழிய
8. முாள - தவிர்ந்தீக மாள
9. ஈ - சென்றீபெரும
10. யாழ - செலவயர்ந்தி யாழ

## பொது அசைச்சொற்கள்

**யாகா பிறபிறக்கு அரோபோ மாதுஇகும்**
**சின்குரை ஓரும் போலும் இருந்துஇட்டு**
**அன்றுஆம் தாம்தான் கின்றுநின்று அசைமொழி. (நன் - 441)**

1. யா, 2. கா, 3. பிற, 4. பிறக்கு, 5. அரோ, 6. போ, 7. மாது, 8. இரும், 9. சின், 10. குரை, 11. ஓரும், 12. போலும், 13. இருந்து, 14. இட்டு, 15. அன்று, 16. ஆம், 17. தாம், 18. தான், 19. கின்று, 20. நின்று ஆகிய இருபது இடைச்சொற்களும் மூவிடங்களிலும் வருகின்ற அசைச் சொற்கள் ஆகும்.

**எ.கா.**

1. யா - பன்னிருவர் மாணாக்கர்
2. கா - இவளிவள் காண்டிகா

3. பிற - ஆயனை அல்ல பிற
4. பிறக்கு - பிறக்கதனுட் செல்லான்
5. அரோ - ஆலும் அரோ
6. போ - வாழாதென் போ
7. மாது - விளிந்தன்று மாதோ
8. இகும் - காண்டிகும் அல்லமோ
9. சின் - என்றிசின்
10. குரை - பல்குரைத் துன்பம்
11. ஓரும் - அஞ்சுவதோரும் அறனே
12. போலும் - மகிழ்ந்தனை போலும்
13. இருந்து - எழுந்திருந்தேன்
14. இட்டு - நெஞ்சம் பிளந்திட்டு
15. அன்று - சேவடி சேர்தும் அன்றே
16. ஆம் - பணியும் ஆம் என்றும் பெருமை
17. தாம் - அவையே தாம்
18. தான் - அதுவே தானும்
19. கின்று - வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்
20. நின்று - தோன்றாத் துணையாய் நின்றான்.

## உரியியல்

உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறும் இயல் உரியியல் ஆகும். நால்வகைச் சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வருவது உரிச்சொல். பெயர், வினைச்சொற்களின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதால் உரிச்சொல் என்று கூறுவர். இசை,குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்துவதற்குத் தாமே உரியன ஆதலின் உரிச்சொல் என்னும் பெயர் பெற்றது என்றும் சுட்டுவர்.

### உரிச்சொல்லின் பொதுவிலக்கணம்

**பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல். (நன் - 442)**

உரிச் சொல்லின் பொது இலக்கணங்களாக,

1. செய்யுளுக்கு உரிமை உடையது
2. பல்வகைப்பட்ட பண்புகளை வெளிப்படுத்துவது
3. பெயர்ச்சொல், வினைச்சொற்களை விட்டு நீங்காதவை ஆகிய பண்புகளைக் குறிப்பிடலாம்.

இசை (ஓசை) (மனத்தாற் குறித்துணரப்படுவது) பண்பு (புலன்களால் உணரப்படுவது) ஆகியவற்றை உணர்த்தும் சொற்கள் தனித்து நிற்கும் ஆற்றல் இன்றி பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றின் பண்புகளைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைகின்றன.

**எ.கா.**

உறு புகழ் - ‘உறு’ என்பது மிகுதி என்னும் பொருளில் புகழ் என்னும் பெயரின் பண்பை உணர்த்துகிறது.

சாலப் பேசினான் - ‘சால’ என்பது மிகுதி என்னும் பொருளில் வினையின் பண்பை உணர்த்துகிறது.

உறு, சால என்னும் உரிச்சொற்கள் தனித்து நிற்கும் ஆற்றலின்றி பெயர் வினைகளைசார்ந்து நின்று அவற்றின் பண்புகளை உணர்த்துகின்றன. இவ் உரிச் சொற்கள்,

1. ஒருகுணம் தழுவிய பல சொல்லாகவும்
2. பல குணம் தழுவிய ஒரு சொல்லாகவும்

அமையும் ஆற்றல் உடையவை.

சால, தவ, நனி, உறு கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு பண்பைத் தெளிவு படுத்தும் சொற்களாகும். எனவே இவை ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் ஆகும்.

கடி என்னும் ஓர் உரிச்சொல் காவல், கூர்மை, மணம், விரைவு, மிகுதி, ஆர்த்தல், கரிப்பு என்னும் பல பொருளைத் தரும். எனவே இது பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் ஆகும்.

எனவே இசையும், குறிப்பும், பண்பும் ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அவ்வாறு உணர்த்தும் பொழுது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணங்களை உணர்த்துவனவுமாக செய்யுளுக்கு உரியனவாய் பொருளுக்கு உரிமை பூண்டு நிற்பன உரிச்சொற்களாகும்.

## பண்பின் இலக்கணம்


**உயிர்உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே. (நன் - 443)**

உலகத்தில் உள்ள பொருள்கள் யாவும் உயிராகிய பொருள், உயிர் அல்லாத பொருள் என இருவகைப்படும். இவ்விருவகை பொருள்களின் குணமே பண்பு எனப்படும்.

## உயிர்ப்பொருள்கள்

**மெய்ந்நா மூக்கு நாட்டம் செவிகளின்**
**ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமேல் உணர்தலின்**
**ஓரறிவு ஆதியா உயிர்ஐந்து ஆகும். (நன் - 444)**

உடம்பின் தோல், நாக்கு, மூக்கு, கண், செவி என்னும் ஐந்து பொறிகளால் முறையே தொடுவுணர்வு, சுவையுணர்வு, முகர்தலுணர்வு, காட்சியுணர்வு, கேள்வியுணர்வு என்னும் ஐந்து வகை அறிவுகளை உயிராகிய பொருள் அறியும். இந்த ஐந்து அறிவுகளைப் பெற்றிருத்தலின் அடிப்படையில் உயிர்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐந்து வகைப்படும்.




உயிர்ப்பொருள்கள் அனைத்தும் புலன் உணர்வை அடிப்படையாகக் கொண்டே ஓரறிவு முதலாக ஐந்தறிவு ஈறாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

## ஓரறிவு உயிர்கள்

**புல்மரம் முதலஉற்று அறியும் ஓரறிவுயிர். (நன் - 445)**

தோலால் தொட்டு அறியும் அறிவு உடையன ஓரறிவு உயிர்கள் ஆகும். புல், மரம் முதலியன வகைப்படும்.

முதல எனக் கூறியதால் புதல், கொடி, புழு போன்றவற்றையும் இதில் கொள்ளல் வேண்டும்.

## ஈரறிவு உயிர்கள்

**முரள்நந்து ஆதிநா அறிவொடுஈர் அறிவுயிர். (நன் - 446)**

தொடு அறிவு, நாக்கினால் அறியும் சுவை அறிவு எனும் இரண்டையும் உடையன ஈரறிவு உயிர்கள் ஆகும். சிப்பி, சங்கு முதலியன இவ்வகைப்படும்.

ஆதி எனக் கூறியதால் கிளிஞ்சல், நத்தை போன்றவற்றையும் இவற்றுடன் கொள்ளல் வேண்டும்.

## மூவறிவு உயிர்கள்

**சிதல்எறும்பு ஆதிமூக்கு அறிவின்மூ வறிவுயிர். (நன் - 447)**

தொடு அறிவு, சுவை அறிவு, மூக்கினால் அறியும் முகர்வு அறிவு என்னும் மூன்றையும் உடையன மூவறிவு உயிர்கள் ஆகும். கரையான், எறும்பு முதலியன இவ்வகைப்படும்.

ஆதி எனக் கூறியதால் ஈயல், மூதா, அட்டை போன்றவற்றையும் இவற்றுடன் கொள்ளல் வேண்டும்.

## நான்கறிவு உயிர்கள்

**தும்பிவண்டு ஆதிகண் அறிவின்நால் அறிவுயிர். (நன் - 448)**

தொடு அறிவு, சுவை அறிவு, முகர்வு அறிவு, கண்ணால் அறியும் காட்சியறிவு என்னும் நான்கையும் உடையன நாலறிவு உயிர்கள் ஆகும். தும்பி, வண்டு முதலியன இவ்வகைப்படும்.

## ஐந்தறிவு உயிர்கள்

**வானவர் மக்கள் நரகம் விலங்குபுள்**
**ஆதிசெவி அறிவோடு ஐயறிவு உயிரே. (நன் - 449)**

தொடு அறிவு, சுவை அறிவு, முகர்வு அறிவு, காட்சி அறிவு, செவியால் அறியும் கேள்வியறிவு என்னும் ஐந்தையும் உடையன ஐயறிவு உயிர்கள் ஆகும். தேவர், மக்கள், நரகர், விலங்கு, பறவை முதலியன இவ்வகைப்படும்.

## உயிர் உடையன அல்லாத பொருள்கள்

**உயர்வுஇயல் ஆம்உயிர் ஒன்றும் ஒழித்த**
**உடல்முதல் அனைத்தும் உயிர்அல் பொருளே. (நன் - 450)**

அறிவின் வடிவமாகத் திகழும் உயிர் ஒன்று இல்லாத உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிர் அல்லாத பொருள்களாம்.

## மேலதற்குப் புறனடை

**ஒற்றுமை நயத்தின் ஒன்றுஎனத் தோன்றினும்**
**வேற்றுமை நயத்தின் வேறே உடல்உயிர். (நன் - 451)**

உடலும் அதனுள் இருக்கும் உயிரும் ஒன்று போல் தோன்றலாம். ஆனால் உயிர் நிலையானது, அறியக்கூடியது. உடலோ நிலையில்லாதது, அழியக் கூடியது, அறியும் தன்மை இல்லாதது. இது ஒன்று போலத் தோன்றினாலும் அறிவுள்ளதாகவும் அறிவில்லாததாகவும் நிற்கும் வேற்றுமையினால் உடலும் உயிரும் வெவ்வேறாக விளங்குகிறது.

## உயிர்ப்பொருள்களின் பண்புகள்

உயிர் என்பது அறிவு வடிவமானது.எனவே உயிரை உடைய பொருள்கள் அறிவுடையனவாய்த் திகழ்கின்றன. அப்பொருள்களுக்குரிய பண்புகளைக் குணப்பண்புகள், தொழிற் பண்புகள் எனப் பகுக்கலாம்.

**குணப் பண்புகள்**

**அறிவுஅருள் ஆசை அச்சம் மானம்**
**நிறைபொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்**
**நினைவு வெறுப்புஉவப்பு இரக்கம்நாண் வெகுளி**
**துணிவுஅழுக் காறுஅன்பு எளிமை எய்த்தல்**
**துன்பம் இன்பம் இளமை மூப்புஇகல்**
**வென்றி பொச்சாப்பு ஊக்கம் அறம்மதம்**
**மறவி இனைய உடல்கொள் உயிர்க்குணம். (நன் - 452)**

உடம்போடு கூடிய உயிர்களின் குணப்பண்புகள் முப்பத்திரண்டு ஆகும். அவை,

1. அறிவும்
2. அருள் (கருணை)
3. ஆசை (விருப்பம்)
4. அச்சம்
5. மானம்
6. நிறை (மன அடக்கம்)
7. பொறை (பிறர் குற்றம் பொறுத்தல்)
8. ஓர்ப்பு (ஆராய்ந்து தெளிதல்)
9. கடைப்பிடி (உறுதி)
10. மையல் (காம மயக்கம்)
11. நினைவு
12. வெறுப்பு
13. உவப்பு (மகிழ்ச்சி)
14. இரக்கம் (மனம் இரங்குதல்)
15. நாணம்
16. வெகுளி (சினம்)
17. துணிவு
18. அழுக்காறு (பொறாமை)
19. அன்பு
20. எளிமை
21. எய்த்தல் (தளர்ச்சி)
22. துன்பம்
23. இன்பம்
24. இளமை
25. மூப்பு
26. இகல் (மாறுபாடு, பகை)
27. வெற்றி
28. பொச்சாப்பு (மறத்தல்)
29. ஊக்கம் (மனவெழுச்சி)
30. அறம்
31. மதம் (களிப்பு)
32. மறவி (மறந்து செய்யும் குற்றம்)

என்பனவாகும்.

## தொழிற் பண்பு

**துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்**
**உய்த்தல் ஆதி உடல்உயிர்த் தொழிற்குணம். (நன் - 453)**

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளால் ஐம்புலன்களையும் நுகர்தல், உறங்குதல், இறைவனையும் மாந்தரையும் வழிபடுதல், ஆடையணி போன்றவற்றை அணிந்து அலங்கரித்தல், பல்வேறு தொழில்களைச் செய்து வாழ்தல் முதலியன உடலில் வாழ்கிற உயிரின் தொழிற் பண்புகளாகும்.

1. துய்த்தல் - அனுபவித்தல்
2. துஞ்சல் - உறங்குதல்
3. தொழுதல் - வணங்குதல்
4. அணிதல் - அணிந்து கொள்ளுதல்
5. உய்த்தல் - செலுத்துதல்

## உயிரல்லாப் பொருள்களின் குணப்பண்பு

**பல்வகை வடிவு இருநாற்றம் ஐவண்ணம்**
**அறுசுவை ஊறுஎட்டு உயிர்அல் பொருட்குணம். (நன் - 454)**

உயிருள்ள பொருள்களின் குணப்பண்புகள் போன்று உயிரற்ற பொருள்களுக்கும் குணப்பண்புகள் உள்ளன. வண்ணங்கள், இருவகை நாற்றம், ஆறு சுவைகள், எட்டுவகைத் தொடு உணர்வுகள் ஆகியவை உயிர் அல்லாத பொருள்களினுடைய குணங்களாகும்.

**எ.கா.**

**1. பல்வகை வடிவு**

வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் போன்றவை.

**2. இரு நாற்றம்**

1. நறு நாற்றம் 2. தீ நாற்றம்

**3. ஐந்து வண்ணம்**

1. வெண்மை 2. செம்மை 3. கருமை 4. பொன்மை 5. பசுமை

**4. அறுவகைச் சுவைகள்**

1. கசப்பு 2. புளிப்பு 3. துவர்ப்பு 4. உவர்ப்பு 5. கார்ப்பு 6. இனிப்பு

**5. எண்வகை ஊறுகள் (தொடுவுணர்ச்சிகள்)**

1. வெம்மை 2. தண்மை 3. மென்மை 4. வன்மை 5. நொய்மை (கனம் இன்மை) 6. சீர்மை (கனம் உள்ளது) 7. இழுமெனல் (வழுவழுப்பு) 8. சருச்சரை (சுரசுரப்பு).

## உயிர்ப்பொருள், உயிரல் பொருள்களின் தொழிற் பண்புகள்

**தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்**
**நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்**
**ஈதல் இன்னன இருபொருள் தொழில்குணம். (நன் - 455)**

பிறத்தல், இறத்தல், வளர்தல், குறைதல், நீங்குதல், அடைதல், அசைதல், ஒழித்தல், கொடுத்தல் ஆகியனவும் இவை போன்ற பிறவும் உயிர்ப் பொருள்களுக்கும் உயிரில்லாத பொருட்களுக்கும் பொதுவான தொழிற்பண்புகளாகும்.

## ஒருகுணம் தழுவிய பல உரிச்சொற்கள்

**சால உறுதவ நனிகூர் கழிமிகல். (நன் - 456)**

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறு சொற்களும் மிகுதி என்னும் ஒரு குணப்பண்பை உணர்த்துகின்ற உரிச்சொற்களாகும்.

**எ.கா.**

1. சால - சாலப்பலர்
2. உறு - உறுபுகழ்
3. தவ - தவப்பல
4. நனி - நனி மகிழ்ந்தான்
5. கூர் - களி கூர் மனம்
6. கழி - கழிபெருங்காதல்.

## பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்

**கடிஎன் கிளவி காப்பே கூர்மை**
**விரையே விளக்கம் அச்சம் சிறப்பே**
**விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்**
**வரைவே மன்றல் கரிப்பின் ஆகும். (நன் - 457)**

கடி என்னும் உரிச்சொல் 1. காவல், 2. கூர்மை, 3. விரை, 4. விளக்கம், 5. அச்சம், 6. சிறப்பு, 7. விரைவு, 8 மிகுதி, 9. புதுமை ,10. ஆர்த்தல், 11.வரைவு, 12. மன்றல், 13. கரிப்பு என்னும் பதின்மூன்று குணங்களில் வரும்.

**எ.கா.**

1. காப்பு (காவல்) - கடிநகர்
2. கூர்மை - கடிவேல்
3. விரை (மணம்) - கடி மாலை
4. விளக்கம் (ஒளி) - கடிமார்பன்
5. அச்சம் - கடியரமகளிர்
6. சிறப்பு - கடிமலர்
7. விரைவு - கடிவிடுதும்
8. மிகுதி - கடிக்காற்று
9. புதுமை - கடிமனம்
10. ஆர்த்தல் (ஒழித்தல்) - கடி முரசு
11. வரைவு (நீக்கல்) - கடிமது
12. மன்றல் ( திருமணம்) - கடிவினை
13. கரிப்பு (காரம்) - கடிமிளகு

## சால என்னும் ஒருபொருள் உணர்த்தும் பல உரிச்சொற்கள்

**மாற்றம் நுவற்சிசெப்பு உரைகரை நொடிஇசை**
**கூற்றுப் புகறல்மொழி கிளவி விளம்புஅறை**
**பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே. (நன் - 458)**

மாற்றம், நுவல், செப்பு, உரை, கரை, நொடி ,இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி இயம்பல் என்னும் இப்பதினாறும் சொல் என்கின்ற ஒரு குணத்தை உணர்த்துகின்ற உரிச்சொற்களாகும்.

**எ.கா.**

1. மாற்றம் - தோழி வாய் மாற்றம் கேள்.
2. நுவற்சி - பொழுதறிந்து நுவல்க
3. செப்பு - நாளை வருவேன் என்று செப்பினான்
4. உரை - கண்டதை உரை
5. கரை - அறங்கரை நாவின்
6. நொடி - ஆயிழையாள் தான் நொடியும்
7. இசை - வாயில் இசையேன்
8. கூற்று - நிகழ்ந்ததைக் கூறுக.
9. புகறல் - நீ புகன்றது யாது?
10. மொழி - காமம் செப்பாது கண்டது மொழிமோ
11. கிளவி - கிழவன் முன் கிளத்தல் கிழத்திக்கு இல்லை
12. விளம்பு - விளம்பினர் புலவர்
13. அறை - அறைகுவன் சொல்லே
14. பாட்டு - அறம் பாடினான்
15. பகர்ச்சி - பாவை பகர்ந்தாள்
16. இயம்பு - இயம்பினர் புலவர்

## ஓசை என்னும் ஒருகுணம் உணர்த்தும் பல உரிச்சொற்கள்

**முழக்குஇரட்டு ஒலிகலி இசைதுவை பிளிறுஇரை**
**இரக்குஅழுங்கு இயம்பல் இமிழ்குளிறு அதிர்குரை**
**சுனைசிலை சும்மை கௌவை கம்பலை**
**அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை. (நன் - 459)**

ஒலித்தல் என்னும் தொழிற்பண்பை முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரக்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கௌவை ,கம்பலை, அரவம், ஆர்ப்பு என்னும் இருபத்திரண்டு உரிச்சொற்கள் உணர்த்தும்.

**எ.கா.**

1. முழக்கு - முழங்கு கடல்
2. இரட்டு - குடிஞை இரட்டும், மணி இரட்டும்
3. ஒலி - ஒல்லென்று ஒலிக்கும் புனலூரர்
4. கலி - கலிகெழு மூதூர்
5. இசை - பறையிசை அருவி
6. துவை - அருவி துவைத்தன
7. பிளிறு - யானை பிளிறும்
8. இரை - இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள்
9. இரங்கு - இரங்கு முரசு
10. அழுங்கு - மாரி அழுங்கல் மூதூர்
11. இயம்பல் - காலை முரசம் மதிலியம்ப
12. இமிழ் - இமிழ்கடல்
13. குளிறு - குளிறு முரசம்
14. அதிர் - முரசு அதிர்ந்தது.
15. குரை - குரைகழல்
16. கனை - குதிரை கனைக்கும்
17. சிலை - மான் சிலைக்கும்
18. சும்மை - தள்ளாத சும்மை மிகு நாடு
19. கவ்வை - கவ்வை நீர்வேலி
20. கம்பலை - கம்பலை மாக்கள்
21. அரவம் - பறவை அரவம் கேட்டது.
22. ஆர்ப்பு - அருவி ஆர்க்கும்

## இவ்வியலுக்குப் புறனடை

**இன்னது இன்னுழி இன்னனம் இயலும்**
**என்றுஇசை நூலுள் குணகுணிப் பெயர்கள்**
**சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலாம்**
**நல்லோர் உரிச்சொலில் நயந்தனர் கொளலே. (நன் - 460)**

இன்ன சொல் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பயன்படுத்தப்படுகிற சூழலுக்கு ஏற்ப இத்தகைய பொருளில் வரும் என்று இலக்கண நூலுள் விவரிப்பது பொருந்தாது. ஏனெனில் உலகில் பண்புப் பெயர்களும், பண்புகளைக் கொண்ட பண்பிப் பெயர்களும், அளவிட இயலாதவாறு மிகுதியாக உள்ளன. அச்சொற்களையும் அவை உணர்த்தும்.பொருள்களையும் பிங்கலம் முதலாக உள்ள உரிச்சொல் நூற்கள் விவரிக்கின்றன. அப்பனுவல்களைக் கற்று அறிந்து கொள்ள வேண்டும்.

## சொல்லதிகாரத்திற்குப் புறனடை

**சொல்தொறும் இற்றுஇதன் பெற்றி என்று அனைத்தும்**
**முற்று மொழிகுறின் முடிவுஇல ஆதலின்**
**சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும்**
**தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே. (நன் - 461)**

தமிழ் மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் சுட்டிக் காட்டி, இந்தச் சொல் இந்த இலக்கணத்தை உடையது என்று ஒவ்வொரு சொல்லையும் எடுத்து விவரிப்பது இயலாது. ஏனெனில் மொழியில் ஏற்கெனவே உள்ள சொற்கள், புதிதாக உருவாக்கப்படும் சொற்கள் எனச் சொற்களின் எண்ணிக்கை அளவில்லாதது. எனவே இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ள இலக்கண விதிகளை அமைப்பால் ஒப்புமை உடைய ஏனைய சொற்களுக்கும் பொருத்தித் தெளிவாக அறிந்து கொள்ளுதல் அறிஞர்களின் திறன் ஆகும்.

## இந்நூலுக்குப் புறனடை

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே. (நன் - 462)**

முற்காலத்தில் வழங்கிய எழுத்து சொல் தொடர் முதலான இலக்கணங்கள் பிற்காலத்தில் வழங்காமல் மறைதலும் பிற்காலத்தில் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப புதிய இலக்கணங்கள் தோன்றி மொழியில் வழங்குதலும் மொழி வரலாற்றில் குற்றமாக கருதப்படும் இல்லை அந்த காலத்து மொழி வழக்கை ஒட்டி இலக்கணங்கள் உருவாக்கப்படுகின்றன.

## வினாக்கள்:

1. இடைச்சொல்லின் இலக்கணம் கூறி, இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்களை விவரிக்க.
2. ஏகார, ஓகார, உம் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்களை விளக்குக.
3. ஐந்து வகை உயிர்களை விவரி.
4. உயிர்ப்பொருள், உயிரல்லாப் பொருள்களின் குணப்பண்புகளையும் தொழிற்பண்புகளையும் விளக்குக.
5. ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள், பலகுணம் தழுவிய உரிச்சொற்களை சான்றுடன் தொகுத்துரைக்க.